Vol.7, Issue 11 | Annual Subscription ₹ 480
Rotary News, April 2025, Chennai

ஏப்ரல் 2025

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary


Time to partner with
RJ
GARBAGE BANK
குப்பை வங்கி
RJ Garbage Bank has been recognised by
The New Indian Express for their commitment
towards engaging the community towards Zero Garbage
TOTAL CONTRIBUTORS
1291
TOTAL KGs RECOVERED FROM BEING DUMPED IN THE LANDFILLS
8,11,154 Kgs
TOTAL RESPONSIBLE LIVING
CERTIFICATE HOLDERS
292
HOW DO WE PARTNER
WITH RJ GARBAGE BANK?
Gift a RJGB zero garbage kit
for a School/College
Gated community/ULB
DEVI
THE NEW
INDIAN
EXPRESS
Rajavalli Rajiv
For her entrepreneurial spirit
JOIN HANDS WITH US
LEKHA adv/Apr 25/ Rotary/FIW
rj_garbagebank
www.ilovewaste.in
rjgb@idhayam.com
87542 04222
ADVT.

# உள்ளே




12

சென்னை ரோட்டேரியர்களின் பழங்குடியினருக்கான திட்டம்



24

இஸ்தான்புலில் சர்வதேச அமைதி மாநாடு



28

ஜெய்ப்பூர் திஷா மாநாட்டில் DGE-களுக்கு கடினமான இலக்குகள்



40

பெண்களிடம் மாற்றத்தைத் தூண்டுதல்



42

மும்பை ரோட்டேரியன்களின் சேவைகள்



52

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உடைகள் வழங்கும் திறந்த அலமாரி




58

இமயமலையில் போலியோ நோய்த்தடுப்புக்காக ஒரு சாகச பயணம்!


Rotary


A publication of Rotary Global Media Network

சுற்றுச் சூழலைக்காக்க மின்பதிப்புக்கு மாறவும்

**மின்னிதழ் கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து ₹324-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## புத்துணர்ச்சியூட்டும் முகப்புப் பக்கம்




*மார்ச் இதழின் முகப்புப் பக்கம் புத்துணர்ச்சி யூட்டும் வகையில், செல்லோ என்னும் இசைக்கருவி வாசிக்கும் ரோட்டரி அமைதி உறுப்பினர் டியாகோ கார்னீரோவின் படத்துடன் வெளியாகியுள்ளது. ஆசிரியர் குறிப்பில் எழுப்பப்பட்ட கருத்துகள் சிந்தனையைத் தூண்டுகின்றன. உலகெங்கிலும் அமைதி யின்மையும் மோதல்களும் நிறைந்திருக்கும் இந்நேரத்தில், அமைதி கட்டியெழுப்புதல் மற்றும் மோதல் தீர்வு என்ற முக்கியமான கவனம் செலுத்தும் பகுதிகளில் ரோட்டரி அமைதி மையங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. TRF, புனேவில் உள்ள சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்தை தனது ஒன்பதாவது அமைதி மையமாக தேர்ந்தெடுத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. தென் கொரியாவின் கடும் போட்டியைச் சமாளித்து இந்த அரிய சாதனையை நிகழ்த்திய இந்திய ரோட்டரிக்கு வாழ்த்துகள்.*

*முன்னாள் RI தலைவர்கள் ராஜேந்திர சாபூ மற்றும் K R ரவீந்திரன் ஆகியோர் PRIP பில் பாய்ட் (2006–07) அவர்களுக்கு அஞ்சலி செலுத்திய விதமும், தனிப்பட்ட நிகழ்வுகளையும் உரையாடல்களையும் இணைத்து வழங்கியிருந்ததும் படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருந்தது.*

*அந்திரி வேதி, RC ஹைதராபாத் மெகாசிட்டி — D 3150*

*மார்ச் இதழில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த செல்லோ இசை கலைஞர் மற்றும் ரோட்டரி அமைதி உறுப்பினர் டியாகோ கார்னீரோவின் படத்தைப் பார்த்தது மகிழ்ச்சியாக இருந்தது. RI தலைவர் ஸ்டெபனி அர்ச்சிக், டொமினிகன் குடியரசில் நீர் வடிகட்டிகளை நிறுவுவதற்காக சென்றிருந்தபோது ரோட்டரியின் மாயாஜாலத்தை பற்றி விளக்கியுள்ளார். வழக்கம் போல், ஆசிரியர் குறிப்பு கண் திறக்கும் வகையில் இருந்தது, புனேவில் ரோட்டரி அமைதி மையம் அமையவிருக்கும் நேரத்தில் வெளிநாட்டு மாணவர்களின் பாதுகாப்பு குறித்து அது விவாதிக்கிறது.*

*RID அனிருதா ராய்சௌத்ரி சுத்தமான நீரின் முக்கியத்துவத்தையும், WASH போன்ற திட்டங்கள் மூலம் இந்தத் தேவையை பூர்த்தி செய்வதில் ரோட்டரியின் பங்கையும் வலியுறுத்தினார். ஒதுக்கப்பட்ட சமூகங்களில் சுத்தமான நீரைப் பெறுவதற்கு உலகளாவிய மானியங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை அறங்காவலர் குழுவின் தலைவர் மார்க் மலோனி விவரித்துள்ளார்.*

*புனேவில் உள்ள சிம்பயோசிஸ் பல்கலைக்கழகம் ஆசிய அமைதி மையத்தை நடத்தவுள்ளது என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். 'இசைக்கும் இதயங்களுக்கும் இடையே ஒரு பாலம் என்ற தலைப்பிலான முகப்புக் கட்டுரை படிக்கத் தகுந்ததாகவும் ஊக்கமளிப்பதாகவும் உள்ளது. மற்ற அனைத்து கட்டுரைகளும் வாசகர்களுக்கு தகவல்கள் நிறைந்ததாகவும் ஊக்கமளிப்பதாகவும் இருந்தன.*

*பிலிப் முலப்போன் M T*
*RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

நீர், ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத் திற்கான (மார்ச் இதழ்) இந்த நியமிக்கப் பட்ட மாதத்தில் RI தலைவரின் செயல் பாட்டு அழைப்பு, சிறிய முயற்சிகளால் கூட பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

நான் 2016ல் சங்கத்தலைவராக இருந்த போது, பள்ளிகளில் கை கழுவும் நிலையங்களை அமைத்தோம். மேலும், அந்த நிலையத்திற்குப் பின்னால் சுவரில் ஒரு கண்ணாடி யையும் வைத்தோம். இதன் விளைவாக மாணவர்கள் சுத்தமான தோற்றத்தைப் பெற்றனர், அதே நேரத்தில் அவர்களின் ஆரோக்கியமும் சுகாதாரமும் மேம்பட்டது.

R முரளி கிருஷ்ணா
RC பெர்ஹாம்பூர் — D 3262

'கிராமப்புற பள்ளிகளில் டிஜிட்டல் கல்வி' என்ற கட்டுரை தகவல் நிறைந்ததாகவும் குறிப்பிடத்தக்க தாகவும் இருந்தது. இந்த சிறந்த பள்ளித் திட்டத்திற்காக RC இந்தூர் மேகதூத் ரோட்டேரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை நான் பாராட்டுகிறேன்.

S N சண்முகம்
RC பண்ருட்டி — D 2981

### சேலையின் நிலையான அழகு

'சேலையின் காலத்தால் அழியாத நேர்த்தியை கொண்டாடுதல்' (பிப்ரவரி இதழ்) எனும் தனித்துவமான கட்டுரை, சேலையின் செறிந்த பாரம்பரியத்தை சிறப்பாக வெளிப் படுத்துகிறது. சாரி என்ற பெயர் சமஸ்கிருதத்தில் ஒரு துண்டு துணி என்று பொருள்படும் சாடி (Saadi) என்பதிலிருந்து வந்ததாகும். சமஸ்கிருத இலக்கியத்தில் இது சாடிகா எனவும், புத்த இலக்கியத்தில் ஜாதகா எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

டாக்டர் சஞ்சய் அகர்வால்
RC சோலன் — D 3080

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களைப் பற்றிய உங்கள் தலையங்கம் மிகச் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. அவரது அறிவார்ந்த குணங்களையும், கண்ணியமான அரசியல்வாதி (வேகமாக மறைந்து வரும் ஒரு வகை) என்ற பண்பையும் அது வெளிப்படுத்துகிறது. உண்மையான தகவல்களை புரிந்து கொள்ளாமல், பெரும்பாலான படித்த மக்கள் கூட போலி கதைகளால் திசை திருப்பப்படும் இந்த நேரத்தில், இது படிப்பதற்கு நிம்மதியாக இருந்தது.

பாலச்சந்திரா P அத்ரே
RC அவுரங்காபாத் எலைட் — D 3132

'சிந்திக்க வேண்டிய நேரம் என்ற உங்கள் தலையங்கத்தை நான் பாராட்டுகிறேன். இருப்பினும், கல்வி, அனைவரையும் உள்ளடக்குதல் மற்றும் நெருக்கடி மேலாண்மை ஆகியவற்றில் ரோட்டரியின்

முயற்சிகளை எடுத்துக்காட்டுவதன் மூலம், உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் ரோட்டரி ஆற்றும் ஆக்கபூர்வமான பங்கில் அது மேலும் கவனம் செலுத்தியிருந்தால், இன்னும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்று நான் நம்புகிறேன். ரோட்டரி சமூகத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றத்தக்க தாக்கத்தைப் பற்றி அந்த தலையங்கம் இன்னும் கட்டாயமான மற்றும் பொருத்தமான கண்ணோட்டத்தை வழங்கியிருக்கலாம்.

வெங்கடேஷ் M N, RC பெங்களூர் சவுத்வெஸ்ட் — D 3191

நான் ரோட்டரி நியூஸ் மாதந்தோறும் படிக்கிறேன், ஏனெனில் என் மகன் அகமதாபாத்தில் உள்ள ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக உள்ளார்.

மார்ச் இதழில் உள்ள மைல்ஸ் டு ஸ்மைல்ஸ் போன்ற கட்டுரைகள் நல்ல படங்களுடன் சுவாரஸ்யமாக இருந்தன. நான் ரோட்டேரியன் இல்லாவிட்டாலும், ஒரு பட்டயக் கணக்கறிஞர் என்ற முறையில், ஆளுமை மேம்பாடு மற்றும் வரவு செலவுத் திட்டம் குறித்து ரோட்டரி சங்கங்களில் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளேன்.

அஜித் C ஷா, அகமதாபாத்

எல்லா கட்டுரைகளும் பொருத்த மானதாகவும், விறுவிறுப்பான கதை நடையும், சரியான அளவும் கொண்டிருந்தாலும், புத்தக விமர்சனப் பகுதியையும் கடைசிப் பக்கத்தையும் யாரும் படிக்காமல் விடமாட்டார்கள்.

P E ராமகிருஷ்ணன்
RC மெட்ராஸ் ஈஸ்ட் — D 3234

### உலகளாவிய அமைதியை வளர்ப்போம்

ரோட்டரி அமைதி மையங்கள் அமைதி அறிஞர்களை உருவாக்குவதன் மூலம் மிகச் சிறந்த பணியைச் செய்து வருகின்றன. ஆனால் உலகம் முழுவதும் அமைதியின்மை, வன்முறை, மோதல்கள் மற்றும் பேரழிவுகள் நிலவுகின்றன. நாம் செயல்பட வேண்டிய நேரம் இது.

ஒருவேளை நாம் அமைதி கொடிகளுடன் ரோட்டரி தன்னார்வலர் குழுக்களை உருவாக்கி, மோதலில் சிக்கியுள்ள நாடுகளுக்குச் சென்று, சண்டையிடும் தரப்பினரிடம் சண்டையை நிறுத்துமாறும், ஆயுதங்களை கீழே போடுமாறும், உலகத்துடன் நட்பாக இருக்குமாறும் வேண்டுகோள் விடுக்கலாம்.

திருமணங்கள், கூட்டங்கள் அல்லது மாநாடுகள் எதுவாக இருந்தாலும், அனைவருக்கும் முழு கிளாஸ் தண்ணீர் வழங்கப்படுவதற்கு பதிலாக, நாம் அரை கிளாஸ் தண்ணீர் வைக்கலாம், மேலும் யாருக்கு அதிக தண்ணீர் தேவையோ அவர்கள் தேவையான அளவு ஊற்றிக்கொள்ளலாம்.

பிரதாப் கோகுல்தாஸ்
RC கோயம்புத்தூர் வெஸ்ட் — D 3201

## RI உரிமம் இல்லாததால் Rotary India என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்கு RI தடை விதித்துள்ளது

*மார்ச் 31, 2025 முதல், ரோட்டரி இந்தியா லிட்ரசி மிஷன் (RILM) ஆனது இந்தியா லிட்ரசி மிஷன் என்று அழைக்கப்படும். பிப்ரவரி 2025 கூட்டத்தில் RI வாரியம் எடுத்த முடிவைத் தொடர்ந்து இது செயல்படுத்தப்பட்டுள்ளது. மண்டலங்கள் 4, 5, 6 மற்றும் 7-ன் மாவட்ட ஆளுநர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், “Rotary India என்ற பெயரைப் பயன்படுத்த எந்தவொரு தனிநபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் Rotary International உரிமம் வழங்கவில்லை என்பதை வாரியம் குறிப்பிடுகிறது” என RI பொதுச் செயலாளர் ஜான் ஹியுகோ கூறுகிறார்.*

*அதன் பின்னர் அவர் எழுதிய கடிதத்தில், சமீபத்தில் நடந்த RI வாரியக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, “RILM ஆனது மார்ச் 31, 2025க்குப் பிறகு அதன் அச்சிடப்பட்ட அல்லது மின்னணுப் பொருட்கள் எதிலும் அல்லது அதன் செயல்பாடுகளுடன் எந்த வகையிலும் ரோட்டரி சின்னத்தைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்; rotaryteach.org என்ற இணைய முகவரியின் பயன்பாடு மற்றும் அதன் உரிமையை மார்ச் 31, 2025க்குள் RI-க்கு மாற்ற வேண்டும்; உரிமம் நிறுத்தப்பட்டதற்கான அனைத்து விதிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்” என்று கூறியிருந்தார்.*

*கடந்த ஐந்து வருடங்களாக RILM மேற்கொண்ட செயல்பாடுகளை RIக்கு எந்தவித செலவும் இல்லாமல் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தடயவியல் தணிக்கையாளர் அல்லது சுயாதீனமான புலனாய்வாளரை நியமிக்குமாறு RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் மற்றும் RIDE-க்கள் M முருகானந்தம் மற்றும் K P நாகேஷ் ஆகியோரை வாரியம் கேட்டுக்கொண்டுள்ளது.*

*வாரியத்தின் தீர்மானம் மற்றும் RI இயக்குனர்கள் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ராஜு சுப்பிரமணியன் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, முன்பு Rotary India இணையதளம் மற்றும் மொபைல் செயலி ஆகியவை RI மண்டலங்கள் 4, 5, 6 மற்றும் 7 ஆகிய அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி* **RIZones4567.org** *என்று பெயர் மாற்றப்பட்டுள்ளன.*

அட்டையில்: தமிழ்நாட்டில் கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள ஜவ்வாது மலையில் உள்ள ஒரு குக்கிராமத்தில் RID 3234-ன் ரோட்டரி சங்கங்கள் சேவைத் திட்டங்களை செயல்படுத்துகின்றன.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

# RI தலைவரிடமிருந்து...



# புதுப்பித்தல் காலம்

ஒன்டாரியோவில் உள்ள விண்ட்ஸர்-ரோஸ்லாண்ட் ரோட்டரி சங்கம் ஒரு சிறந்த உதாரணம். இதன் உறுப்பினர்கள் வீடற்ற மற்றும் உணவுப் பிரச்னையை எதிர்கொள்ளும் மக்களுக்கு சூடான, சுவையான உணவு வழங்கும் திட்டத்தை ஆதரிக்கிறது. மாலை நேரங்களில், ஃபீட் விண்ட்ஸர்-எஸ்ஸெக்ஸ் நடத்தும் சூப் கடையிலிருந்து தினமும் 130 பேருக்கு காய்கறிகள், இறைச்சி மற்றும் மீன் ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட சூப் (திரவ உணவு) வழங்கப்படுகிறது. சமூக உணர்வு மற்றும் ஊட்டச்சத்து இவற்றின் அடிப்படையில் சேவை செய்து வருகிறது.

சங்கத்தின் உறுப்பினர் மற்றும் PDG-யுமான அருணா கௌசிக், இந்த சூப் ஷாக் கடையைப் பற்றிய செய்திகளைக் கேள்விப்பட்ட பிறகு சங்கத்தை இதில் ஈடுபடுத்தினார். சங்க உறுப்பினர்களுடன் இணைந்து செயல்பட்டு புதிய இடத்தில் சூப் கடையை நிறுவுவதற்காக ஸ்டவ், பானை மற்றும் பாத்திரங்களை வாங்க விரைவாக ஒப்புதல் அளித்தார். அதன் பிறகு, சங்க உறுப்பினர்கள், சூப் கடை குழுவினருடன் புதிய இடத்தை சுற்றிப்பார்த்து இந்த முயற்சிக்கு ஆதரவளிக்க, 3,000 கனடிய டாலர்களுக்கான (சுமார் 2,000 அமெரிக்க டாலர்) காசோலையை வழங்கினர். மேலும் இந்த புதிய வசதி செயலுக்கு வந்தவுடன் உணவு தயாரித்து பரிமாற தங்களது நேரத்தை செலவிட்டு சேவை செய்யவும் அவர்கள் உறுதியளித்தனர்.

சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்யவும், உறவுகளை வளர்க்கவும், உறுதியான தாக்கத்தை ஏற்படுத்தவும் ரோட்டரி உறுப்பினர்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுகிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. சேவைக்கான வாய்ப்புகளைக் கண்டறிந்து, நிதி ஆதாரங்களைத் திரட்டுவது ஆகியவற்றின் மூலம் தேவைப்படுபவர்களுக்கு ஆதரவு அளிப்பது மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் நட்புறவை வலுப்படுத்திக் கொண்டு சமூகத்திற்கு சேவை செய்து வருகிறோம்.

வசந்த காலம் வழங்கும் புதுப்பித்தலை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, விண்ட்ஸர்-ரோஸ்லேண்ட் சங்கம் போல நாமும் உத்வேகம் பெறுவோம். உங்கள் சங்கத்திற்குள் மீண்டும் ஈடுபாட்டை அதிகரிக்க இதுபோன்ற வழிகளையும் கருத்தில் கொள்ளலாம்.

தேவைகளை அடையாளம் காணுங்கள்: உங்கள் சங்கத்தின் ஆதரவு எங்கு மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்துகொள்ள உள்ளூர் அமைப்புகளுடன் தொடர்பில் இருங்கள்.

நிதி ஆதாரங்களை விரைவாக திரட்டுங்கள்: நிதி திரட்டுவது, உபகரணங்களைச் சேகரிப்பது, நேரத்தை செலவிடுவது வரை வளங்களைச் சேகரிக்க உங்கள் சங்கத்தினுள் உறுப்பினர்களின் திறன் மற்றும் தொடர்புகளைப் பயன்படுத்துங்கள்.

ஒத்துழைப்பை பெறுங்கள்: தனிநபர்கள் தங்களின் தனித்துவமான திறமைகளை வழிநடத்துவது ஈடுபாட்டை மேம்படுத்தும் மற்றும் வெற்றிக்கு கொண்டு செல்லும்.

தொடர்ச்சியான ஈடுபாட்டை உறுதிசெய்யுங்கள்: ஆரம்ப பங்களிப்புக்கு அப்பால், தொடர்ச்சியான ஆதரவை உறுதிப்படுத்துங்கள். வழக்கமான சேவை உறுப்பினர்களை இணைக்கவைக்கிறது. மேலும் நிலையான தாக்கத்தை ஏற்படுத்தும் சங்கத்தின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

இந்த அணுகுமுறைகளைப் பின்பற்றினால், சேவை மற்றும் ஈடுபாட்டுக்கான நமது அர்ப்பணிப்பைப் புதுப்பிக்க வசந்த காலத்தின் ஆற்றலைப் பயன்படுத்தலாம். வாழ்க்கையை மாற்றியமைத்தல், நம்பிக்கையை ஏற்படுத்துதல் மற்றும் நாம் சேவை செய்யும் சமூகத்தில் நீடித்த மாற்றத்தை உருவாக்குவது ஆகியவைதான் ரோட்டரியின் மாயாஜாலம்.

**ஸ்டெஃப்னி A அர்ச்சிக்**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்

படம்: கிறிஸ்டின் அம்ப்ரஸ்டர்



# சட்டவிரோத இந்திய குடியேறிகளின் பரிதாப நிலை

பெருமைவாய்ந்த இந்திய குடிமகனான நான், அமெரிக்க அரசாங்கத்தால் கைவிலங்கிடப்பட்டு சங்கிலியால் பிணைக்கப்பட்ட சட்டவிரோத இந்திய குடியேறிகளை விமானத்தில் திருப்பி அனுப்பிய காட்சிகளைக் கண்டு மிகவும் வேதனை அடைந்தேன். நீங்களும் அப்படித்தான் செய்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். பிரதமர் நரேந்திர மோடி, சமீபத்தில் அமெரிக்காவில் கூறியதுபோல், இந்த ஆவணமற்ற இந்தியர்களில் பெரும்பாலானோர் “பெரிய கனவுகளாலும் வாக்குறுதிகளாலும் ஈர்க்கப்பட்டு சென்ற மிக சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.”

எத்தனை இந்தியர்கள் சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியுள்ளனர்? இந்த எண்ணிக்கை மாறுபட்டது மற்றும் குழப்பமானது. ஒருவர் சொல்லும் கணக்கு மற்றவற்றுடன் முரண்பட்டு நிற்கிறது. ஆனால், பி.பி.சி. மேற்கோள் காட்டிய ஒரு உண்மையான ஆதாரம் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சமூக விஞ்ஞானிகளான அப்பி புடிமன் மற்றும் தேவேஷ் கபூர் இருவர் எழுதிய ஆய்வுக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் மக்கள் தொகை, நுழைவு முறைகள், இருப்பிடம் உள்ளிட்டவற்றை ஆராய்ந்து இதை எழுதியுள்ளனர். சட்டவிரோத குடியேறிகளின் எண்ணிக்கை வெவ்வேறு கணக்கீட்டு முறைகளால் மாறுபடும். “பியூ (Pew) ஆராய்ச்சி மையம்” மற்றும் நியூயார்க்கில் உள்ள “இடப்பெயர்வு ஆராய்ச்சி மையம்” 2022 கணக்குப்படி 7 லட்சம் சட்டவிரோத இந்திய குடியேறிகள் இருப்பதாக மதிப்பிட்டுள்ளது. இது மெக்ஸிகோ, எல்சால்வடாருக்குப் பிறகு மூன்றாவது பெரிய குழுவாக இருக்கிறது. ஆனால், இதற்கு நேர்மாறாக இடப்பெயர்வு கொள்கை நிறுவனம் (MPI) இந்த எண்ணிக்கையை 3.75 லட்சம் எனக் கூறுகிறது. மேலும் இது ஐந்தாவது பெரிய குழுவாக உள்ளது. உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையின் அதிகாரப்பூர்வ தரவு 2022-ல் இந்த எண்ணிக்கை 2.2 லட்சம் மட்டுமே என்று கூறுகிறது. ஆனால், எண்ணிக்கைகள் மாறுபட்டாலும் கடந்த காலங்களில் இந்த எண்ணிக்கை குறைந்துள்ளது என்பதில் உடன்பாடு உள்ளது. இதற்கு கோவிட் தொற்றும், சிலர் ஏதோ ஒருவழியில் சட்டப்பூர்வ அந்தஸ்தை பெற்றதுமே காரணமாக சொல்லப்படுகிறது.

முரண்பட்ட எண்ணிக்கைக்கு மத்தியில், இந்த ஆய்வுக் கட்டுரை, பியூ மற்றும் சிஎம்எஸ் குறிப்பிடுகிற அளவுக்கு உயர்ந்த எண்ணிக்கையில் இருக்க வழியில்லை என்கிறது. அதாவது, இந்திய குடியேறிகளில் நான்கு பேரில் ஒருவர் ஆவணங்கள் இல்லாதவர்கள் என்று அர்த்தமாகிறது. இடம்பெயர்வு முறைகளை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் இது சாத்தியமற்றது. இந்திய குடியேறிகள் அமெரிக்காவில் வேகமாக வளர்ந்து வரும் குழுக்களில் ஒன்றாகும். 1990-ல் 6 லட்சமாக இருந்த எண்ணிக்கை 2022-ல் 3.2 மில்லியனாக அதிகரித்துள்ளது. அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்த இந்தியர்கள் எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். சத்ய நாதெள்ளா, சுந்தர் பிச்சை, இந்திரா நூயி என சொல்லிக் கொண்டே போகலாம்.


இந்தியாவின் மக்கள் தொகை 150 கோடியை நெருங்கி வரும் நிலையில், சில லட்சம் மக்கள் என்பது கடலில் விழுந்த சிறு துளிகள் என்று ஒரு சிலர் வாதாடலாம். ஆனால், எண்ணிக்கையைவிட இது பெருமை, கண்ணியம், மரியாதை பற்றியது. தனது நாட்டு மக்கள் குற்றவாளிகளைப் போல கைவிலங்கிட்டு திரும்பியனுப்பப்படுவதை எந்த இந்தியர் பொறுத்துக் கொண்டு இருப்பார்கள்?

ரோட்டரியுடனான தொடர்பு, நாடு முழுவதும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான ரோட்டேரியன்கள் கையில் உள்ளது. ஒரு நிலையான தொழிலில், ஒரு நல்ல வருமானம், பெரும்பாலான மக்கள் வீட்டை விட்டு வெளியேறி வெளிநாட்டுக்கு ஆபத்தான பயணம் மேற்கொள்வதைத் தடுக்க போதுமானது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியா போரினால் பாதிக்கப்பட்ட நாடோ அல்லது மோதல்கள் நிறைந்த பகுதியோ அல்ல. அமெரிக்காவை ஏதோ அற்புதமான உலகமாக நினைத்து சட்டவிரோதமாக அங்கு குடியேற, உயிருக்கு ஆபத்தான வழிகளைத் தேர்ந்தெடுப்பவர்கள் உள்நாட்டில் அதற்கு போதிய வாய்ப்புகள் இருந்தால் அப்படிச் செய்யமாட்டார்கள். தொழில்நுட்பம், உயர்கல்வி, கூரிய அறிவு, செய்யும் வேலையில் கவனம் மற்றும் கடின உழைப்பில் விருப்பம் உள்ளவர்கள் சிறகடித்து பறந்து வெளிநாடுகளில் முன்னேற்றத்துக்கு வித்திடுகிறார்கள். ஆனாலும், நமது சக குடிமக்கள், தங்களை விரும்பாத நாடுகளுக்கு சட்டவிரோதமாக எல்லைகளைக் கடக்க இதுபோன்று ஆபத்தான பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்கும் நாளை எதிர்நோக்குகிறோம்.



ரஷீதா பகத்

Rotary
District 3212



THE MAGIC OF ROTARY

# Project Kalam



*"Dreams convert into thoughts and thoughts convert into actions."*

APJ Abdul Kalam

## STEP 2 SUCCESS

**Size**: 50 (Min) to 500 (Max) | **Duration**: 02.00 Hours | **Medium of Training**: Tamil & English

**Audience**: Government, Government Aided and Private School students

**A Career guidance Program for School Students studying from 9th to 12th Standard**

## OBJECTIVE

Empowering Students to gain essential knowledge, insights, skills, and hands-on experience needed to discover and explore various career pathways aligned with their interests and passions to take career decision.







### Outcome for 9th & 10th Students:

Students often face confusion when choosing their stream in class 11. Typically, their subject choices are influenced by their 10th-grade marks, parental preferences, advice from friends and relatives, Peer Pressures, the family environment, and economic considerations. They were taught to apply SWOT Analysis to choose the subject streamline based on their interests, Talent/Skills & their Personality.

### Outcome for 11th & 12th Students:

To choose the best Career, Students will be guided to explore the following questions:

How to find the available courses?

How to choose the best course?

What are all the entrance exams available?

Is there any scholarship available?

Which College/University to attend?

Which Career Path offers the best Pay?

LEKHA ads/Apr 25/ Rotary/Inner

**No. of Programs completed 90**

**No. of Beneficiaries 22,879**

**Do you want to conduct Project Kalam in your Town/City/District? We are waiting to partner with you.**




Project Coordinator
Rtn.K.C.GURUSAMY
94433 67248

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

Project Chairman
& Lead Speaker
Rtn.Tenzing Paulrajan
63746 44066



ADVT.



# RI இயக்குனர் செய்தி

## நமது முன்னுரிமைகள்: உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரித்தல், அறக்கட்டளையை வலுப்படுத்துதல்

இயற்கை சமநிலையில் செழித்து வளர்கிறது.– சிறிய பூச்சி முதல், உயரமான மரம் வரை ஒவ்வொரு உயிரினமும், சுற்றுச்சூழல் அமைப்போடு இணக்கமாக இருக்கும் ஒரு சொல்லப்படாத குறியீட்டை பின்பற்றுகிறது. பருவங்கள் துல்லியமாக மாறுகின்றன. நதிகள் அதன் பாதையை ஒரு நோக்கத்துடன் உருவாக்குகின்றன. விலங்கினங்கள் உயிர்வாழ்வதற்கு தேவையானவற்றை மட்டுமே எடுத்துக் கொள்கிறது. ஆனாலும், இந்த சிக்கலான ஒழுங்கில், மனித குலம் தனித்து நிற்கிறது. இயற்கையைப் போல் நிலையாக இல்லாமல் நாம் நுகர்கிறோம். செழித்து வளரும் காடுகளைப் போல் அல்லாமல் நாம் தளர்ந்துவிடுகிறோம். நமது தேர்வுகள் தேவையைவிட அதிகமானதாக இருப்பதால் சமநிலையை சீர்குலைத்து, பூமியில் நமது செயல்பாடுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த மாதம், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நாம் கவனம் செலுத்தும் நேரத்தில், நாம் என்ன செய்ய முடியும் என்பதை மட்டுமல்ல, இந்த சமநிலையை மீட்டெடுக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் சிந்திப்போம்.

காலண்டரில் ஆண்டுகள் உருண்டோடும் நிலையில், நாம் மாதங்களை எண்ணுவதிலிருந்து நாட்களை எண்ணுவதற்கு மாறுகிறோம். இந்த “மாயாஜால ஆண்டு” விரைவில் ‘நன்மைக்காக ஒன்று சேர’ தயாராகிறது. புதிய தலைமை தயாராக இருக்கும் அதே நேரத்தில், தற்போதுள்ள குழுவினர் உறுதிமொழிகளை நிறைவேற்ற முன்னோக்கி செல்கின்றனர். ரோட்டரிக்குள் தலைமைத்துவத்தின் தடையற்ற மாற்றம் நமது அமைப்பின் வலிமைக்குச் சான்றாகும். எனக்கு பழமொழி ஒன்று நினைவுக்கு வருகிறது. “வயதானவர்கள் மரங்களை நடும்போது இது நமக்கு நிழல் தராது என்று தெரிந்தும் சமூகத்துக்கு பயன்படும் என்றே கருதிச் செய்வார்களாம்.

120 ஆண்டுகளாக, ரோட்டரி உலகம் முழுவதும் மாயாஜாலங்களை நிகழ்த்தி வருகிறது. இப்போது ரோட்டரிக்காக மாயாஜாலத்தை உருவாக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. நமக்கு நிறைய கொடுத்த ரோட்டரியை நாம் பலப்படுத்த வேண்டும். அதற்கு இரண்டு முன்னுரிமைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும். ஒன்று உறுப்பினர்கள் சேர்க்கையை அதிகரிப்பது மற்றொன்று அறக்கட்டளையின் எதிர்காலத்தை வலுப்படுத்துவது. $2.025 பில்லியன் என்னும் அறக்கட்டளை நிதி இலக்கை அடைவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். ஆனால், இலக்கை எட்டாமல் நமது பணி நிறைவடையாது. இது நிதி திரட்டுவதற்கும், ஊக்கப்படுத்துவதற்கும், முன்மாதிரியாக திகழ்வதற்கும் சரியான நேரமாகும். உண்மையில் தாராளமனப்பான்மை என்பது கொடுப்பதில் மட்டுமல்ல, மற்றவர்களிடமும் கொடுக்கும் மனப்பான்மையைத் தூண்டுவதாகும். “பணத்தால் பொருளை வாங்கக்கூடியவற்றுக்கு பணத்தை செலவழியுங்கள். பணத்தால் வாங்கமுடியாத விஷயங்களுக்கு உங்கள் நேரத்தை செலவிடுங்கள்” என்று ஒருமுறை நான் படித்து தெரிந்துகொண்டேன்.

ஒருவருடம் ஏறக்குறைய முடிவடைந்து மற்றொரு வருடம் நெருங்கி வரும் இந்த வேளையில், இன்றைய உலகிற்கு அல்ல, எதிர்கால சந்ததியினருக்காக அவர்களது வளமான வாழ்க்கைக்கான கட்டமைப்பை உருவாக்க மன உறுதியுடன் செயல்படுபவர்களுக்கு நாம் துணைநிற்போம். சேவைகள், தாராளமனப்பான்மை அல்லது எளிமையான செயல்கள் மூலம் மற்றவர்களை நம்வசப்படுத்துவோம்.

நாம் செயல்படவேண்டிய தருணம் இது. நமது முயற்சிகளின் உண்மையான அளவீடு அங்கீகாரத்தில் இல்லை, ஆனால், நாம் விட்டுச் செல்லும் சிறந்த உலகில் இருக்கிறது.

**ராஜு சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25

2025
மாநாடு

# தனிப்பட்ட சிறப்பு பயிற்சி வகுப்பு



RI மாநாட்டின் மிகவும் எதிர் பார்க்கப்படும் பகுதிகளில் ஒன்று கருத்தரங்கிற்கு இடையில் நடைபெறும் கலந்துரையாடல் அல்லது விவாதம். திட்டங்களை எப்படி மேம்படுத்துவது என்பது குறித்தான உங்களின் உயரிய சிந்தனைகளை இங்கு வெளிப்படுத்தலாம். சிறிய குழு அமர்வுகள் மாநாட்டில் கற்றல் அனுபவங்களை ஏற்படுத்துகிறது. மேலும் கல்காரி மாநாட்டில் தலைப்புகள் உத்வேகத் துடனும், புதுமையாகவும் விவாதிக்கப்படவுள்ளன.

திட்டமுடிவுகளை மேம்படுத்தவும் சங்க நடவடிக்கைகளில் வேடிக்கையை புகுத்தவும் செயற்கை நுண்ணறிவை பொறுப்புடன் பயன்படுத்த கற்றுக்கொள்ளுங்கள். நேரடியான கலந்துரையாடல்களில் மாறுபட்ட கலாசாரங்களில் மூழ்கிவிடுங்கள். கருத்துவேறுபாடுகள் தலைவர்களை எவ்வாறு ஆழமாக பாதிக்கின்றன என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுங்கள். படவிளக்கத்துடன் கதை சொல்லும் முறையின் ரகசியங்களை கண்டறியுங்கள். செயல் பாட்டை ஊக்குவிக்க மக்களிடம் தங்களின் அன்றாட அனுபவங்களை குரலுடன் புகைப்படமாக பதிவு செய்யச் சொல்லுங்கள்.

உங்கள் சங்கம் மற்றும் அதன் திட்டங்கள் குறித்து 70-க்கும் மேலான கலந்துரையாடல் நிகழ்வுகளை நடத்தி அதில் தெரிவிக்கப் படும் யோசனைகளை கருத்தில் கொள்ளுங்கள். உதாரணமாக அமைதியை கட்டமைப்பதற்கான முன்முயற்சிகளையும், அதை விரிவுபடுத்துவதால் ஏற்படும் நன்மைகளையும் ஆராயுங்கள். சமூக மேம்பாட்டு மானியங்களுடன் TRF-ஐ எப்படி செயல்படவைக்கிறார்கள் என்பதை ரோட்ராக்டர்களிடமும், இளம் ரோட்டேரியன்களிடமும் கேளுங்கள். புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொள்ளுங்கள். இளம் தலைவர்களையும் மாறுபட்ட சிந்தனை கொண்ட உறுப்பினர்களையும் தக்கவைக்கும் வழிகளைத் தெரிந்துகொள்ளுங்கள். தலைமுறைகளுக்கு இடையிலான இடைவெளியை பரிசீலியுங்கள், உணர்ச்சி பூர்வமான அறிவையும், சர்வதேச தொடர்புகளையும் எவ்வாறு பயன் படுத்துவது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

மேலும் விவரங்களுக்கு
***convention.rotary.org*** காண்க

## Rotary at a glance

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Rotary clubs | : | 36,512 | Rotary members | : | 1,162,954 |
| Rotaract clubs | : | 9,314 | Rotaract members | : | 131,119 |
| Interact clubs | : | 13,363 | Interact members | : | 376,464 |
| RCCs | : | 13,870 | | | |

*As on March 18, 2025*


**ஆளுநர் குழு**

RID 2981 பாஸ்கரன் S
RID 2982 சிவகுமார் V
RID 3000 ராஜா கோவிந்தசாமி R
RID 3011 மகேஷ் திரிகா
RID 3012 பிரசாந்த் ராஜ் ஷர்மா
RID 3020 வெங்கடேஸ்வர ராவ் M
RID 3030 ராஜீந்தர் சிங் குரானா
RID 3040 அனீஷ் மலிக்
RID 3053 ராகுல் ஸ்ரீவஸ்தவா
RID 3055 மோகன் பராஷர்
RID 3056 ராக்கி குப்தா
RID 3060 துஷார் ஷா
RID 3070 பர்மிந்தர் சிங் குரோவர்
RID 3080 ராஜ்பால் சிங்
RID 3090 சந்தீப் சௌஹான்
RID 3100 தீபா கண்ணா
RID 3110 நீரவ் நிமேஷ் அகர்வால்
RID 3120 பரிதோஷ் பஜாஜ்
RID 3131 ஷீத்தல் ஷரத் ஷா
RID 3132 சுரேஷ் ஹேரலால் சாபூ
RID 3141 சேட்டன் தேசாய்
RID 3142 தினேஷ் மேத்தா
RID 3150 சரத் சௌத்ரி கட்ராகட்டா
RID 3160 சாது கோபால கிருஷ்ணா
RID 3170 சரத் பாய்
RID 3181 விக்ரம்தத்தா
RID 3182 தேவ் ஆனந்த்
RID 3191 சதீஷ் மாதவன்
RID 3192 மகாதேவ பிரசாத் N S
RID 3201 சுந்தரவடிவேலு N
RID 3203 சுரேஷ் பாபு S
RID 3204 சந்தோஷ் ஸ்ரீதர்
RID 3211 சுதி ஜப்பார்
RID 3212 மீரான் கான் சலீம்
RID 3231 ராஜன்பாபு M
RID 3233 மகாவீர் போத்ரா
RID 3234 சரவணன் N S
RID 3240 சுக்மிந்தர் சிங்
RID 3250 பிபின் சாச்சன்
RID 3261 அகில் மிஸ்ரா
RID 3262 யக்ஞன்சிஸ் மோஹாபத்ரா
RID 3291 கிருஷ்ணேந்து குப்தா



அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| T N ராஜு சுப்ரமணியன் RI இயக்குனர் மற்றும் RNT தலைவர் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி RI இயக்குனர் | RID 3291 |
| Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**RI Directors-elect**

| | |
|---|---|
| முருகானந்தம் M | RID 3000 |
| நாகேஷ் K P | RID 3191 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2024–25)

| | |
|---|---|
| மகாதேவ பிரசாத் N S தலைவர், ஆளுநர் குழு | RID 3192 |
| அகில் மிஸ்ரா செயலாளர், ஆளுநர் குழு | RID 3261 |
| ராஜா கோவிந்தசாமி R பொருளாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| ராக்கி குப்தா ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3056 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF தலைவரிடமிருந்து...**



# நிலையான மேலாண்மை

நீர்வழிப்பாதைகள் பாதுகாப்பு, மரங்கள் நடுதல் மற்றும் மாசுபடுதலைக் குறைத்தல் என பல்வேறு சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ரோட்டரி உறுப்பினர்கள் ஏற்கெனவே ஈடுபட்டு வருகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். நமது பணிகளில் சுற்றுச்சூழல் மேலாண்மை என்பது முக்கியமானது. 2019–20-ம் ஆண்டில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் என்ற முறையில், பல ஆண்டு விவாதத்திற்குப் பிறகு, ரோட்டரி உறுப்பினர்களின் ஆதரவுடன் கவனம் செலுத்தும் பகுதியாக சுற்றுச்சூழலைச் சேர்க்க முன்மொழிந்தவன் என்கிற முறையில் நான் பெருமைப்படுகிறேன்.

அந்த சேர்க்கை சாத்தியமானது குறித்து நான் இன்னும் பெருமைப் படுகிறேன். 2021-ம் ஆண்டு ஜூலை 1-ம் தேதி முதல், உலகளாவிய மானியங்களால் ஆதரிக்கப்படும் ரோட்டரி சங்கங்கள் மற்றும் மாவட்டங்கள், நமது கிரகத்தின் வளங்களைப் பாதுகாக்க தங்கள் பணியை விரிவுபடுத்தியுள்ளன. சதுப்பு நிலங்களை மீட்டெடுப்பது, வனங்களைப் பாதுகாப்பது மற்றும் பவளப்பாறைகளை உருவாக்குவது உள்ளிட்ட பணிகள் இதில் அடங்கும்.

இந்த மானியங்கள் முடிவற்ற சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ளன. நான் உங்களை கனவுகாண அழைக்கிறேன். PRIP D K லீ, RIPN சங்கூ யுன் மற்றும் கொரிய ரோட்டரி உறுப்பினர்கள் முன்னெடுத்துவரும் “கீப் மங்கோலியா கிரீன்” திட்ட முன்முயற்சிகளிலிருந்து உத்வேகம் பெறுங்கள். கோபி பாலைவனத்தில் உருவாகும் தூசிப் புயல்களை எதிர்த்துப் போராடி மங்கோலியாவில் மிகப்பெரிய பகுதியை பசுமை மண்டலமாக உருவாக்கும் திட்டம் இது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்தில் கூட்டாண்மை வைத்து செயல்படுவதில் நான் பெருமைப்படுகிறேன். இது ரோட்டரி உறுப்பினர்கள் நதிகளை சுத்தம் செய்தல், பிளாஸ்டிக் கழிவுகளை குறைத்தல், சர்வதேச அளவில் வளங்களைப் பெருக்குதல் மற்றும் நிபுணத்துவத்தை பயன்படுத்துதல் உள்ளிட்ட திட்டங்களைச் செயல்படுத்த அதிகாரமளிக்கிறது.

“சுற்றுச்சூழல் மேலாண்மை” என்பது எனது மனைவி கே மற்றும் எனக்கும் தனிப்பட்டது. அதனால் தான் அறக்கட்டளையில் எங்கள் பெயரில் அறக்கட்டளை நிதியம் ஏற்படுத்தியுள்ளோம். வருங்கால தலைமுறையினர் இத்திட்டத்திற்கு தேவையான வளங்களைப் பெறுவதை இது உறுதிசெய்கிறது.

ஏப்ரல் மாதத்தை சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாதமாக நாம் கொண்டாடும் வேளையில், ரோட்டரியின் புதிய சேவைத் திட்ட மையத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டத்துக்கான யோசனைகளை ஆராயுங்கள். ஏற்கெனவே உள்ள முன்முயற்சிகளில் கலந்துகொள்ளுங்கள் அல்லது TRF-க்கு நன்கொடை மூலம் ஆதரவு தெரிவியுங்கள். ரோட்டரிக்கும், ரோட்டரி அறக்கட்டளைக்கும் நீங்கள் செய்துவரும் உதவிக்காக எப்போதும் போல நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

**மார்க் மலோனி**
TRF அறங்காவலர் தலைவர்

Rotary PEOPLE OF ACTION

# பழங்குடியினருக்கு பெரிய திட்டத்தை செயல்படுத்தும் சென்னை ரோட்டேரியர்கள்

ரஷீதா பகத்



கிராம மக்களுடன் ரோட்டரியன்கள் V இருளாண்டி, S சாய்சேஷன் மற்றும் S சேஷாத்ரி ஜமுனாமரத்தூர் கிராமத்தில்.




உங்கள் வீட்டு நீர் தொட்டியை நிரப்புவதற்கு மோட்டாரை இயக்க போதுமான மின்னழுத்தத்தைப் பெற, உங்கள் வீட்டில் உள்ள அனைத்து விளக்குகளையும் மின்விசிறிகளையும் அணைக்க வேண்டிய சூழ்நிலையை கற்பனை செய்து பாருங்கள். மின்சாரம் சீரற்றதாகவும் போதுமானதாகவும் இல்லாததால், இந்த பகுதியில் பல வீடுகளில் நீர் தொட்டிகள் அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான கிராமங்களில் மின்சாரம் இருந்தாலும், அது ஒற்றை கட்டம் (சிங்கிள் ஃபேஸ்) மின்சாரமாகவே உள்ளது. மின்வெட்டுகள் மற்றும் குறைந்த மின்னழுத்தம் காரணமாக அதன் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக உள்ளது. மேலும், மழைக்காலங்களில் மின்சாரம் தடைபட்டால், நிலப்பரப்பு சேறும் சகதியுமாக மாறி, மிகவும் கடினமாக இருப்பதால், பல நாட்களுக்கு மின்சாரம் சீரமைக்கப்படாது.

நாம் பேசுவது தமிழ்நாட்டின் ஜவ்வாது மலைகளில் உள்ள கிராமங்களைப் பற்றி, இது கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் விரிவாக்கமாகும், இந்த பழங்குடியினர் வாழும் மலைகளின் பல பகுதிகள் 3,800 அடி உயரத்தை எட்டுகின்றன, இது சென்னையிலிருந்து 250 கி.மீ தொலைவில் மட்டுமே உள்ளது, ஆனால் சமூக நலத்திட்டங்களை செயல்படுத்த மிகவும் சவாலான

மலைப்பாங்கான நிலப்பரப்பை கொண்டுள்ளது. இந்த கடினமான பகுதியில், சென்னையிலிருந்து ஒரு ரோட்டேரியர்கள் குழு, வாழ்க்கை, வாழ்வாதாரம், ஊட்டச்சத்து அளவுகள் மற்றும் குழந்தைகளின் கல்வி ஆகியவற்றை மேம்படுத்தவும் மற்றும் வீட்டு உபயோகம் மற்றும் குடிநீருக்கு தண்ணீர் எளிதாக கிடைப்பதை உறுதிசெய்யும் ஒரு திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

கண்களுக்கு விருந்தளிக்கும் பசுமையான இந்த மலைப்பகுதியில் சுமார் 100,000 பழங்குடி மக்கள் வசித்து வருகின்றனர். 150 சதுர கிலோமீட்டர் சுற்றளவில் 11 பஞ்சாயத்துகள் மற்றும் 229 கிராமங்கள் உள்ளன. இந்த மலைகள் நல்ல மழையைப் பெறுகின்றன, ஆனால் மலைப்பாங்கான நிலப்பரப்பு காரணமாக பெரிய அளவிலான நீர் பாதுகாப்பு முயற்சிகள் இல்லாததால் பெரும்பாலான நீர் வடிந்துவிடுகிறது. பழங்குடி பெண்கள் தங்கள் வீடுகளில் இருந்து மேலே அல்லது கீழே உள்ள நீர் மூலத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதில் பெரும் சவாலை எதிர்கொள்கின்றனர். சரியான சாலை இணைப்பு இல்லாததாலும், பெரிய கிராமங்களில் மட்டுமே பள்ளிகள் இருப்பதாலும், குழந்தைகளுக்கு அடிப்படை கல்வி கூட ஒரு சவாலாக உள்ளது.

சுருக்கமாகச் சொல்வதானால், ஜவ்வாது மலைகளில் போராடும் பழங்குடியினரின் சமூக பொருளாதார நிலை, அப்போதைய RI மாவட்டம் 3232-ல் உள்ள சில ரோட்டேரியர்களுக்கு இடையே ஒரு வலுவான கூட்டாண்மையை உருவாக்கியுள்ளது, இது சங்கங்களைத் தாண்டி, இதுவரை ரூ.1.3 கோடி செலவிடப்பட்ட ஒரு மெகா திட்டத்திற்கு வழிவகுத்தது. 2023 மார்ச்சில், ஜவ்வாது மலைகளில் உள்ள பழங்குடியினரின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன், RC சென்னை மித்ராவின் முன்னாள் தலைவர் S சாய்சேஷன், ஓய்வுபெற்ற இந்திய வன சேவை அதிகாரி V இருளாண்டி மற்றும் இலாப நோக்கற்ற ஆராய்ச்சி அமைப்பான IFTR (பழங்குடி மற்றும் எல்லைப்புற ஆராய்ச்சி மையம்) செயலாளர் S சேஷாத்ரி ஆகியோரைக் கொண்ட மூன்று பேர் குழு ஆய்வு நடத்தியது. உதவித் தேவைப்படும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான வளர்ச்சி தலையீடுகளுக்கு நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை விரைவுபடுத்த IFTR இலக்கு வைத்திருந்ததால் ரோட்டரி IFTR உடன் இணைந்து செயல்பட்டது.

முதல் கட்டமாக, கள நிலவரங்களை மதிப்பிடுவதற்கும், சாத்தியமான தலையீடுகளை மேற்கொள்வதற்கான வளர்ச்சி செயல்பாட்டில் உள்ள இடைவெளிகளை அடையாளம் காண்பதற்கும் குழு ஜவ்வாது மலைகளுக்குச் சென்றது. ஜமுனாமரத்தூர், போளூர் மற்றும் மேல்பாட்டு மலைத்தொடர்களில் உள்ள சில குக்கிராமங்களுக்கு குழு சென்று பழங்குடியினருடன் கலந்துரையாடியது. வனத்துறை மற்றும் தமிழ்நாடு கல்வித்துறையால் நடத்தப்படும் பள்ளிகளுக்கும் ரோட்டேரியர்கள் சென்றனர்.



## திட்டத்தின் தோற்றம்



*RC சென்னை கிரீன் சிட்டி உறுப்பினர் மற்றும் ஓய்வு பெற்ற IFS அதிகாரி V இருளாண்டி மற்றும் RC சென்னை மித்ரா முன்னாள் தலைவர் சாய்சேஷன் கிராம மக்களுடன்.*

*இந்த திட்டத்தின் தோற்றம் பற்றி கேட்டபோது, "நான் பழங்குடியினருக்கு ஏதாவது செய்ய விரும்பினேன், அந்த நேரத்தில் நான் ஓய்வுபெற்ற IFS அதிகாரியான இருளாண்டியை சந்தித்தேன். அவர் வனத்துறையில் உயர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றதால், அவர் அழைக்கும் போது மக்கள் பதிலளிக்கிறார்கள், அந்த பகுதியில் உள்ளூர் மக்களின் ஆதரவு இல்லாமல் நீங்கள் அதிகம் செய்ய முடியாது. தொலைதூர கிராமங்களுக்கு எங்களை அழைத்துச் செல்ல அவர் தனது வனத்துறை தொடர்புகளைப் பயன்படுத்தினார்" என சாய்சேஷன் கூறுகிறார்.*

*அப்படித்தான் ஆரம்ப கிராமங்கள் அடையாளம் காணப் பட்டன, அதன் பிறகு, திட்டக்குழு ஒரு இளம் தோட்டக் கலை பட்டதாரியை மாதம் ரூ.10,000 சம்பளத்தில் தங்களுடன் பணியாற்ற அடையாளம் கண்டது, இது IFTR-ல் செலுத்தப்படுகிறது.*

*எதிர்காலத் திட்டங்களைப் பொறுத்தவரை, இப்போது குழு ஒரு டிஜிட்டல் மையத்தை நிறுவ விரும்புகிறது, "அவர்களின் தொழில்நுட்பம் மற்றும் கற்றலுக்கான தொழில்நுட்ப கருவிகள் பற்றிய வெளிப்பாடு மிகவும் குறைவாக இருப்பதால். ஜமுனா மரத்தூரில் ஒரு ஸ்டெம் ஆய்வகத்தை நிறுவ அவர் உதவ முடியுமா என்று பார்க்க நாங்கள் IIT-மெட்ராஸில் உள்ள ஒரு பேராசிரியரிடம் பேசியுள்ளோம். ஜமுனாமரத்தூர் மிகவும் தொலைவில் இல்லை மற்றும் தேவையான இணைய இணைப்பு உள்ள ஒரே இடம். சில நேரங்களில் நாங்கள் உள்ளே சென்றால் எங்களை கூட தொடர்பு கொள்ள முடியாது" என்று அவர் புன்னகைக்கிறார்.*

இந்த ஆரம்ப கள விஜய ஆய்வின் அடிப்படையில், IDEAL ஜவ்வாது (உள்கட்டமைப்பு மேம்பாடு, சுற்றுச்சூழல், ஆற்றல் மற்றும் கல்வி, விவசாயம், வாழ்வாதாரம்) திட்டம் தொடங்கப்பட்டது, IFTR அமலாக்க முகமையாகவும், சென்னை மித்ரா மற்றும் ஆலந்தூர் ரோட்டரி சங்கங்கள் செயல்பாடு சங்கங்களாகவும் செயல்பட்டன.

இந்த முயற்சியின் CSR பங்குதாரர் ஜமுனாமரத்தூரில் உள்ள AMM முருகப்பா செட்டியார் ஆராய்ச்சி மையம் (MCRC) ஆகும், வனத்துறை ஒரு முக்கியமான பங்குதாரராக உள்ளது. இருளாண்டி வனத்துறையின் மூத்த அதிகாரியாக ஓய்வு பெற்றதால், வனத்துறை அதிகாரிகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறுவது அவருக்கு எளிதாக இருந்தது என்று சாய்ஷேஷன் விளக்குகிறார். "இந்த சந்திப்பு பல்வேறு நடவடிக்கைகளைத் தூண்டியது, மேலும் IDEAL ஜவ்வாது இப்போது RID 3234-ன் (3232 பிரிக்கப்பட்ட பிறகு) ஒரு மைல்கல் திட்டமாகும், மேலும் இப்போது செயல்பாட்டு சங்கங்கள் RC சென்னை மித்ரா மற்றும் சென்னை கிரீன் சிட்டி ஆகும்" என்று RC சென்னையின் முன்னாள் தலைவர் சாய்சேஷன் கூறுகிறார். இருளாண்டி இப்போது RC சென்னை கிரீன் சிட்டியில் இணைந்துள்ளார், மேலும் IFTR இன் முக்கிய ஒருங்கிணைப்பாளர் S சேஷாத்ரி, RC சென்னை அக்ஷயாவின் உறுப்பினர் ஆவார். இந்த திட்டம் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக நடந்து வருகிறது.

### நீர் மேலாண்மை

நல்ல மழை பொழிவைப் பெற போதுமான உயரம் இருந்த போதிலும், உயரமான பகுதிகள் பசுமையாக இருந்தாலும், சேமிப்பு வசதிகள் இல்லாததால் கோடை மாதங்கள் வறண்ட பகுதியைப் போலவே இருக்கும் என அவர் விளக்குகிறார். இங்கு விவசாயம்

முக்கிய தொழிலாகும், மேலும் பெரும்பாலான மக்கள் சிறு அல்லது குறு விவசாயிகளாக வகைப்படுத்தப்படலாம். ஆண்டு முழுவதும் நீர் அணுகல் குறைவாக இருப்பதால், “அவர்களுக்கு நல்ல விளைச்சல் கிடைப்பதில்லை. எனவே, காபி, தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்ய கேரளா மற்றும் கர்நாடகா உட்பட பல்வேறு இடங்களுக்கு தொழிலாளர்களாக பலர் செல்கின்றனர்.”

குறிப்பாக கோடை மாதங்களில் நீர் பற்றாக்குறை, மோசமான சுகாதாரத்திற்கு வழிவகுத்து உள்ளூர் மக்களின் ஆரோக்கியத்தை பாதிக்கிறது. தொலைதூர அடைய முடியாத இடங்கள், சுகாதாரப் பாதுகாப்பின்மை மற்றும் மோசமான போக்குவரத்து வசதிகளுடன் இணைந்து, அதிக நோய் விகிதங்கள் மற்றும் குறைந்த ஆயுட்காலத்திற்கு வழிவகுக்கிறது.

ரோட்டேரியர்கள் விரைவில் தண்ணீர் பிரச்சனையை கையில் எடுத்து, பெண்கள் தண்ணீர் கொண்டு வருவதற்காக கடினமான பயணத்தை மேற்கொள்வதை தவிர்க்க உதவினர். பெரிய வீடுகளில் சொந்த கிணறுகள் இருந்தாலும், சிறிய வீடுகளும் பண்ணைகளும் பொதுவான கிராம கிணறுகளை பகிர்ந்து கொள்கின்றன. கிராம மக்களுக்கு உதவ, சூரிய சக்தியில் இயங்கும் பம்புகள் வழங்கப்பட்டன, அவை குக்கிராமத்திற்கு அருகில் வைக்கப்பட்ட சிறிய தொட்டிகளுடன் இணைக்கப்பட்டன. பெரிய தொட்டியில் பம்ப் செய்யப்பட்ட நீர் சுத்தம் செய்யவும் குளிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது, அதே நேரத்தில் சிறிய தொட்டிகள் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் வடிகட்டப்பட்ட நீரை வழங்குகின்றன. இரண்டு தொட்டிகளுக்கு இடையில் வைக்கப்பட்டுள்ள டாடா ஸ்வச் வடிகட்டிகள் மூலம் வடிகட்டப்படுகிறது. இது 15 கிராமங்களில் செய்யப்பட்டு, பெண்களுக்கு ஒரு பெரிய உதவியாக உள்ளது.

அடுத்து தடுப்பணைகள் திட்டப்பணியில் உள்ளது; இவை மலைப்பாங்கான நிலப்பரப்பில் செயல்படுமா மற்றும் இந்த அம்சத்தை எவ்வாறு மேற்கொள்வது என்பதை உறுதிப்படுத்த அண்ணா மற்றும் மெட்ராஸ் பல்கலைக்கழகங்களில் உள்ள நீர்











**மேலே:** *பெண்களுக்கு சோலார் விளக்குகள் விநியோகிக்கப்படுகின்றன.*

**இடது:** *ஜமுனாமரத்தூர் கிராமத்தில் டிஜிட்டல் பயிற்சி மையம் அமைக்க வனத்துறை மற்றும் AT & T ஊழியர்களுடன் ரோட்டேரியன்கள் மடிக்கணினிகளை வழங்குகிறார்கள்.*

மேலாண்மை நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. "அவர்கள் ஆர்வமாக இருந்தால், நாங்கள் அவர்களை அந்த பகுதிக்கு அழைத்துச் சென்று என்ன செய்யமுடியும் என்று பார்ப்போம்."

### கல்வி

இங்குள்ள பழங்குடியினரில் கணிசமான சதவீதம் இன்னும் கல்வியறிவற்றவர்களாகவே உள்ளனர், இருப்பினும் சில இளைஞர்கள் பட்டம் பெற்றுள்ளனர், சிலர் முதுகலைப் படிப்பையும் முடித்துள்ளனர். முக்கிய கிராமங்கள் அல்லது குக்கிராமங்கள் தார் சாலைகள் மூலம் அணுகக்கூடியதாக இருந்தாலும், பல இன்னும் மண் சாலைகளை மட்டுமே கொண்டுள்ளன, அவற்றை இரு சக்கர வாகனங்கள் அல்லது நடைப்பயணம் மூலம் மட்டுமே அணுக முடியும். பல குக்கிராமங்களில் சொந்த பள்ளிகள் இல்லாததால் குழந்தைகள் வனத்துறையால் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிகளை அடைய சுமார் 5 கி.மீ தூரம் நடக்க வேண்டியுள்ளது. தினசரி காலை உணவு மற்றும் மதிய உணவு வழங்கப்படுவதால், பள்ளிகளில் மாணவர் சேர்க்கை சீராக அதிகரித்து வருகிறது.

"ஆனால் தொலைவு காரணமாகவும் இளங்கலை பட்டப்படிப்புகளை முடித்த பிறகும் வேலைவாய்ப்புகள் குறைவாக இருப்பதாலும், தங்கள் குழந்தைகளை உயர்கல்விக்காக அனுப்புவதில் நம்பிக்கை மக்களுக்கு

குறைவாக உள்ளது, குறிப்பாக பெண் குழந்தைகளின் விஷயத்தில். பெரும்பாலானோர் 8-ம் வகுப்பு வரை மட்டுமே படிக்கின்றனர், ஏனெனில் பெரும்பாலான வனத்துறை நடத்தும் பள்ளிகள் 8-ம் வகுப்பு வரை மட்டுமே உள்ளன. மேல்நிலைப் பள்ளிகள் இன்னும் தொலைவில் உள்ளன, மேலும் பெற்றோர்கள் பெண் குழந்தைகளை நீண்ட தூரம் நடந்து செல்ல அனுமதிக்கத் தயாராக இல்லை."

பள்ளிகள் இல்லாத கிராமங்களில் பெற்றோர்களிடையே அடிப்படை கல்விக்கான தாகம் அதிகமாக உள்ளது, அந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வனத்துறை பள்ளிகள் இருக்கும் கிராமங்களுக்கு அழைத்துச் சென்று வாரத்தின் ஐந்து நாட்களுக்கு அங்கு விட்டுச் செல்கின்றனர். வார இறுதியில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் மீண்டும் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறார்கள், திங்கட்கிழமை மீண்டும் அதே நடைமுறை தொடர்கிறது.

குழந்தைகளுடன் உரையாடும் போது, இந்த மலைப்பாங்கான நிலப்பரப்பிற்கு வெளியே உலகம் எப்படி இருக்கிறது என்பது பற்றி குழந்தைகளுக்கு அதிக அறிவு இல்லை என்பதை ரோட்டேரியர்கள் கண்டறிகின்றனர். உங்கள் படிப்பை முடித்த பிறகு நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள் என்று குழந்தைகளிடம் கேட்டால், அவர்கள் அரசாங்கம் அல்லது காவல்துறை(வகைப்பாடு அல்லது பதவி இல்லாமல்) என்று கூறுகிறார்கள்.

கணினிகள் மூலம் கற்பதை மறந்துவிடுங்கள், பெரும்பாலான பள்ளிகளில் தொலைகாட்சி கூட இல்லை. சில பள்ளிகளில் அரசாங்கம் டிவிகளை வழங்கியுள்ளது; "ஸ்மார்ட் டிவிகள் கிடைக்கும் இடங்களில், தொழில்நுட்பத்தின் மூலம் கற்றலை ஊக்குவிக்கிறோம்."

பள்ளிகளுக்கு செல்லும் வசதியை மேம்படுத்த, குறிப்பாக பெண்களுக்கு, சாலை இணைப்பை மேம்படுத்த ரோட்டேரியர்கள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர். 8-ம் வகுப்புக்குப் பிறகு பெண்களை பள்ளியிலிருந்து வெளியேற்றும் நிகழ்வின் ஒரு விளைவு என்னவென்றால், பெற்றோர்கள் தங்கள் மகள்களுக்கு திருமணம் செய்து வைக்க அவசரப்படுகிறார்கள். பள்ளிகள் வெகு தொலைவில் இருப்பதன் மற்றொரு பிரச்சனை என்னவென்றால், ஆசிரியர்கள் அடிக்கடி பள்ளிக்கு வருவதில்லை, இது கல்வியின் தரத்தை மேலும் மோசமடையச் செய்கிறது.

ஐந்து நாட்கள் கிட்டத்தட்ட உறைவிடப் பள்ளிகளில் குழந்தைகள் தங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் போது – அவர்கள் சலிப்படைகிறார்கள் என்று சாய்சேஷன் விளக்குகிறார். எனவே அவர்களின் மாலை நேரத்தை சுவாரஸ்யமாக்க, "நான்கு இடங்களில் ஸ்மார்ட் டிவிகளை வழங்கியுள்ளோம், மற்ற இடங்களில் சதுரங்கம் மற்றும் கேரம் போர்டுகளை வழங்கியுள்ளோம்" சதுரங்கம் மற்றும் கேரம் பலகைகளுக்கு RC சென்னை ஜெம்ஸ் உறுப்பினர் A ராஜசேகரன் நிதியுதவி அளித்தார். குடிநீர் பிரச்சனை இருந்த ஒரு பள்ளியில், தண்ணீர் தொட்டி மற்றும் சூரிய சக்தியில் இயங்கும் பம்பு நிறுவப்பட்டது.

மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்கும் என்று அவர் மேலும் கூறுகிறார்; "நம்மால் சாலைகள் அமைக்க முடியாது, எனவே உயர்மட்ட அரசு அதிகாரிகளை அணுகியுள்ளோம். நம்மால் முடிந்ததைச் செய்கிறோம், ஆனால் ஒவ்வொரு நிலையிலும் எங்களுக்கு அரசாங்க அனுமதி தேவைப்படுகிறது, இது விஷயங்களை தாமதப்படுத்துகிறது, ஆனால் அனுமதி தேவையில்லாத இடங்களில், விஷயங்கள் விரைவாக செயல்படுத்தப்படுகின்றன."

### சுகாதார பராமரிப்பு

மோசமான சாலை இணைப்பு இந்த பழங்குடியினரின் ஆரோக்கியத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, இது அதிக நோய் மற்றும் இறப்பு




*சாய்சேஷன் ஒரு பள்ளியில் ஊழியர்கள் மற்றும் மாணவர்களிடையே உரையாற்றுகிறார். மேலும் இருளாண்டி (இடமிருந்து இரண்டாவது), DG N S சரவணன் (இடமிருந்து மூன்றாவது), மற்றும் சேஷாத்ரி ஆகியோரும் உள்ளனர்.*

# சிறுதானியங்கள்

RC சென்னை மித்ராவின் CSR தலைவர் மற்றும் சிறப்பு முயற்சிகளுக்கான மாவட்டத் தலைவர் சாய்சேஷன், ஜவ்வாது மலைகள் தமிழ்நாட்டில் சிறுதானிய சாகுபடியின் முக்கிய மையங்களில் ஒன்று என்று சுட்டிக்காட்டுகிறார். அவர்கள் கம்பு, தினை, சாமை மற்றும் கேழ்வரகு ஆகியவற்றை வளர்க்கிறார்கள். முன்பு பழங்குடியினரிடம் வரகு மற்றும் பனிவரகு விதைகளும் இருந்தன, அவை பரவலாக பயிரிடப்பட்டன.

ஆனால் அவர்கள் நடத்திய மருத்துவ முகாம்களின் போது, திட்டத் தலைவர்கள் இந்த கிராம மக்கள் இரும்புச் சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதை கண்டறிந்தனர். "எனவே நாங்கள் அவர்களுக்கு இரும்புச்சத்து செறிவூட்டப் பட்ட கலப்பின சிறுதானிய விதைகளை வழங்கினோம், அவை நடப்பட்டு அங்கு நன்றாக வளர்ந்து வருகிறது" என்று சாய்சேஷன் புன்னகைக்கிறார். இப்போது IFTR அதன் தாக்கத்தை ஆய்வு செய்து மேலும் நடவடிக்கைகளை பரிந்துரைக்கும். சிறுதானியங்களில் இருந்து அரிசிக்கு உள்ளூர் மக்கள் மாறியது பரிதாபகரமானது என்று அவர் மேலும் கூறுகிறார், ஏனென்றால் இப்போது வசதியான நகரவாசிகள் அவற்றை உட்கொள்ளத் தொடங்கியதால் சிறுதானியங்கள் கவர்ச்சிகரமான விலையைப் பெறுகின்றன. "எங்களைப் போன்றவர்கள் இப்போது சிறுதானியங்களை உட்கொள்ள விரும்புவதால், அதிக விலையைப் பெறுவதால் அவர்கள் சிறுதானியங்களை விற்கிறார்கள்... இது ஒரு வணிக முடிவு, ஆனால் ஊட்டச்சத்து ரீதியாக அவ்வளவு சிறப்பானது அல்ல. இதை நாங்கள் கண்டறிந்ததும், அவர்களுக்குக் கற்பிக்க முயற்சிக்கிறோம்."

அவர்களை சிறுதானியங்களை விற்பனை செய்து அதிக பணம் சம்பாதிப்பதை தடுப்பது நோக்கமல்ல, ஆனால் அவர்கள் அதிக சிறுதானியங்களை வளர்த்து, தங்கள் உற்பத்தியில் ஒரு பகுதியை உட்கொண்டு மீதியை விற்க ஒரு வழியைக் கண்டுபிடிப்பதே எங்கள் நோக்கம். கிராம காலநிலை இடர் மேலாண்மை குழுக்கள், சமூக விதை மற்றும் தீவன வங்கிகள், காலநிலை தழுவிய சாகுபடி முறைகள், பயிர் பல்வகைப் படுத்தல் மற்றும் அதிகரித்த பயிர் தீவிரத்தன்மை போன்ற போதுமான புதுமைகள் மற்றும் தலையீடுகள் அவர்களின் விவசாய உற்பத்தியை அதிகரிக்க பிற வழிகள் ஆகும்.



**வலமிருந்து:** ஒரு கிராமத்தில் உள்ள சிறுதானிய வயலில் சாய்சேஷன், சேஷாத்ரி, B ஸ்ரீகாந்த், இருளாண்டி.

விகிதங்களால் பாதிக்கப்படுகிறது. பெரும்பாலான கிராமங்களில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூட இல்லை என டாக்டர் V இருளாண்டி விளக்குகிறார். "சிகிச்சைக்காக பழங்குடியினர் பெரும்பாலும் ஜவ்வாது மலைகளில் உள்ள மிகப்பெரிய கிராமமான ஜமுனாமரத்தூருக்கு வர வேண்டும். முதியவர்கள் மற்றும் பலவீனமானவர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர், மேலும் அவசர காலங்களில் என்ன நடக்கிறது என்று நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்." மோசமான சாலைகள் பயணத்தை மெதுவாக்குவதால், கடைசி நிமிட சிக்கல்களை தவிர்க்க, பெரும்பாலான கர்ப்பிணி பெண்கள் குறைந்தபட்சம் ஒரு வாரம் முதல் 10 நாட்களுக்கு முன்னதாகவே மருத்துவ மையங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

### விவசாயம் மற்றும் வாழ்வாதாரம்

இந்த மண்டலத்தில் உள்ள பெரும்பாலான பழங்குடியினர் வறுமைக் கோட்டிற்கு (BPL) கீழே உள்ளனர். விவசாயம் அவர்களின் பரம்பரைத் தொழில், மேலும் நீர்ப்பாசனத்திற்காக சொந்த கிணறுகள் உள்ளவர்களைத் தவிர, பெரும்பாலான விவசாயம் பருவமழை காலத்தில் செய்யப்படுகின்றன. தடுப்பணைகள் இல்லாததால், கோடையில் தண்ணீர் ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. மலைப்பாங்கான நிலப்பரப்பு காரணமாக மழைநீர் சேகரிக்கப்படுவதில்லை.

கோடை மாதங்களில் இடம்பெயர்வு பொதுவாக இருப்பதால், இது வெளியிலிருந்து வரும் வட்டிக்கு பணம் கொடுப்பவர்களுக்கு ஒரு லாபகரமான சந்தையாகிறது. அவர்கள் இங்கு வந்து, மக்களுக்கு வேலைகளை வழங்கி, வட்டிக்கு கடன் கொடுக்கிறார்கள், அதில் பெரும்பாலானவை மதுவிற்காக செலவிடப்படுகின்றன. சீரற்ற நீர் கிடைப்பது தவிர, விவசாயிகள் எதிர்கொள்ளும் பிற சவால்களில் அறுவடைக்கு முந்தைய மற்றும் பிந்தைய செயலாக்கம், சேமிப்பு, சந்தைப்படுத்தல், உள்கட்டமைப்பு மற்றும் பல அடங்கும். சிலர் மரமல்லாத வனப் பொருட்களை சேகரித்து, புளி, பலா, தென்னை, எலுமிச்சை, வாழை மற்றும் நெல்லி உள்ளிட்ட பல்வேறு மரங்களை தங்கள் நிலத்தில் வளர்க்கிறார்கள்.

சமீபத்தில், அரசாங்கமும் சில தனியார் அமைப்புகளும் 2020-ல் உருவாக்கப்பட்ட ஜவ்வாது மலை பழங்குடியினர் விவசாய உற்பத்தி நிறுவனம் போன்ற விவசாய உற்பத்தி நிறுவனங்கள்/கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிக்கத் தொடங்கியுள்ளன. ஆனால் சந்தைப்படுத்தலில் உள்ள இடைவெளி தொடர்கிறது, பழங்குடியின விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சமவெளியிலிருந்து வரும் சந்தைப்படுத்தும் முகவர்களுக்கு லாபகரமற்ற விலையில் விற்கிறார்கள்.

காலநிலை-எதிர்ப்பு விவசாயத்தை



அறிமுகப்படுத்துதல், மண் தர மேம்பாடு மற்றும் ஈரப்பதம் பாதுகாப்பு ஆகியவற்றில் தலையீடுகள், நீர் பாதுகாப்பு மற்றும் நீரின் திறமையான பயன்பாடு, வறட்சி நிலைகளை சிறப்பாக தாங்கும் மேம்படுத்தப்பட்ட பயிர் வகைகளை அறிமுகப்படுத்துதல், கால்நடை தீவனம் மற்றும் சிறந்த ஊட்டச்சத்து உற்பத்தி போன்ற புதுமையான அணுகுமுறைகள் மூலம் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்த வாய்ப்புகள் உள்ளன என்று இருளாண்டி கூறுகிறார்.

“காலநிலை மாற்றத்திற்கேற்ப தடுப்புத் தொழில்நுட்பங்களை ஏற்பது சுற்றுச்சூழல் அமைப்பை நிலைநிறுத்த உதவும், எடுத்துக்காட்டாக சூரிய சக்தியைப் பயன்படுத்தி பாசனத்திற்கும், ஒளியளிப்பிற்கும், மேலும் அறுவடைக்குப் பிந்தைய செயலாக்கத்திற்கும் பயன்படுத்துவது போன்றவை” என்று அவர் கூறினார்.



முன்பு பழங்குடியினர் தாங்கள் வளர்த்த சிறுதானியங்களை உட்கொண்டாலும், இப்போது அவர்கள் அதிக அளவில் சிறுதானியங்களை விற்று, பொது விநியோக முறையிலிருந்து அரிசியை வாங்குகிறார்கள், ஏனெனில் பள்ளிகளில் அரசாங்கத்தால் அரிசி உண்ணும் பழக்கம் பல ஆண்டுகளாக ஊக்குவிக்கப்பட்டது. அரிசி சாப்பிடுவது சிறுதானிய நுகர்வை விட உயர்ந்ததாகக் கருதப்படுவதால், சில விவசாயிகள் மக்காச்சோளம், வெள்ளரிக்காய், பருத்தி மற்றும் பிற தோட்டக்கலை பயிர்களைத் தவிர நெல் சாகுபடி செய்யத் தொடங்கியுள்ளனர்.

நகர்ப்புற உயரடுக்கினர் சிறுதானியங்களில் அதிக ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து மதிப்பைக் கண்டறிந்து, அரிசி மற்றும் கோதுமையிலிருந்து சிறுதானியங்களுக்கு மாறும்போது,” இந்த பழங்குடியினர் அரிசியை உட்கொள்வது அவர்களின் ஊட்டச் சத்தை எதிர்மறையாக பாதிக்கிறது என்பதை நாங்கள் கண்டறிந்தோம். எனவே, அறுவடை செய்த விளை பொருட்களை அவர்களின் சொந்த நுகர்வுக்கு பயன்படுத்த வேண்டும் என்று அவர்களுக்கு ஆலோசனை வழங்கிய பிறகு, இரும்புச்சத்து செறிவூட்டப்பட்ட கலப்பின கம்பு சிறுதானிய விதைகளை அவர்களுக்கு வழங்கத் தொடங்கியுள்ளோம்” என்று சாய்சேஷன் கூறுகிறார்.

RID 3234 DG N S சரவணன் இதை அழகாக சுருக்கமாகக் கூறுகிறார், IDEAL ஜவ்வாது “RID 3234 இன் ஒரு முதன்மை பழங்குடியினர் அதிகாரமளித்தல் திட்டம். சூரிய பேனல் மற்றும் பம்புகள், சுத்திகரிப்பான்களுடன் கூடிய தண்ணீர் தொட்டிகள், சூரிய தெரு விளக்குகள், வீடுகளுக்கான சூரிய விளக்குகள், TLUD (புகை இல்லாத) அடுப்புகள், விவசாயிகளுக்கான இரும்புச்சத்து செறிவூட்டப்பட்ட கலப்பின சிறுதானிய விதைகள், விவசாயப் பொருட்களுக்கு மதிப்பு கூட்ட ஸ்பெக்ட்ரா உலர்த்திகள், பள்ளிக்கு பிந்தைய கல்விக்கான ஸ்மார்ட் டிவிகள், வன நடுநிலைப் பள்ளிகளுக்கான கேரம் மற்றும் சதுரங்க பலகைகள் மற்றும் பல்வேறு தலையீடுகளுக்கு சுமார் ரூ.1.3 கோடி ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது.” சூரிய தெரு விளக்குகள் சென்சார் களுடன் வருகின்றன, அவை ஒளி நிலைகளின் அடிப்படையில் தானாகவே இயக்கப்படும். ஆள் நடமாட்டத்தை உணர்ந்து அதற்கேற்ப பிரகாசத்தை சரிசெய்யும். இதன் மூலம் மின்சாரம் சேமிக்கப்பட்டு நீண்ட நேரம் கிடைக்கும்.

RC சென்னை அக்ஷயா உறுப்பினர் சேஷாத்ரி, சாய்சேஷன் மற்றும் இருளாண்டி கிராம மக்களுடன்.






இந்த திட்டம் சுமார் 30 கிராமங்களில் உள்ள பழங்குடியினரின் வாழ்க்கையை ஏற்கனவே தொட்டு, 1,800 குடும்பங்களை மேம்படுத்தியுள்ளது என்று அவர் கூறுகிறார். “நான் தனிப்பட்ட முறையில் ஜமுனாமரத்தூர் மற்றும் இன்னும் சில கிராமங்களுக்குச் சென்றுள்ளேன், மேலும் இந்த மலைகளில் உள்ள மக்களின் வாழ்க்கையில் உருவாக்கப்படும் தாக்கத்திற்கு என்னால் உறுதியளிக்க முடியும். எனது சொந்த சங்கமான RC சென்னை மித்ராவின் முன்னாள் தலைவர் சாய்சேஷன், ஓய்வுபெற்ற மூத்த IFS அதிகாரி V இருளாண்டியுடன் இணைந்து இந்த திட்டத்தை வழிநடத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இருவரும் இந்த திட்டத்தில் மிகவும் கடினமாக உழைத்துள்ளனர், இது விரும்பிய தாக்கத்தை அளிக்கிறது.”

இந்தத் திட்டம் மாவட்டத்திற்கான நீண்ட காலத் திட்டமாக இருக்கும் என்றும், இது விரிவுபடுத்தப்படும் போது, மேலும் அதிகமான சங்கங்கள் ஈடுபடும் என்றும் சரவணன் மேலும் கூறினார். DGE வினோத் சாரோகி மற்றும் DGN சுரேஷ் ஜெயின் ஆகியோர் தொடர்ச்சியான ஆதரவை உறுதியளித்துள்ளனர். “CSR நிதி, அரசாங்கம், வனத்துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் விவசாயம்/சுற்றுச்சூழல் துறையில் நிபுணத்துவம் பெற்ற பிற தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ரோட்டரி செயல்படுவதற்கு இது ஒரு அற்புதமான எடுத்துக்காட்டு. அவர்களின் மதிப்புமிக்க கூட்டாண்மை மற்றும் ஆதரவுக்கு MCRC மற்றும் IFTRக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.”

புகை இல்லாத அடுப்புகளை வழங்குதல் போன்ற பிற முயற்சிகள் உள்ளன என்று சேஷாத்ரி கூறுகிறார்; இதுவரை இரண்டு கிராமங்களில் 75 அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. வருமான மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், முருங்கை இலைகளை உலர்த்தி பொடியாக விற்பனை செய்வதற்காக சில கிராமங்களில் ஸ்பெக்ட்ரா உலர்த்திகள் வழங்கப்பட்டன, இது சிறந்த விலையைப் பெறுகிறது.

இளைஞர்களை சிறந்த எதிர்காலத்திற்கு தயார்படுத்த, ஜவ்வாது IDEAL குழு வனத்துறையின் ஜமுனாமரத்தூர் பிரிவுடன் இணைந்து ஒரு கூட்டு முயற்சியை தொடங்கியுள்ளது. பல பழங்குடியின இளைஞர்களின் கனவு அரசு வேலை என்பதால், TNPSC தேர்வில் தேர்ச்சி பெறுவது அவசியம், எனவே 100க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வெளிப்புற பயிற்சியாளர்கள் மற்றும் வனத்துறை ஊழியர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. RC சென்னை மித்ரா மற்றும் சென்னை கிரீன் சிட்டி ஆகிய செயல்பாட்டு சங்கங்களுடன் RC மெட்ராஸ் இன்டஸ்ட்ரியல் சிட்டி மற்றும் சென்னை மெட்ரோசோன் ஆகியவை இந்த திட்டத்தில் பங்கேற்றன.

டிஜிட்டல் பயிற்சி மையம் மற்றும் STEM மற்றும் அடிப்படை அறிவியல் ஆய்வகத்திற்கான இடத்தை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது, இதற்காக பெங்களூரு ரோட்டேரியர் மூலம் AT & T சில மடிக்கணினிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது. தமிழ்நாடு சிறப்பு செயலாளர் (வனங்கள்) இடம் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

வனத்துறை அந்த கிராமங்களை அடையாளம் கண்டு, உள்ளூர் நிர்வாக தலைவர்களை எங்களுக்குத் அறிமுகப்படுத்தியது. அவர்கள் சூரிய ஒளி திட்டங்களுக்கு தேவையான அனுமதிகளைப் பெற உதவினார்கள் என்று சாய்சேஷன் கூறுகிறார். MCRC, கிரண்ட்ஃபோஸ் மற்றும் AT & T ஆகியவற்றிலிருந்து CSR ஆதரவு கிடைத்தது. சூரிய விளக்குகள் மற்றும் பம்புகளின் செயலாக்கத்தை சன்லிட் ஃபியூச்சர் கவனித்துக் கொண்டது, ஓபன் மெண்டர் டிரஸ்ட் மற்றும் IIT-M கல்விக்காக முன்வந்தனர்.■


Your Pathway to Medicine Starts at
Xavier University School of Medicine
& KLE Belgaum
6 Years
Pre-Med to Doctor of Medicine /
Doctor of Veterinary Medicine Programme
Empathy in Action:
Your Medical Journey at
XUSOM
Healing Together:
The Future of Animal Care at
XUSOVM
Register for our Webinar
Admission open for May & September 2025
Xavier Students are eligible for H1/J1 Visa Programme
To Apply Visit:
application.xusom.com
admissions@xusom.com
WhatsApp
+1 516-927-0418

ADVT.


Dünyada Barış Kalıcı Olsun

# இஸ்தான்புல் மாநாட்டில் சர்வதேச அமைதியில் கவனம் செலுத்திய ரோட்டரி

ரோட்டரி செய்திக்குழு



PRID சஃபக் அல்பே, RIDN டாம் கம்ப், RI தலைவர் ஸ்டெஃப்னி உர்சிக் மற்றும் TRF அறங்காவலர் தலைவர் மார்க் மலோனி (இடமிருந்து ஐந்தாவது) இஸ்தான்புல் பசெசெஹிர் பல்கலைக்கழகத்தில் ரோட்டரி அமைதி கம்பத்தை திறந்து வைத்தனர்.

அமைதியை கட்டியெழுப்ப சிந்தனை மிக்க, நீடித்த முயற்சியுடன் அர்த்தமுள்ள கூட்டாண்மையும் தேவை என்று இஸ்தான்புல்லில் பிப். 20 முதல் 22 வரை நடைபெற்ற அமைதி மாநாட்டில் பேசிய RI தலைவர் ஸ்டெஃபனி உர்சிக் கூறினார். பிளவுபட்டு நிற்கும் உலகில் அமைதியை ஏற்படுத்துவதை மையமாக வைத்து இந்த மாநாடு நடைபெற்றது.

இதில் தொடக்கவுரையாற்றிய ஸ்டெஃபனி, உலகில் அமைதி திரும்ப வேண்டுமானால், அதற்கு அர்ப்பணிப்புள்ள செயல் வேண்டும். இங்குநாம் ஒன்றாக இணைந்திருப்பது அமைதியை கட்டியெழுப்பவதில் நமக்குள்ள சக்தியை ஒன்றுதிரட்டுவதற்கு சான்றாக உள்ளது. பிளவுபட்டிருக்கும் உலகில் அமைதியை கட்டமைப்பது என்பது விரைவாகவோ அல்லது எளிதாகவோ சாதிக்கும் காரியம் அல்ல. அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் காலப்போக்கில் இது சாத்தியமாகும். அமைதி என்பது நாம் நினைப்பதுபோல் ஒரு இலட்சியம் மட்டுமல்ல, மிகவும் பொறுப்புடன் அதை நாம் பின்தொடர வேண்டும் என்றார் அவர்.

இந்த மாநாடு, இஸ்தான்புல்லில் உள்ள பஹ்செஷர் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ரோட்டரியின் எட்டாவது அமைதி மையமான, ஓட்டோ மற்றும் பிரான் வால்டர் ரோட்டரி அமைதி மையத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது. மத்திய கிழக்கு மற்றும் வடக்கு ஆப்பிரிக்க பிராந்தியத்தில் (MENA- Middle East and North Africa) அமைதியை கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட முதல் மையம். இது நேர்மறையான முறையில் அமைதியை மேம்படுத்துவது தொடர்பாக தொழில்முறை சான்றிதழை வழங்குகிறது.

இந்த மையத்தை நிறுவுவதற்காக ஓட்டோ மற்றும் பிரான் வால்டர் அறக்கட்டளை வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் 15.5 மில்லியன் டாலர் நன்கொடை அளித்துள்ளதற்கு RI தலைவர் நன்றியும் பாராட்டும் தெரிவித்தார். மறைந்த கணவர் பிராங்குடன் சேர்ந்து அறக்கட்டளையை நிர்வகித்து, தேடல் குழுவில் பணியாற்றி பஹ்செஷர் பல்கலைக்கழகத்தை தேர்ந்தெடுத்த TRF அறங்காவலர் மார்டி ஹெல்மெனையும் அவர் அங்கீகரித்து பாராட்டினார்.

ஐக்கிய நாடுகள் சபையுடனான அதன் ஒத்துழைப்புக்கும் நன்றி. எங்களின் அமைதி தூதுவர்கள், நீடித்த அமைதிக்கான தலைமைப்பண்பில் சிறப்பு பயிற்சி பெறுவார்கள். ஐ.நா. நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றி, நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை நோக்கி முன்னேற, உலகளாவிய முயற்சிக்கு முக்கியப் பங்களிப்பார்கள். மோதல்கள் மற்றும் கருத்து வேறுபாடுகளால் பிரிந்துகிடக்கும் உலகில், நம்பிக்கை, நோக்கம், தீர்வு மற்றும் மன உறுதியுடன் நாம் ஒன்று சேரும்போது என்ன சாதிக்க முடியும் என்பதற்கு இந்த அமைதி மையம் ஒரு சான்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஆண்டும், ரோட்டரி அதன் ஏழு மையங்களில் படிக்கும் அமைதி மற்றும் மேம்பாட்டுத்

தலைவர்கள் 130 பேருக்கு முழு உதவித் தொகையை வழங்கி வருகிறது. 2002-ம் ஆண்டு முதல் இதுவரை 130 நாடுகளைச் சேர்ந்த, 1800-க்கும் மேலான அமைதி தூதுவர்கள், அரசு, அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளில் தலைமைப் பண்பு பதவிக்காக பயிற்சி பெற்றுள்ளனர்.

2026–27-ம் ஆண்டுக்கான, ரோட்டரி அமைதி தூதர்களுக்கான பயிற்சி விண்ணப்பங்கள் வருகிற மே மாதம் 15-ம் தேதி வரை பெறப்படும். மேலும் விவரங்களுக்கு *https://on.rotary.org/3J6sYLP* என்னும் இணையதளத்தை பார்க்கவும்.

அமைதி முயற்சிகளுக்கு தொழில்நுட்பம் எப்படி ஆதரவாகவும் அச்சுறுத்தலாகவும் இருக்கும் என்பது பற்றி விவாதிக்க தனி அமர்வு நடைபெற்றது. இதில் நிபுணர்கள் செயற்கை நுண்ணறிவு, அமைதியை கட்டமைப்பதில் தொழில்நுட்பத்தில் பங்கு, தவறான தகவல்களால் அதிகரிக்கும் சவால்கள் ஆகியவை குறித்து விவாதித்தனர்.

விருதுபெற்ற திரைப்பட தயாரிப்பாளரும் "பீஸ்டெக் லேப்" ஆய்வகத்தின் நிறுவனருமான ஷெல்டன் ஹிமெல்ஃபார்ப் பேசுகையில், அமைதியை கட்டியெழுப்ப விரும்புவோர் சர்வதேச அளவில் ஒன்றிணைந்து தவறான தகவல்கள் தருவோருக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்றார். "போர், தொற்றுகள், பருவநிலை மாற்றத்துக்கு இணையாக தவறான தகவல்களும் ஒரு அச்சுறுத்தலாக நீடித்து வருகிறது. ஆனால், ஒவ்வொருநாளும் உண்மை சரிபார்ப்பு, உள்ளடக்க தலைப்புகள், ஊடக எழுத்தறிவு திட்டங்கள் மற்றும் அமைதியை கட்டியெழுப்புவதில் செயற்கை நுண்ணறிவின் பங்கு தொடர்பாக தீர்வுகள் மற்றும் கருவிகளை உருவாக்குவதில் அதிகமான மக்கள் செயலாற்றி வருகிறார்கள்" என்று அவர் கூறினார்.

### பருவநிலை மாற்றமும் மோதல்களும்

சுற்றுச்சூழல் பிரச்னைகள் குறித்தும் இந்த மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது. ரோட்டரி இ-கிளப் ஆஃப் எகி இன்டர்நேஷனலின்








**மேலே (இடமிருந்து):** PRID *அல்பே,* TRF *அறங்காவலர் தலைவர் மலோனி,* RI *தலைவர் ஸ்டெஃப்னி மற்றும் பசெசெஹிர் பல்கலைக்கழக ரெக்டர் எஸ்ரா ஹதிபோக்லு.*

**இடது மேல்:** RI *தலைவர் ஸ்டெஃப்னி பிரதிநிதிகளுடன்.*

**இடது கீழ்:** TRF *அறங்காவலர் மார்ட்டி ஹெல்மன் (வலது) பிரதிநிதிகளுடன்.*

**கீழே:** *ஓட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் உருவப்படம் பின்னணியில்* TRF *அறங்காவலர் தலைவர் மலோனி மற்றும் தலைவர் ஸ்டெஃப்னி.*



தலைவரும், அரபு நாடுகள் லீகின் நிலையான வளர்ச்சி மற்றும் சர்வதேச கூட்டுறவு அமைப்பின் தலைவரான நடா எல் அகிசி, MENA பிராந்தியம் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளும் அபாயங்களை எடுத்துரைத்தார். “பருவநிலை மாற்றம் என்பது அரபு நாடுகள் இதுவரை எதிர்கொள்ளாத பெரும் சவால்களில் ஒன்றாகும். இது பருவநிலை மாற்றத்தில் வெப்பம் நிறைந்த பகுதியாகும். புவி வெப்பமடைவதால் ஏற்படும் பேரழிவுக்கு உட்பட்ட பகுதியாகும்” என்றும் அவர் கூறினார்.

1994-ம் ஆண்டு டுட்சி இன (ஆப்பிரிக்காவின் கிரேட் லேக்ஸ்) மக்களுக்கு எதிராக நடந்த இனப்படுகொலையில் உயிர்தப்பிய ஃப்ரெட்டி முடங்குஹா, இனப் படுகொலையால் ஏற்பட்ட விளைவுகள், ருவாண்டாவில் அமைதிக்கான கல்வித் திட்டங்களை முன்னெடுப்பதில் தனது பங்கு (இப்போது அவை பள்ளிக் கல்வியில் தேசிய பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது), மறப்போம், மன்னிப்போம் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்தும் பேசினார்.

PRIP K R ரவீந்திரன்; TRF அறங்காவலர் குழு தலைவர் மார்க் மலோனி; RI பொதுச் செயலர் ஜான் ஹுகோ; ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பொதுச் செயலாளர் (அமைதி கட்டமைப்பு) எலிசபெத் ஸ்பெஹர், தென்னாப்பிரிக்காவின் மனித உரிமைகள் மற்றும் சூற்றுச்சூழல் நீதி ஆர்வலர் குமி நாயுடு, வடக்கு சைப்ரஸில் உள்ள நியர் ஈஸ்ட் பல்கலைக்கழகத்தின் இணை பேராசிரியரும் ரோட்டரி அமைதி தூதுவர் முன்னாள் மாணவரும், இஸ்தான்புல்லில் உள்ள ரோட்டரி அமைதி மையத்தின் நிறுவனருமான டாக்டர் அய்கா டீமெட் அடே உள்ளிட்டோர் முக்கியப் பேச்சாளர்களாக இருந்தனர்.

RI இயக்குநர்கள் அனிருத்தா ராய்சௌத்ரி, ராஜு சுப்பிரமணியன் ஆகியோரும் மாநாட்டில் இடம் பெற்றனர். PRID ஸஃபக் அல்பே மாநாட்டுத் தலைவராக இருந்தார். 88 நாடுகளைச் சேர்ந்த சுமார் 1,000 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.■

# ஜெய்ப்பூர் திஷா மாநாட்டில் DGE-களுக்கு கடினமான இலக்குகள்

ரஷீதா பகத்

ஜெய்ப்பூரில் நடைபெற்ற திஷா மாநாட்டில், உள்வரும் மாவட்ட ஆளுநர்கள், DGNs, மண்டலம் 4 மற்றும் 7 மாவட்ட தலைமைக் குழுவினருக்கான பயிற்சி நடைபெற்றது. இந்த மண்டலங்களின் பொறுப்பாளரும் RI இயக்குநருமான K P நாகேஷ் பேசுகையில், மாவட்டத் தலைவர்கள், அடுத்த இரண்டு ஆண்டுகளில் உயர்ந்த லட்சியங்களுடன், TRF-க்கு பங்களிப்பதிலும், உறுப்பினர்கள் சேர்க்கையிலும் புதிய உச்சத்தை தொட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

விளக்கப்படங்கள் மற்றும் வரைபடங்கள் மூலம் உறுப்பினர் சேர்க்கையில் இந்தியாவின் நிலையை முதலிடத்துக்கு கொண்டு செல்ல தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுமாறு அவர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். உலக அளவில் ரோட்டரி உறுப்பினர் சேர்க்கை தொடர்பான வரைபடத்தை சுட்டிக்காட்டிய அவர், “இந்த விளக்கப்படத்தைப் பாருங்கள், இது இந்தியாவில் இப்போதைய தேவை என்ன என்பதை வெளிப்படுத்தும். 2,73,149 உறுப்பினர்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ள நிலையில் இந்தியா, 1,76,280 உறுப்பினர்களுடன் இரண்டாம் இடத்தில் உள்ளது” என்றார்.

அமெரிக்காவில் 153 ரோட்டரி மாவட்டங்கள் உள்ளன. ஆனால், இந்தியாவில் 42 மாவட்டங்கள் மட்டுமே உள்ளன. அதாவது, அமெரிக்காவில் ஒரு மாவட்டத்தில் 47 ரோட்டரி சங்கங்கள் உள்ளன. ஆனால், இந்தியாவில் ஒரு மாவட்டத்தில் 111 சங்கங்கள் உள்ளன. அமெரிக்காவில் ஒரு மாவட்டத்திற்கு 1,785 உறுப்பினர்கள் உள்ளனர். இந்தியாவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 4,197 உறுப்பினர்கள் உள்ளனர். “இங்கே உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆனால், அதை நாம் சரிவர பயன்படுத்திக் கொள்ளவில்லை. தற்போதுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று மாவட்டங்களை உருவாக்க நாம் தகுதியுடையவர்கள்” என்று அவர் கூறினார்.

இந்த வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொண்டால், பல முக்கிய முடிவுகளை எடுக்கும் “CoL-ல் நாம் 100 பிரதிநிதிகளை வைத்திருக்க முடியும் இரண்டு மண்டலங்களுக்கு ஒரு இயக்குநர் இருக்கலாம் என்பதால் 8 மண்டலங் களுக்கு நான்கு RI இயக்குநர்கள் இருப்பார்கள்.

### 3 லட்சம் உறுப்பினர்கள் இலக்கு

2027 ஜூன் மாதத்திற்குள் 3 லட்சம் உறுப்பினர்களை இலக்காகக் கொண்டு, இந்தியா Divide to Multiply என்னும் மந்திரத்தின் அடிப்படையில் செயல்பட

*TRF அறங்காவலர் பரத் பாண்டியா, RIDE நாகேஷ் மற்றும் மாநாட்டுத் தலைவர் PDG ராஜேஷ் அகர்வால் முன்னிலையில் ஜெய்ப்பூரில் திஷாவில் RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் நட்பு இல்லத்தை (House of Friendship) திறந்து வைத்தார்.*



வேண்டும் என்று நாகேஷ் கூறினார். பெரிதாக எப்படி வளர்வது என்பது பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும்.

2025–26 ரோட்டரி ஆண்டில், நானும் சக நண்பர் RIDE முருகானந்தமும் அழைக்கும் “மிஷன் 2.25 இலட்சம்” என்பதில் DGE-க்கள் கவனம் செலுத்த வேண்டும். இந்த பணியின் கீழ் அனைத்து DGE-களுக்கும் 365 நாட்கள் இருப்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். “மண்டலம் 4 மற்றும் 7-ல் தினமும் ஒரு புதிய சங்கம் உருவானால் மண்டலம் 5 மற்றும் 6 இல் தினமும் ஒரு சங்கம் உருவானால், ஆண்டு இறுதிக்குள் மொத்தம் 730 புதிய சங்கங்களுடன் முடிக்கலாம். ஒவ்வொரு சங்கத்திலும் சராசரியாக 30 உறுப்பினர்கள் இருந்தால் 730 புதிய சங்கங்களில் 21,900 புதிய உறுப்பினர்கள் இருப்பார்கள்”. அடுத்த ஆண்டும் இதே நிலை உருவாகலாம். இது உண்மையிலேயே இந்தியாவில் ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

TRF பங்களிப்பு பற்றி RIDE நாகேஷ் கூறுகையில், உள்வரும் மாவட்டத் தலைவர்கள் உயர்ந்த இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும். “இலக்குகளை நாம் நிர்ணயிக்கா விட்டால் வழிகாட்டுதல்கள் இருக்காது. வழிகாட்டுதல் இல்லாத ஒரு அமைப்பின் தலைவிதியை கற்பனை செய்து பாருங்கள். எனவே 2017-ம் ஆண்டு மும்பையில் முதல் முறையாக திஷா மாநாடு நடைபெற்ற போது அப்போது RI இயக்குநராக இருந்த C பாஸ்கர் முன்முயற்சியில் வருடாந்திர நிதிப் பங்களிப்புக்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த வழிகாட்டுதல் மூலமும், இதில் கவனம் செலுத்தியதன் மூலமும் TRF பங்களிப்பில் 2-வது இடத்தையும், உறுப்பினர்கள் சேர்க்கையில் முதலிடத்திலும் இருந்தோம். பல ஆண்டுகளாக இது தொடர்ந்தது. ஆனால், நமது நோக்கம் எல்லாம் TRF நிதிப்பங்களிப்பு, உறுப்பினர் சேர்க்கை இரண்டிலும் முதலிடம் பெற வேண்டும் என்பதுதான்.

“முதல் முறையாக இந்த ஆண்டு திஷா மாநாடு, இரண்டு மண்டலங்களுக்கு ஒன்று என்ற கணக்கில் இரண்டு பகுதிகளாக நடத்தப்படுகிறது. TRF பங்களிப்பு மற்றும் உறுப்பினர்கள் சேர்க்கை இரண்டிலும் DGEs உயர்ந்த இலக்கை நிர்ணயிக்க வேண்டும் என்றார் நாகேஷ்.

இவ்வாறு நிர்ணயிக்கப்படும் இலக்குகள் காலக்கெடுவுக்கு உட்பட்டவை என்றும் விருதுகள் மற்றும் அங்கீகாரம் இரண்டையும் பெறமுடியும் என்றும் அவர் வலியுறுத்தினார். உறுப்பினர்கள் வளர்ச்சிக்கு ஒரு உதாரணத்தை குறிப்பிட்ட நாகேஷ், “நம்மிடம் 800-900 உதவி ஆளுநர்கள் உள்ளனர். கற்பனை செய்து பாருங்கள். ஒவ்வொரு உதவி ஆளுநரும் ஒரு புதிய சங்கத்தைத் தொடங்கினால், நம்மிடம் புதிதாக 900 சங்கங்களும், 27,000 புதிய ரோட்டேரியன்கள் உறுப்பினர்களாகவும் இருப்பார்கள்” என்றார்.

மாநாட்டுப் பிரதிநிதிகளிடையே உரையாற்றிய RIDE M முருகானந்தம், “முப்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு ரோட்ராக்டராக, தனது ரோட்டரி பயணத்தை தொடங்கியதாகக் கூறினார். “நான் ரோட்டேரியனாக வருவதற்கு முன்பிருந்தே நான் பெருநன்கொடையாளராக இருந்தேன். இது மிகவும் எளிதானது, நீங்கள் TRF-க்கு நிதிப் பங்களிப்புச் செய்ய நினைக்கும்போதெல்லாம், உங்களுக்கு அதில் திருப்தி இருந்தால் கொடுங்கள். இல்லையெனில் கொடுக்க வேண்டாம். ஆனால், கொடுப்பதில் மகிழ்ச்சி இருந்தால், தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருங்கள். ஏனென்றால், நீங்கள் உலகிற்கு நன்மை செய்துவரும் 107 ஆண்டு பழமையான அறக்கட்டளைக்குத்தான் நன்கொடை அளிக்கிறீர்கள்”.

### மிஷன் 2.25 லட்சம்

“மிஷன் 2.25 லட்சம்”: 1:2:3 என்னும் வளர்ச்சி சூத்திரத்தையும், உலக அளவில் ரோட்டரி பற்றிய விழிப்புணர்வு மற்றும் அதன் செயல்பாடுகளையும் படவிளக்கங்கள் மூலம் விளக்கினார். ரோட்டரி

RIDE K P *நாகேஷ் மற்றும்* PDG *சுரேஷ் ஹரி.*





RIDE K P *நாகேஷ் மற்றும் முன்னாள்* RI *இயக்குநர்* A S *வெங்கடேஷ்.*

விழிப்புணர்வு குறித்து RI சமீபத்தில் நடத்திய ஆய்வில் தாய்வானில் 91 சதவீதம் பேர் பதிலளித்து முதலிடத்தைப் பெற்றனர். இந்தியா 83 சதவீதங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது. இதுவே அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் 52 சதவீதமாகவும், ஜப்பானில் 42 சதவீதமாகவும் மற்றும் கொரியாவில் 33 சதவீதமாகவும் குறைந்திருந்தது. ஆனால், ரோட்டரியின் சேவைகள் பற்றி நீங்கள் எவ்வளவு நன்கு அறிந்திருக்கிறீர்கள் என்னும் ஆய்வில் இந்தியா 73 சதவீதங்களுடன் முதலிடத்தில் இருந்தது. இதில் நைஜிரியா 54 சதவீதத்துடன் இரண்டாவது இடத்தையும், தாய்வான் 54 சதவீதத்துடன் மூன்றாவது இடத்தையும் பெற்றது.

### சிவப்பு-மஞ்சள்-பச்சை

உள்வரும் இயக்குநர் பேசுகையில், உறுப்பினர்கள் எண்ணிக்கையில் இந்தியா வலுவான நிலையில் இருக்கின்றபோதிலும் மூன்று முக்கிய கவலைகள் இருப்பதாக குறிப்பிட்டார். தாம், RIPE K P நாகேஷுடன் இணைந்து தயாரித்த "சிவப்பு, மஞ்சள், பச்சை" (RAG- Red, Amber, Green) அட்டவணையை விளக்கினார். 50 அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருந்தால் ஒரு சங்கத்தை பச்சை நிறமாக வகைப்படுத்தலாம். 25 முதல் 50 உறுப்பினர்கள் இருக்கும் சங்கத்தை மஞ்சள் நிறம் எனவும், 25 உறுப்பினர்களுக்கு கீழ் உள்ள சங்கம் என்றால் அதை சிகப்பு நிறமாகவும் வகைப்படுத்தலாம். அவரது ஆய்வின்படி 4-வது மண்டலத்தில் 277 அல்லது 21 சதவீத சங்கங்கள் மட்டுமே பச்சை நிற வரம்பில் வருகின்றன. 376 சங்கங்கள் அல்லது 28 சதவீத சங்கங்கள் மஞ்சள் வண்ண வரம்பில் இருக்கின்றன. 680 சங்கங்கள் அல்லது 51 சதவீத சங்கங்கள் சிவப்பு வண்ணத்தில் உள்ளன. இது கவலை அளிக்கும் விஷயமாகும். இதன் அர்த்தம் என்னவென்றால் நீங்கள் சிவப்பு வண்ணத்திலிருந்து மஞ்சள் வண்ணத்துக்கு முன்னேற வேண்டும் என்பதுதான்.

இந்த ஆய்வின்படி 984 சங்கங்களைக் கொண்ட மண்டலம் 7-ல் 328 சங்கங்கள் அல்லது 33 சதவீத சங்கங்கள் சிவப்பு வண்ணத்தில் அபாய நிலையில் இருக்கின்றன. 395 சங்கங்கள் அல்லது 40 சதவீதம் சங்கங்கள் மஞ்சள் வண்ண வரம்பிலும், 261 சங்கங்கள் அல்லது 27 சதவீத சங்கங்கள் பஞ்சை நிற வரம்பிலும் உள்ளன. எனவே சிவப்பு நிறத்தில் இருக்கும் சங்கங்களை மஞ்சள் நிறத்துக்கும், மஞ்சள் நிறத்தில் இருக்கும் சங்கங்களை பச்சை நிறத்துக்கும் கொண்டு செல்லுமாறு உங்கள் தலைவர்களிடம் சொல்லுங்கள் என்றார்.

இந்த பகுப்பாய்வில் 5 மற்றும் 6-வது மண்டலங்களையும் சேர்த்தபோது, 1329 சங்கங்கள் கொண்ட மண்டலம் 5 இல், 461 சிவப்பு நிறத்தில் உள்ளன. 586 மஞ்சள் வண்ணத்தில் உள்ளன. 282 சங்கங்கள் மட்டுமே பச்சை நிறத்தில் உள்ளன. 6-வது மண்டலத்தில் 1,173 சங்கங்கள் இருந்த நிலையில் அவற்றில் 590 சிவப்பு நிறத்திலும், 282 மஞ்சள் நிறத்திலும் இருக்கின்றன. 201 சங்கங்கள் மட்டுமே பச்சை நிறத்தில் பளிச்சிடுகின்றன.

அகில இந்திய அளவிலான புள்ளிவிவரங்களை ஆராய்ந்தால், இந்தியாவில் மொத்தம் 4,819 சங்கங்கள் உள்ளன. இவற்றில் 2,059 சங்கங்கள் அல்லது 42 சதவீத சங்கங்கள் சிவப்பு மண்டலத்தில் உள்ளன. 1,739 அல்லது 36 சதவீத சங்கங்கள் மஞ்சள் மண்டலத்திலும், 1,021 சங்கங்கள் அல்லது 22 சதவீத சங்கங்கள் மட்டுமே பச்சை மண்டலத்தில் உள்ளது. உண்மைநிலை என்னவென்றால் நாம் வளரவில்லை என்பதுதான். நாம் வளர்ந்து வருகிறோம் என்று சொல்வது முட்டாள்தனமாகும்.

அடுத்து மண்டலங்கள் 4 மற்றும் 7-ன் உறுப்பினர்கள் நிலை மற்றும் வளர்ச்சி குறித்து பார்ப்போம் என்று உள்வரும் இயக்குநர் தெரிவித்தார். மண்டலம் 4-ல் 2020–21-ல் 39,776-ஆக இருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 2024–25-ல் 44,485-ஆக உயர்ந்துள்ளது. மண்டலம் 7-ல் இதே காலத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 35,457-லிருந்து 39,454-ஆக உயர்ந்துள்ளது. இந்த இரண்டு மண்டலங்களிலும் ஐந்து ஆண்டுகளில் நிகர வளர்ச்சி 9,066 அல்லது ஆண்டுக்கு 1,813 உறுப்பினர்கள். கணக்கு பார்த்தால் ஒவ்வொரு ஆண்டும் 1813 உறுப்பினர்கள் சேர்கிறார்கள் என்றால், ஒரு மாவட்டம் 100 கூடுதல் உறுப்பினர் களைக்கூட தரவில்லை. நிச்சயமாக இதைவிட அதிக வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

### ரோட்ராக்டர்கள் பற்றி சிந்தியுங்கள்

ரோட்டரியில் இளைஞர்களைச் சேர்ப்பது குறித்து முருகானந்தம் பேசுகையில், ரோட்டரியை இளைஞர்கள் நிறைந்தவர்களாக

## TOP 10 COUNTRIES IN MEMBERSHIP

| Sl No | Country Name | No of Rotarians | Club Count | No of Districts | Clubs / Dist | Rtns / Dist |
|---|---|---|---|---|---|---|
| 1 | US | 273149 | 7230 | 153 | 47 | 1785 |
| 2 | India | 176280 | 4677 | 42 | 111 | 4197 |
| 3 | Japan | 84175 | 2204 | 34 | 65 | 2476 |
| 4 | Korea | 67394 | 1675 | 19 | 88 | 3547 |
| 5 | Germany | 58106 | 1141 | 15 | 76 | 3874 |
| 6 | Brazil | 49849 | 2309 | 21 | 110 | 2374 |
| 7 | Italy | 38578 | 948 | 14 | 68 | 2756 |
| 8 | Taiwan | 36125 | 988 | 14 | 71 | 2580 |
| 9 | Philippines | 29119 | 980 | 10 | 98 | 2912 |
| 10 | France | 27276 | 1090 | 18 | 61 | 1515 |

மாற்ற வேண்டும் என்று RI மூத்த தலைவர்கள் எல்லோரும் பேசி வருகிறார்கள். ஆனால், இந்தியாவில் ரோட்ராக்டர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதில் உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை. சராசரியாக 50 வயதாகும் நிலையில் நாம் இரண்டு விஷயங்களைப் பற்றித்தான் சிந்திப்போம். ஒன்று ஆரோக்கியம். இரண்டாவது குழந்தைகள். தயவுசெய்து ரோட்ராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்கள்தான் குழந்தைகள் என்று நினைத்துப் பாருங்கள். ரோட்டரியின் சக்கரம் மேலும் 100 ஆண்டுகளுக்கு சுற்றுவதைப் பார்க்க வேண்டுமானால், மேலும் அதிக சேவைத் திட்டங்களை செய்ய விரும்பினால் ரோட்ராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்களைப் பற்றி சிந்தியுங்கள். இல்லையென்றால் இந்த அமைப்பின் அழிவுக்கு நாமே காரணமாகிவிடுவோம்.

துரதிருஷ்டவசமாக, 74 சதவீதத்துக்கும் மேலான ரோட்டரி சங்கங்கள் ஒரு ரோட்ராக்ட் சங்கத்தையும், 79 சதவீத சங்கங்கள் ஒரு இன்டராக்ட் சங்கத்தையும் ஆதரிக்கவில்லை. இந்தியாவில் ரோட்டரிக்கான சிறந்த இளைஞர் சேவை வழிமுறை என்னவென்றால் ஒவ்வொரு ரோட்டேரியனும் இரண்டு ரோட்ராக்டர்கள் மற்றும் 3 இன்டராக்டர்களை கொண்டுவர வேண்டும். மண்டலம் 4-ல் உள்ள 1,333 ரோட்டரி சங்கங்களில் 381 சங்கங்கள் மட்டும் ரோட்ராக் சங்கத்தை ஆதரித்துள்ளது வருத்தமளிக்கிறது. இதன் அர்த்தம் என்னவெனில், 71 சதவீத சங்கங்கள் (952 சங்கங்கள்) ஒரு ரோட்ராக்ட் சங்கத்தைக்கூட ஆதரிக்கவில்லை என்பதுதான். இதேபோல 424 சங்கங்கள்தான் RCC-யை உருவாக்கியுள்ளன. 909 சங்கங்கள் (68 சதவீதம்) பூஜ்யத்தையே பெற்றுள்ளன.

மண்டலம் 7-ல் கூட நிலைமை சிறப்பாக இல்லை. 984 சங்கங்களில், 345 மட்டுமே ரோட்ராக்ட் சங்கத்தை ஆதரிக்கின்றன. 382 சங்கங்கள் இன்டராக்ட் சங்கத்தை ஆதரித்துள்ளன. இந்த இரண்டு மண்டலங்களிலும் சேர்த்து சரிந்த ரோட்ராக்ட் உறுப்பினர்கள் எண்ணிக்கை 22, 218. இது கவலை அளிக்கிறது என்று முருகானந்தம் கூறினார்.

### வெற்றி நிச்சயம்

புதிய மாவட்டத் தலைமைக் குழுக்கள் வரும் ஆண்டுகளில் எல்லா வகையிலும் புதிய சங்கங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். RAG அட்டவணையைப் பின்பற்ற வேண்டும். அதாவது சிவப்பு நிறத்திலிருந்து மஞ்சளுக்கும், மஞ்சளிலிருந்து பச்சை நிறத்துக்கும் மாற வேண்டும். இதை மட்டும் செய்தால் ஆண்டுக்கு 25,000 உறுப்பினர்கள் வீதம் இரண்டு ஆண்டுகளில் 50,000 உறுப்பினர்களைச் சேர்க்க முடியும்.

இங்குள்ள மாவட்டத் தலைவர்களுக்கு வழங்கப்பட்ட இலக்குகள் கடுமையானவை என்பதை ஒப்புக் கொண்ட முன்னாள் RI இயக்குநர் A S வெங்கடேஷ், பல எடுத்துக்காட்டுக்கள் மூலம் சுவாரஸ்யமான தகவல்களைச் சொல்லி, அனைவரின் கவனத்தையும் ஈர்த்து, தலைவர்கள் தங்கள் முன் உள்ள வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், இலக்குகளை அடைவதில் வெற்றிபெற முடியும் என்கிறார்.

முந்தையநாள் மாலையில் DGE-க்களில் ஒருவர் அவரிடம் அதிக பயிற்சி நிகழ்வுகள் இருப்பது குறித்து அவநம்பிக்கை தெரிவித்தார். இதற்கு பதிலளித்த அவர், புரூஸ் லீயை தொடர்புபடுத்தி ஒரு வார்த்தை கூறினார். “ஆயிரம் தந்திரங்கள்



தெரிந்த ஒருவரைப் பார்த்து நான் பயப்படவில்லை, ஆனால், ஒரு தந்திரைத்தை மட்டுமே வைத்துக் கொண்டு ஆயிரம் முறை பயிற்சி செய்த நபரை கண்டுதான் நான் பயப்படுகிறேன்" என்று புரூஸ் லீ ஒருமுறை கூறியிருந்தாராம்.

"உங்களின் திறமை மற்றும் அதனால் ஏற்படும் தாக்கம் எல்லாம் நீங்கள் எப்படி தயார்படுத்தப் படுகிறீர்கள் என்பதைப் பொருத்தது. அதற்காகத்தான் இந்த பயிற்சிகள் எல்லாம். ரிக்கி பான்டிங், ஆடுகளத்தில் அனாயசமாக பந்தை கவர் டிரைவை நோக்கி தூக்கி அடிக்கிறார். அதை நாம் பார்த்து வரவேற்று கைதட்டுகிறோம். ஆனால், அதற்கு முன் இதற்காக 20,000 முறையாக வலை பயிற்சியில் முயற்சிகள் மேற்கொண்டிருப்பார். அவர் களத்தில் இறங்கி அடிக்கும் போது இது பலருக்கும் தெரியாது".

### கடுமையாக உழைக்க வேண்டும்

இதேபோலத்தான் புதிதாக பதவியேற்க இருக்கும் தலைவர்கள் நிலையும். "நீங்கள் உங்கள் திறமையை வளர்த்துக் கொள்ள கடுமையாக உழைக்க வேண்டும். நாம் எல்லோருமே ரோட்டரியில் ஒரு முக்கிய பங்காற்ற வேண்டும் என்பதற்காகவே விருப்பத்துடன் தேர்வு செய்யப்பட்டுள்ளோம். உங்கள் ஒவ்வொருவருக்கும் "இல்லை" என்று சொல்ல வாய்ப்பு கிடைத்தது. நான் அதில் தள்ளப்பட்டேன் என்று யாரும் சொல்ல முடியாது. நீங்கள் தானாக முன்வந்து ஆளுநர் பதவியை ஏற்றுக்கொண்டீர்கள். இப்போது நீங்கள் எடுக்கும் காரியங்களில் வெற்றிபெற வேண்டுமானால் பல விஷயங்களைச் செய்யவேண்டியிருக்கும்.

உறுப்பினர்கள் பதவியை பொறுத்தவரை, வருங்கால உறுப்பினர்களிடம் அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதுபோன்ற சரியான கேள்விகளை முன்வைப்பது முக்கியமானது. நாம் நமது சொந்த சாதனைகளிலும், கிடைத்த பாராட்டுகளிலும் மயங்கிச் செல்கிறோம். அவர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் அல்லது அவர்களது விருப்பம் என்ன என்பதை கேட்கத் தவறிவிடுகிறோம். நீங்கள் இதற்கு முன் அடையாத சாதனை இலக்குகளை அடைய வேண்டுமானால், நீங்கள் வித்தியாசமான முறையில் செயல்பட வேண்டும்.

வெங்கடேஷ் மேலும் கூறினார்: "மற்றவர்களை ரோட்டரிக்கு அழைப்பதில் வெட்கப்பட வேண்டாம். இந்தியாவில் மொத்தம் 1,76,000 ரோட்டேரியன்கள் உள்ளனர். 20 சதவீதம் அல்லது 35,000 பேர் வாரம் ஒருமுறை ஒரு நபரிடம் கேட்டாலும் அது வருடத்துக்கு 50 முறையாகும். இதில் 10 சதவீதம் பேர் சேர்ந்தார்கள் எனில் புதிதாக எத்தனை உறுப்பினர்கள் சேருவார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். மக்கள் வந்து நமது சாதனைகளைப் பார்த்து, விளம்பரங்களைப் பார்த்து, டீ ஷர்ட்டுகளைப் பார்த்துவிட்டு அவர்களாகவே ரோட்டரியில் வந்து சேருவார்கள் என காத்திருந்தால் அது நடக்காது.

ஆர்வம் மற்றும் கவனத்தின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டு காட்டும் விதத்தில் "ஜாக் மா" நிறுவனத்தின் இணை நிறுவனர் அலிபாபாவின் சுயசரிதைலிருந்து ஒரு கதையை சுட்டிக்காட்டினார். 50 முயல்கள் உள்ள ஒரு அறையில், ஒருவரை 30 நிமிடங்கள் பூட்டிவைத்து, ஒரு முயலைப் பிடிக்குமாறு சவால் விட்டால், 90 சதவீதம் பேர் அதைச் செய்ய தவறிவிடுவார்கள். ஏனென்றால் அவர் எப்போதும் தனது கால்களுக்கு அருகில் இருக்கும் முயலைப் பிடிக்கவே முயற்சிப்பார். அந்த முயல் தப்பியோடிவிட்டால் அடுத்த முயலுக்காக காத்திருப்பார். இதனால் நேரம்தான் வீணாகும். இதில் உள்ள தந்திரம் என்னவென்றால், நீங்கள் 49 முயல்களின் மீது கவனம் செலுத்தாமல் ஒரு முயலின்மீது மட்டும்கவனம் செலுத்தினால், அதை துரத்திப் பிடிக்க முடியும்.

### வாய்ப்புகளைப் பாருங்கள்

பல ரோட்டரி தலைவர்களுக்கும் இதேதான் நடக்கிறது. முதலில் ஒரு திட்டத்தால் ஈர்க்கப்படுகிறார்கள். அடுத்து மற்றொரு திட்டம் அவர்களின் விருப்பத்தை ஈர்க்கிறது. அந்த ஆண்டின் முடிவில் எதையும் சாதிக்க முடிவதில்லை. மீண்டும் ரிக்கி பான்டிங்கின் சுயசரிதையை வெங்கடேஷ் இங்கே மேற்கோள் காட்டினார். ஒருமுறை ரிக்கி பான்டிங்கிடம், "பேட்டிங்கில் நீங்கள், பீல்டர்கள் எங்கு நிற்கிறார்கள் என்று கணித்து ஆடுவீர்களா என்று கேட்டதற்கு அவர், நான் பீல்டர்களை கணித்து ஆடமாட்டேன். இரண்டு பீல்டர்களுக்கு நடுவே எங்கு இடைவெளி இருக்கிறது என்று பார்த்துதான் ஆடுவேன்" என்றாராம். எனவே நாம் வாய்ப்புகளைப் பார்க்கிறோமா அல்லது தடைகளைப் பார்க்கிறோமா? இடைவெளிதான் வாய்ப்புகள். பீல்டர்கள்தான் தடைகள். களத்தில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

பின்னர் அவர், TRF-க்கு பெரு நன்கொடை அளித்து வரும்



பெங்களூருவைச் சேர்ந்த ரவிசங்கர் டகோஜுவை உதாரணம் காட்டினார். அவர் ஒரு சுற்றுச்சூழல் ஆர்வலர். ஒரு முறை விதைப்பந்து தயாரிப்பு தொடர்பாக என்னை அணுகினார். நான் நகரில் உள்ள ஒருவரிடம் அவரை அறிமுகப்படுத்தினேன். பின்னர் அதை முழுவதுமாக மறந்துவிட்டேன்.

ஆனால், அவர் என்னை மறக்க வில்லை. அவர் என்னிடம் வந்து, “நீங்கள் அறிமுகம் செய்த நபர் எனக்கு சரிபட்டு வரவில்லை. சரியான நபரிடம் என்னை நீங்கள்தான் தொடர்பு படுத்த வேண்டும்” என்றார். அடுத்த வாரம் அது நிறைவேறும் என்று நினைக்கிறேன். இதுபோன்ற ஒரே மாதிரியான நோக்கம்தான் உங்களுக்குத் தேவை. தடைகள் இருக்கலாம். ஆனால், நாம் அதைக் கடந்துதான் வர வேண்டும். நீங்கள் இதுவரை செய்யாத ஒரு விஷயத்தில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே தடைகளோ அல்லது பிரச்னைகளோ வரத்தான் செய்யும். சரியானதைத் தேர்வு செய்வது உங்கள் கையில்தான் உள்ளது. நீங்கள் தடைகளைப் பார்ப்பீர்களா அல்லது வாய்ப்புகளைப் பார்ப்பீர்களா?

இந்த மூன்று நாள் நிகழ்வுகளின் போது பல சுவாரஸ்யமான விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. ரோட்டரியில் பெண்களின் பங்கை எப்படி வலுப் படுத்துவது குறிப்பாக தலைமைப் பதவியில் என்பது குறித்து PDG S நாகேந்திரா பேசினார். அதிக பெண் உறுப்பினர்கள் மூலம் இந்தியாவில் ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க பல வாய்ப்புகள் இருந்தன. ரோட்டரியில் ஆண்கள் தான் ஆதிக்கம் செலுத்து கிறார்கள் என்கிற மனப்பான்மையை முதலில் மாற்ற வேண்டும். துரதிருஷ்ட வசமாக, பெண்களுக்கான தலைமைப் பாத்திரங்களுக்கு வரம்புகள் இருந்தன. அதே போல் கலாசார மற்றும் சமூகத் தடைகளும் இருந்தன. இவை சரி செய்யப்பட வேண்டும்.

பெண் உறுப்பினர்களைத் தேடு வதற்கு புதிய உத்திகள் தேவைப் பட்டன. அதிக பெண் மருத்துவர்கள் உள்ள மருத்துவமனைகள், அதிக பெண்கள் பணிபுரியும் கல்வி நிறுவனங்கள், மகளிர் அமைப்புகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துமாறு அவர் அவர்களுக்கு ஆலோசனை கூறினார்.



(இடமிருந்து): PDG *ராஜேஷ் அகர்வால்,* RIDEs M *முருகானந்தம் மற்றும் நாகேஷ், திஷா செயலாளர்* PDG *அனில் அகர்வால் மற்றும்* PDG *துஷ்யந்த் சவுத்ரி.*

### TRF பங்கை அதிகரிக்க புதிய வழிகள்

உள்வரும் ஆளுநர்களிடம் பேசிய PDG சாம் மோவ்வா, TRF நிதிப் பங்களிப்பை அதிகரிக்க புதிய வழிகள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான் பெக்வெஸ்ட் சொசைட்டி. இதற்கு நன்கொடை அளிப்பதன் மூலம் உறுப்பினர்கள் தங்களின் குடும்பத்தின் பெயரை பல்வேறு வழிகளில் நிலைநிறுத்த முடியும். மண்டலங்கள் 4 மற்றும் 7 இல் இதுபோன்று 43 அமைப்புகள் உள்ளன. ஒரு பெக்வெஸ்ட் என்பது குறைந்தபட்சம் 10,000 டாலர் உறுதி மொழி கொண்டது. நன்கொடை அளிப் பதற்கான பிரபலமான வழிகளில் இன்சூரன் மூலம் பணம் அளிக்கும் முறையும் ஒன்று. இந்த ஆண்டு TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா தலைமையில் ஒரு கொள்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. LIC கோடக் மஹிந்திரா மற்றும் ஆக்ஸிஸ் மாக்ஸ் போன்ற காப்பீட்டு நிறுவனங்கள் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. பங்குகள், மியூட்சுவல் பண்டுகள் மற்றும் உயில்கள் மூலமாகவும் பெக்வெஸ்ட் செய்யமுடியும் என்றார்.

### மிகப் பெரிய சவால்

திஷா மாநாட்டுத் தலைவர் PDG ராஜேஷ் அகர்வால் பேசுகையில், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது போலவே இருக்கும் உறுப்பினர்களைத் தக்கவைப்பதும் முக்கியமானது என்று குறிப்பிட்டார். “இதுதான் மிகப் பெரிய சவால். தற்போதுள்ள உறுப்பினர்கள் அனைவரையும் மதிப்புமிக்கவர்களாக நாம் கருத வேண்டும். ரோட்டரியின் அனைத்து அம்சங்களையும் சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் அனுபவிக்கும் வகையில் நாம் செயல்படுகிறோமா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

இலக்கு நிர்ணய செயல் முறைக்கான உத்திகளை PDG சுரேஷ் ஹரி விளக்கினார். DGE-க்கள் உயர்ந்த இலக்குகளை நிர்ணயிப்பதுடன் அதை அடைவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாநாட்டுச் செயலாளர் PDG அனில் அகர்வால், DRRs இடையே பேசுகையில், ரோட்டரியில் இளம் ரத்தத்தை பாய்ச்சும் வகையில் மாவட்டத் தலைவர்கள் ரோட்ராக்டர்கள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

படங்கள்: ரஷீதா பகத்

# ரோட்டரி அமைதியின் சாம்பியன்களை கௌரவிக்கிறது

*ஜனவரியில், ரோட்டரி ஆறு உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாணவர்களை "செயல் வீரர்கள்: அமைதியின் சாம்பியன்கள்" என அங்கீகரித்தது. இந்த கௌரவம் அமைதிக்கான பெறுநர்களின் பணியை கொண்டாடுகிறது.*

## மகாராஷ்டிராவில் உள்ள RC வாய்



**ஸ்வாதி ஹெர்கல்**
RC வாய்
இந்தியா

செயல் பகுதி: மீளுருவ வேளாண்மை முறைகள் மூலம் விவசாயிகளை ஆதரித்தல்

ஸ்வாதி ஹெர்கல் ஒரு முன்னாள் மாவட்ட ஆளுநர். அவர் ரோட்டரி அறக்கட்டளையின் தொழில்நுட்ப ஆலோசகர்களின் குழுவில் உறுப்பினராகவும் உள்ளார்.

ஸ்வாதி கிராமப்புற விவசாய சமூகங்களில் பொருளாதார ஸ்திரமின்மை மற்றும் சமூக சவால்களை நிவர்த்தி செய்ய ஒரு திட்டத்தை தொடங்கினார். இச்சமூகங்கள் அதிகரித்து வரும் வறுமை, வேலையின்மை, இடம் பெயர்வு மற்றும் மோசமான மண் நிலைமைகளை எதிர்கொள்கின்றன. இந்த சவால்கள் சமூக அமைதி யின்மைக்கு பங்களித்து சமத்துவ மின்மையை அதிகரிக்கின்றன. ஸ்வாதியின் முயற்சி, விவசாயிகள் உரம் மற்றும் பிற நிலையான விவசாய நடைமுறைகளை பயன்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரிக்க ஊக்குவிக்கிறது.

திட்டத்தின் முதல் கட்டத்தில், பங்கேற்ற 70 விவசாயிகள் செலவுகள் குறைந்தது, பயிர் உற்பத்தி அதிகரித்தது மற்றும் மண் விளைபிறப்பு மேம்பட்டது என்று தெரிவித்தனர். அவர்கள் ஒரு ரோட்டரி சமூகப் படையில் சேர்ந்து, புதுமையான முறைகளை ஏற்க ஆர்வமாக இருந்த 1,200-க்கும் மேற்பட்ட பிற விவசாயிகளுக்கு வழிகாட்டினர். இந்தச் சமூகங்களில் உள்ள பெண்கள் உரம் தயாரித்து விற்று, அதன் மூலம் பொருளாதார சுயநிலையை பெற்றனர். இந்த முயற்சி இப்போது மேலும் 50 கிராமங்களுக்கு விரிவுபடுத்தப்படுகிறது.

## ரோட்டரி பீஸ் ஃபெல்லோ



**ஆன் கியர் பாத்தேல்**
ஜெர்மனி

செயல் பகுதி: அகதி குழந்தைகளை டிஜிட்டல் உலகத்திற்கு தயார்படுத்துதல்

ஆன் கியர் பாத்தேல் ஒரு ரோட்டரி பீஸ் பெல்லோ, முன்னாள் ரோட்டரி இளைஞர் பரிமாற்ற மாணவர், சமூக தொழில்முனைவோர், வழிகாட்டி மற்றும் ReDI ஸ்கூல் ஆஃப் டிஜிட்டல் இன்டெக்ரேஷனின் நிறுவனர்.

ஜெர்மனியில் அகதி குழந்தைகளுக்கு தொழில்நுட்ப கல்வியை வழங்கும் ReDI டிஜிட்டல் கிட்ஸ் திட்டத்தை உருவாக்க மற்றும் செயல்படுத்த ஆன் உதவினார். இந்த திட்டம் குழந்தைகளின் ஆர்வம் மற்றும் படைப்பாற்றலை வளர்க்கிறது மற்றும் குழு அமைப்புகளில் தொடர்பு கொள்ளவும் அவர்களை ஊக்குவிக்கிறது. இது டிஜிட்டல் கல்வியறிவையும் உருவாக்குகிறது, பங்கேற்பாளர்கள் ஆன்லைன் உலகத்தை பாதுகாப்பாகவும் நம்பிக்கையுடனும் அணுக உதவுகிறது.

திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் 296 குழந்தைகள் மற்றும் 78 ஆசிரியர்கள் ஈடுபட்டனர். சமூகத்துடனான தொடர்ச்சியான ஈடுபாடு திட்டத்தின் நிலைத்தன்மையின் முக்கிய அம்சமாக இருந்து வருகிறது. பெருநிறுவன மற்றும் அரசாங்க கூட்டாளர்களின் நிதியுதவியுடன் நன்றி, இது இப்போது ஜெர்மனி முழுவதும் 4,000-க்கும் மேற்பட்ட அகதி மற்றும் புலம்பெயர்ந்த குழந்தைகளுடன் பணியாற்றியுள்ளது.

## ரோட்டரி பீஸ் ஃபெல்லோ



**மரியா கிறிஸ்டினா சிஃபுயெண்டஸ்**
கொலம்பியா

செயல் பகுதி: கொலம்பியாவின் தேசிய நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளில் அமைதி கட்டியெழுப்பலை ஒருங்கிணைத்தல்


ரோட்டரி பீஸ் பெல்லோ, அமைதிக்கான ரோட்டரி செயல் குழுவின் உறுப்பினர் மற்றும் உலகளாவிய காலநிலை நீதி தூதர் மரியா கிறிஸ்டினா சிஃபுயெண்டஸ், கொலம்பியாவின் தேசிய நிர்ணயிக்கப் பட்ட பங்களிப்புகளில் (NDC) அமைதி கட்டியெழுப்பல் அணுகுமுறையை ஒருங்கிணைக்க ஒரு முன்னோடி திட்டத்தை வழிநடத்துகிறார். NDC என்பது ஐ.நா.வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட காலநிலை செயல் திட்டம் ஆகும். கொலம்பியாவின் NDC காலநிலை மாற்றத்திற்கு எதிரான நிலைத்தன்மை மற்றும் மீள்தன்மைக்கு அமைதியை ஒரு முக்கியமான அங்கமாக இணைப்பது இதுவே முதல் முறை.

இந்த திட்டம் கொலம்பியாவின் NDC-க்கு ஐந்து தூண்களை நிறுவுகிறது: ஆளுகை மற்றும்

வெளிப்படைத்தன்மை, சமூக மேம்பாடு மற்றும் மனித உரிமைகள், நிலையான வளர்ச்சி மற்றும் நேர்மறை அமைதி, மனித பாதுகாப்பு மற்றும் காலநிலை மீள்தன்மை மற்றும் புதுமை மற்றும் திறன் மேம்பாடு. குழந்தைகள், பழங்குடியினர் மற்றும் கிராமப்புற மக்கள் உட்பட பாதிக்கப்படக்கூடிய மற்றும் வரலாற்று ரீதியாக முடிவெடுக்கும் செயல்முறைகளில் இருந்து விலக்கப்பட்ட சமூகங்களில் இது கவனம் செலுத்துகிறது.

ஒரு ரோட்டரி பீஸ் பெல்லோவாக முதுகலை பட்டப்படிப்பின் போது, மரியா பலவீனமான சூழல்களில் அமைதியை வளர்ப்பதற்கான ஒரு கட்டமைப்பை வடிவமைத்தார். காலநிலை இலக்குகளுடன் ஒத்துப் போகும் வகையில், இந்த முறையை கொலம்பியாவின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு முன்மொழிந்தார். 2025–2030க்கான NDC 3.0 புதுப்பிப்பில் இந்த கட்டமைப்பு ஒருங்கிணைக்கப்பட்டது.

## ரோட்டரி பீஸ் ஃபெல்லோ



**டொமினோ ஃபிராங்க்**
சாட் (Chad)

செயல் பகுதி: பெண்களை வேலைக்கு தயார்படுத்துதல்

டொமினோ ஃபிராங்க் 20 ஆண்டுகளுக்கும் மேலான மனிதாபிமான மேம்பாடு மற்றும் அமைதி கட்டியெழுப்பலில் அனுபவம் வாய்ந்த ஒரு ரோட்டரி பீஸ் பெல்லோ. அவர் சாட்டின் குரெடாவில் உள்ள அமைதி வழித்தடங்கள் திட்டத்திற்கான ஒரு மூலோபாய வழக்கறிஞர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர். அவர் இடம் பெயர்ந்த பெண்கள் மற்றும் மோதல் மண்டலங்களில் உள்ள இளைஞர்களுக்கு கல்வி, தொழிற்கல்வி மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு போன்ற முக்கிய சேவைகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறார்.

அமைதி வழித்தடங்கள் கல்வியறிவு மற்றும் தையல், விவசாயம், சோப்பு தயாரித்தல் மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய மற்றும் நிலையான பிற திறன்களில் பயிற்சி அளிக்கிறது. இந்த தொழில்களைக் கற்றுக்கொள்வதன் மூலம், பெண்கள் வருமானம் ஈட்டலாம், அவர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தலாம் மற்றும் நிதி சுதந்திரத்தை அடையலாம்.

## ரோட்டரி பீஸ் ஃபெல்லோ
## RC குளோபல் பார்ட்னர்ஸ் இன் பீஸ்



**லிண்டா லோ**
அமெரிக்கா

செயல் பகுதி: சவாலான பிரச்சினைகள் குறித்த உரையாடல்களைத் தொடங்குதல்

வாஷிங்டனின் சியாட்டலை தளமாகக் கொண்ட லிண்டா, பிளவு மற்றும் கருத்து வேறுபாட்டைக் குறைக்க பல்வேறு குழுக்களிடையே உரையாடலை எளிதாக்கும் ஒரு செயல்முறையை உருவாக்கினார். தலைமை உரையாடல்கள் எனப்படும் இந்த திட்டம் 2016இல் உருவாக்கப்பட்டது மற்றும் இப்போது அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதும் உள்ள சமூகங்களில் பயன்படுத்தப்படுகிறது.

தலைமை உரையாடல்கள் கடினமான பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க மக்களை ஒன்றிணைக்கிறது மற்றும் பங்கேற்பாளர்களுக்கு மற்றவர்களின் பார்வைகளைப் பற்றிய புரிதலை அளிக்கிறது. பகிரப்பட்ட மதிப்புகள், சிந்தனைமிக்க கேட்டல் மற்றும் பச்சாதாபம் ஆகியவற்றை வலியுறுத்துவதன் மூலம், தலைமை உரையாடல்கள் மக்கள் ஆக்கபூர்வமான விவாதத்தில் ஈடுபடவும் வெவ்வேறு கருத்துக்கள் மற்றும் அனுபவங்களை பாராட்டவும் ஊக்குவிக்கிறது. இதனால் சமூகங்கள் மேலும் வலுப்பெற்று ஒத்துழைப்புடன் செயல்படுகின்றன. லிண்டா தனிப்பட்ட முறையில் 2,000 பேருடன் உரையாடல்களை எளிதாக்கியுள்ளார், அவர்களில் பாதி பேர் ரோட்டரி உறுப்பினர்கள்.

## ரோட்டரி ஈ-கிளப் ஆஃப் குளோபல் இம்பாக்ட், RID 1990



**சனெலா மியூசிக்**
போஸ்னியா-ஹெர்சகோவினா

செயல் பகுதி: மீள்தன்மை, நம்பிக்கை மற்றும் தொடர்பை உருவாக்குதல்

சிறு குழந்தையாக சனெலா மியூசிக் 1992–1995 போஸ்னியா-ஹெர்சகோவினா போரிலிருந்து தப்பி ஓடிய அகதி. இன்று, அவர் ஒரு சர்வதேச மனித வள ஆலோசகர், ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான ரோட்டரி பிரதிநிதி மற்றும் TRF மற்றும் SANCHILD அறக்கட்டளையுடன் பணிபுரியும் அர்ப்பணிப்புள்ள அமைதி கட்டியெழுப்புபவர் ஆவார்.

சனெலா ஹார்மனி திட்டத்தை வழிநடத்துகிறார், இது குணப்படுத்துதலை ஊக்குவிக்கும் மற்றும் நீடித்த அமைதியை உருவாக்கும் உரையாடல்களை நடத்த சமூகங்களுக்கு உதவுவதன் மூலம் போருக்குப் பிந்தைய அதிர்ச்சியை நிவர்த்தி செய்கிறது. 2021இல் தொடங்கப்பட்ட இத்திட்டம், ஆயிரம் தனிநபர்களுக்கு பயனளித்த மற்றும் 34 நகரங்களில் சுமார் 50,000 மக்களை மறைமுகமாக பாதித்த 47 முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

பள்ளிகளில் உள்ள ஹார்மனி திட்டம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் உணர்ச்சிகளை நிர்வகிக்கவும் மீள்தன்மை மற்றும் நம்பிக்கையை உருவாக்கவும் உதவுகிறது. போஸ்னியா-ஹெர்சகோவினாவில் உள்ள இரண்டு கல்வி அமைச்சகங்களால் அங்கீகரிக்கப்பட்ட இந்த திட்டம் மோதல்கள், களங்கங்கள் மற்றும் கலாச்சார பிளவுகளை குறைக்கிறது.

©rotary.org

# TRF: வளர்ச்சிக்கான உரம்

ரஷீதா பகத்

சமீபத்தில் ஜெய்ப்பூரில் மண்டலம் 4 மற்றும் 7-ல் வரவிருக்கும் ஆளுநர்களுக்கான இலக்கு நிர்ணய கருத்தரங்கான திஷா மாநாட்டில், ஒவ்வொரு தலைவரும் வழங்கிய ஒரே செய்தி ரோட்டரியின் உறுப்பினர்த்துவத்தை மையமாகக் கொண்டு புதிய உறுப்பினர்களை ஈர்ப்பது, தற்போதுள்ளவர்களை தக்கவைப்பது, இந்தியாவில் ரோட்டரியில் பாலின சமநிலையை அதிகரிப்பது மற்றும் ரோட்டராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது என்பதாகும்.

'வளர்ச்சிக்கான ஊக்குவிப்பு TRF' என்ற தலைப்பில் தொடக்க அமர்வில் உரையாற்றிய TRF அறங்காவலர் பரத் பாண்டியா, "ரோட்டரியில் மிக முக்கியமான விஷயம் உறுப்பினர்த்துவம்; இது சமூக சேவை, பொது உருவம் அல்லது TRF என எதுவாக இருந்தாலும், ரோட்டரியின் மையத்திலும் இதயத்திலும் உள்ளது. ரோட்டேரியர்கள் ரோட்டரியின் இதயம், TRF ரோட்டரியின் முதுகெலும்பு, மேலும் நம் செயல் திட்டம் மற்றும் தொலைநோக்கு அறிக்கையுடன் இணைந்து, மக்கள் நீடித்த மாற்றத்தை உருவாக்க வேலை செய்யும் உலகத்தை நாம் காண்கிறோம்" என்றார்.

TRF-ன் உண்மையான மந்திரம் உலகளாவிய மானியங்கள் மூலம் நிகழ்கிறது; உலகளாவிய மானியங்கள் ஒரு மனிதனுக்கு மீன் கொடுப்பது மட்டுமல்லாமல், மீன் பிடிப்பது எப்படி என்று அவனுக்குக் கற்றுக்கொடுப்பது போன்றது, இதனால் திட்டம் சுய-நிலையானதாக மாறும், மக்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கவும் தங்கள் வாழ்வாதாரத்தை சம்பாதிக்கவும் முடியும்." என்று அவர் கூறினார்.

உலகளாவிய மானியங்கள் குறித்து ரோட்டேரியர்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்பதை அறிய TRF சமீபத்தில் ரோட்டேரியர்களிடையே நடத்திய ஆய்வின் முடிவுகளை DGEகள், DGNகள் மற்றும் பிற மண்டலத் தலைவர்களுடன் பாண்டியா பகிர்ந்து கொண்டார். சுமார் 10 சதவீதம் பேர் பதிலளித்தனர், அவர்களில் 20 சதவீதம் பேர் உலகளாவிய மானியங்களில் பங்கேற்றனர். அவர்களில் 91 சதவீதம் பேர் திருப்தி அடைந்தனர், 92 சதவீதம் பேர் உலகளாவிய மானியங்கள் தங்கள் ரோட்டரி அனுபவத்தின் ஒரு முக்கிய பகுதியாக உணர்ந்தனர், மற்றும் 87 சதவீதம் பேர் மீண்டும் அதை செய்ய விரும்பினர். "உலகளாவிய மானியங்கள் ரோட்டரியின் தாக்கத்தை அதிகரிப்பதற்கும் அதன் உறுப்பினர்களை வளர்ப்பதற்கும் மட்டுமல்லாமல், தற்போதுள்ள உறுப்பினர்களை ஈடுபாட்டுடனும் மகிழ்ச்சியுடனும் வைத்திருக்கவும்

*TRF அறங்காவலர் பரத் பாண்டியா மற்றும் RI இயக்குனர் ராஜு சுப்பிரமணியன் (இடமிருந்து) திஷா கமிட்டி உறுப்பினர் V G கிரண் குமார், மாநாட்டு செயலாளர் PDG அனில் அகர்வால், கான்க்ளேவ் தலைவர் PDG ராஜேஷ் அகர்வால், உமா மற்றும் RIDE K P நாகேஷ், மற்றும் கன்ஷ்யாம் சிங் ஆகியோருடன்.*



முக்கியம்” என்பதை இது நிரூபித்தது என்று அவர் கூறினார்.

2023–24 ஆம் ஆண்டில் TRF நடத்திய மற்றொரு ஆய்வில், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பழமையான சங்கங்களில், பதிலளித்த சங்கங்களில் 51 சதவீதம் ஏதோ ஒரு வடிவத்தில் உலகளாவிய மானியங்களில் பங்கேற்றுள்ளன. அவர்கள் திட்டத்திற்காக எழுதியிருந்தும், ஆதரித்திருந்தும், கொஞ்சம் பணம் வழங்கியிருந்தும், திட்டத்தை வழிநடத்தியும், சர்வதேச கூட்டாளர்களாக இருந்தும் அல்லது திட்டத்தை செயல்படுத்தியும் பங்காற்றியுள்ளனர்.

“உறுப்பினர்களை வளர்ப்பதற்கும், தாக்கத்தை அதிகரிப்பதற்கும், நம் வரம்பை விரிவுபடுத்துவதற்கும், பங்கேற்பாளர் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கும் TRF ஒரு மிக முக்கியமான கருவி என்பதை இது நிரூபித்தது. இதற்கு ஒரு சிறந்த உதாரணம் போலியோ. ஜார்ஜ் பெர்னாட் ஷாவிடம் ரோட்டரி எங்கே செல்கிறது என்று ஒருமுறை கேட்கப்பட்டது. அவர் மிகவும் நையாண்டியான நபர், அது மதிய உணவுக்கு செல்கிறது என்றார். ஒரு மது அருந்தும், உணவு உண்ணும் அமைப்பாக இருந்த அந்த உருவத்திலிருந்து, ரோட்டரியின் உருவம் ஒரு பெரிய மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது, இதற்கு காரணமான ஒரு திட்டம் போலியோபிளஸ் திட்டம், இத்திட்டம் ரோட்டரியை உலக அமைப்புகள் மற்றும் அரசுகளுடன் ஒன்றாக மைய மேசையில் அமர்த்தும் அளவுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது” என்று பாண்டியா கூறினார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெர்லினில் நடைபெற்ற உறுதிமொழி நிகழ்வில், ரோட்டரி மீண்டும் போலியோவுக்காக $150 மில்லியன் உறுதி செய்தபோது, மற்ற அரசாங்கங்களும் உறுதியளித்தன. அந்த நிகழ்வில், கேட்ஸ் அறக்கட்டளை பிரதிநிதிகள் தெளிவாகக் குறிப்பிட்டதாவது, “அரசுகள் நிதி உறுதிமொழி அளிப்பதற்கு காரணம் TRF ஏற்படுத்திய நம்பிக்கை, மதிப்பிற்குரிய கண்ணியம் மற்றும் விசுவாசமாகும்.”

அடுத்து, ரோட்டரி அமைதி மையங்களின் முக்கியத்துவத்தையும், அவை பயிற்சி அளிக்கும் அமைதி அறிஞர்களை பற்றியும் பாண்டியா விளக்கினார். “இன்று 1,800 அமைதி அறிஞர்கள் பல்வேறு அமைப்புகளில் பல்வேறு நிலைகளில் பணிபுரிகின்றனர். சிலர் காவல்துறையிலும், சிலர் அரசு சேவையிலும், WHO, UNICEF போன்றவற்றிலும் உள்ளனர். அவர்கள் உண்மையில் தங்கள் சொந்த வழிகளில் அமைதியையும் நல்லெண்ணத்தையும் கொண்டு வரவும், ரோட்டரியின் உருவத்தை மேம்படுத்தவும் வேலை செய்கிறார்கள்.”

ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல், அவற்றில் முதல் மூன்று ஆப்பிரிக்காவுக்குச் சென்றன, நான்காவது இந்தியாவுக்கு நீர் சேகரிப்பு, பழ மரங்களை நடுதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அதே வேளையில் விவசாய வருமானத்தை மேம்படுத்த வழங்கப்பட்டது. இவை அனைத்தும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அறங்காவலர்கள் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் கூட்டத்தில் ஐந்தாவது ப்ரோக்ராம் அஃப் ஸ்கேல் பெறுநரைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

2025–26-ம் ஆண்டில் அறக்கட்டளையின் முன்னுரிமைகளை விவரிக்கும் TRF அறங்காவலர், “போலியோ ஒழிப்பு அறக்கட்டளையின் முன்னுரிமையாக இருந்தது, இருக்கிறது, இருக்கும். 2023-ல் பன்னிரண்டு போலியோ வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன, கடந்த ஆண்டு 99 போலியோ வழக்குகள், இந்த ஆண்டு ஏழு (இதுவரை). அமெரிக்க அரசாங்கம் WHOக்கான ஆதரவை திரும்பப் பெற்று USAID-ஐ நிறுத்தியுள்ளது. ஆகவே, சவால்கள் உள்ளன, ஆனால் நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன், TRF போலியோவை ஒழிப்பதற்காக உறுதியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, ஏனெனில் அது இந்த உலகின் குழந்தைகளுக்கு நாம் அளித்த வாக்குறுதியாகும்” என்று கூறினார்.

தனது உரையில், RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் வழிநடத்துதலின் முக்கியத்துவத்தைப் பற்றி விவரித்தார், “தலைமைக்கான பாரம்பரிய மேல்-கீழ் அணுகுமுறை இனி முக்கியமல்ல; அதற்கு பதிலாக, தனிநபர்களுக்கு அதிகாரம் அளிக்கும், ஒத்துழைப்பை வளர்க்கும் மற்றும் அர்த்தமுள்ள மாற்றத்தை இயக்கும் ஒன்றாக வழிநடத்துதல் உருவெடுத்துள்ளது” என்றார்.

RI 20 ஆண்டுகளுக்கு முன்பு உரையாடல் மற்றும் வழிநடத்துதலின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தது, சர்வதேச சபையில் வழிநடத்துதலை அறிமுகப்படுத்தியது. வழிநடத்துதல் என்பது “ஒரு பொதுவான இலக்கை



**TRF அறங்காவலர் பாண்டியா**

அடைய ஒரு குழுவிற்கு வழிகாட்டும் கலை. ஒரு வழிநடத்துனர் முடிவுகளை திணிக்க மாட்டார். கடந்த காலங்களில் பாரம்பரிய தலைமை பாணிகளைப் போலல்லாமல், ஒரு தலைவர் முடிவுகளை ஆணையிட மாட்டார், அவர் ஒரு நடுநிலையான வழிகாட்டியாக செயல்படுகிறார்.

எனவே திஷா போன்ற ரோட்டரி பயிற்சி நிகழ்வுகளில், வழிநடத்துநர்கள் அனைவரும் "தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தவும், கவனத்துடன் கேட்கவும் மற்றும் பகிரப்பட்ட தீர்வுகள் மற்றும் பணியை அடைய உதவினர். இது மக்கள் ஒத்துழைக்கவும் ஒன்றாக சிறந்த முடிவுகளை எடுக்கவும் அதிகாரம் அளிக்கிறது."

"கூட்டங்கள் சரியான நேரத்தில் நடத்தப்படுவதையும், தலைப்பிலிருந்து விலகிச் செல்லாமல் இருப்பதையும் நீங்கள் உறுதி செய்கிறீர்கள். வழிநடத்துநர்கள் யோசனைகள், நுண்ணறிவு மற்றும் புதுமைகளுக்கு இடமளிக்கிறார்கள், விவாதங்களை பயனுள்ளதாக செய்கிறார்கள் மற்றும் தெளிவுடன் முடிவெடுப்பதை எளிதாக்குகிறார்கள்," என்று கூறினார்.

தெளிவும் பயனும் உள்ள நிலையில் தீர்வு எளிதாக எடுக்க முடிந்தால், வழிநடத்தல் மாற்றத்தை உருவாக்கக்கூடியதாக இருக்கும்.



RIDE நாகேஷ், உமா, RID சுப்பிரமணியன் ஆகியோர் குத்துவிளக்கேற்றுகிறார்கள். அறங்காவலர் பாண்டியா, PDGக்கள் S நாகேந்திரா, கஜேந்திர நரங், ராஜேஷ் அகர்வால் ஆகியோரும் உள்ளனர்.

சிறந்த ஒத்துழைப்பு குழுப்பணியையும் திறந்த தகவல்தொடர்பையும் ஊக்குவிக்கிறது, மேலும் "ஒரு மனிதனின் யோசனை ஒரு முடிவுக்கு வழிவகுக்கும் இறுதி எண்ணமாக இருக்க வேண்டிய அவசியமில்லை, ஆனால் ஒன்றாக, நாம் ஒரு சிக்கலை அணுகும்போது, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை நாம் காண்கிறோம். உள்ளடக்கிய உரையாடல் படிநிலையைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் ஒரு குரலைக் கொடுக்கிறது" என்பதை அனைவருக்கும் உணர வைக்கிறது.

தலைவர்களின் குழுவில் இத்தகைய வழிநடத்துதலின் நன்மைகளை அடிக்கோடிட்டுக் காட்டி, ஒரு நல்ல வழிநடத்துநர் உரையாடலை சீராக நடத்துவது மட்டுமல்லாமல், மற்றவரின் யோசனை உங்களை விட சிறப்பாக இருக்கும் என்பதை மக்களுக்குக் காட்டுவார் என்று அவர் கூறுகிறார். "இது ஈகோ மற்றும் நான் என்ற காரணியையும் குறைக்கிறது, ஏனென்றால் நீங்கள் மற்றவரின் யோசனையை ஏற்றுக்கொள்கிறீர்கள், கேட்க கற்றுக்கொள்கிறீர்கள் மற்றும் மற்றவரின் பார்வையும் சரியாக இருக்கலாம் என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள்."




RI இயக்குனர்
ராஜு சுப்பிரமணியன்

RI இயக்குனரின் கூற்றுப்படி, முக்கிய பிரச்சனை என்னவென்றால், "கூர்ந்துக் கேட்கும் செயலை நாம் மறந்துவிட்டோம். ஆனால் ஒரு வழிநடத்துநர் கூர்ந்துக் கேட்கிறார் மற்றும் மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதில் நெருக்கமான கவனம் செலுத்துகிறார், மேலும் வெவ்வேறு கண்ணோட்டங்களை ஒப்புக்கொள்கிறார். ஐந்து பேர் ஒரே மாதிரியாக நினைக்க மாட்டார்கள். ஆனால் ஒரு நல்ல வழிநடத்துநருடன் ஒரு அறையில் உட்காரும்போது, நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு முடிவுக்கு வருவீர்கள்."

விவாதத்திற்கு வழிகாட்ட சக்திவாய்ந்த மற்றும் திறந்த கேள்விகளைக் கேட்பது ஒரு நல்ல வழிநடத்துநரின் மற்றொரு பண்பு, அவர் அறைக்குள் நுழைவதற்கு முன் பல நாட்கள் பயிற்சி பெற்றிருப்பார். அவர் விவாதத்தை வழிநடத்தும் விதத்தால் ஒவ்வொருவரும் தான் வித்தியாசமாக சிந்திக்க வேண்டுமா என்றும் மற்றவருக்கு சிறந்த கண்ணோட்டம் உள்ளதா என்றும் சிந்திப்பர்.

DEI - பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் - பற்றி வரும்போது, ஒரு நல்ல வழிநடத்துநர் அனைத்து பங்கேற்பாளர்களையும் வசதியாக உணர வைக்க வேண்டும். மேலும் குழு விவாதத்தை வழிநடத்தும் போது எப்போதும் நடுநிலையாக இருக்க வேண்டும் என்று சுப்பிரமணியன் கூறினார்.

படங்கள்: ரஷீதா பகத்

திஷா புவனேஸ்வர் அடுத்த இதழில்.



Rotary District 3233
THE MAGIC OF ROTARY
Rotary International District 3233
calls you to
Step Into the Spotlight!
Fun, fashion, and surprises await!
Saturday 9 am – 5 pm
19
April 2025
St. Thomas College Auditorium
Koyambedu, Chennai
Golden Sparrow
CELEBRATING WOMEN IN ROTARY
Interactive Events | Lip smacking Breakfast & Lunch | Inspiring Speakers | Engaging Entertainment | Open to all
Scan the QR code to register now!
Reg. Fees - Women Rs.1,000/-
Men - Rs. 2,500/-
Rtn. S. Mahaveer Bothra
District Governor
Rtn. Jayashree Bothra
Event Mentor
Dr. Sujatha Srinivasan
Event Chair
PDG Rtn. A P Kanna
Event Advisor
Rtn. A. Anees Begam
Event Co-chair
Lalitha Sriram
Event Secretary
For more details, Contact Lalitha Sriram at +91 98 404 79 424


ADVT.




Rotary PEOPLE OF ACTION

# பெண்களிடம் மாற்றத்தைத் தூண்டுதல்

ஜெய்ஸ்ரீ

“இரண்டு ஆண்டுகளில் ஒன்பது பெண்களை நாங்கள் ஓட்டுநர்களாக்கியிருக்கிறோம் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்கிறோம்” என்று சிரிக்கிறார் RC ரூர்கேலா க்வீன்ஸ், RID 3261, செயலாளர் கனக்ஜீத் அகர்வால்.

சென்ற ஆண்டு, இந்தச் சங்கம் தன்னுடைய அப்போதைய தலைவர் கிரண் அரோரா தலைமையில் சக்ஷம் என்ற திட்டத்தைத் தொடங்கியது. இதன் நோக்கம், “ஒரு நாளைக்கு மட்டுமின்றி, வாழ்நாள் முழுக்கப்” பெண்களுக்கு ஆற்றல் அளித்தல். வண்டி ஓட்டும் திறனுள்ள, உரிமம் வைத்திருக்கிற ஐந்து ஏழைப் பெண்கள் அடையாளம் காணப்பட்டார்கள், அவர்கள் வாழ்வாதாரத்தைப் பெற உதவுவதற்கென அவர்களுக்கு மின் ஆட்டோரிக்ஷாக்கள் வழங்கப்பட்டன.

“இந்தப் பெண்கள் செலவுகளைச் சமாளிக்கும் அளவு வரவு இல்லாமல் தடுமாறிக்கொண்டிருந்தார்கள். ஆனால், முன்னேறவேண்டும் என்ற உறுதியுடன் இருந்தார்கள். இப்போது, ஓராண்டுக்குப்பிறகு, அவர்கள் எல்லாரும் சொந்தக் காலில் நிற்கிறார்கள், தங்கள் குடும்பங்களுக்கு உதவுகிறார்கள், தங்கள் எதிர்காலத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். இதைக் கண்டு நாங்கள் மகிழ்கிறோம்” என்கிறார் இவர். மண்டோதரி முன்பு பணிப்பெண்ணாக வேலை செய்தவர், தன் மகள்களைப் படிக்கவைக்கச் சிரமப்பட்டவர். இப்போது, அவர்களுடைய எதிர்காலத்துக் கேற்ற நிலையான வருவாய் அவருக்கு வருகிறது. மஞ்சு முன்பு அங்கொன்றும் இங்கொன்றுமாக வேலை செய்தார், இப்போது, தன் குடும்பத்தின் முதுகெலும்பாகிவிட்டார். மந்தாகினி ஒரு கைம்பெண். சக்ஷம் திட்டத்தின்மூலம் பலன் பெற்ற மற்ற இருவர் சந்தோஷி, ராஷ்மிதா. இவர்கள் அனைவரையும் இந்தத் திட்டம் சாதனையாளர்களாக்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் வெற்றியால் ஊக்கம் பெற்ற இந்தச் சங்கம், மார்ச் 8 பன்னாட்டு மகளிர்



*புதிய ஆட்டோக்களுடன் பெண்கள்.*

**கீழே:** RYLA *பங்கேற்பாளர்கள்.*



நாளன்று, தலைவர் பர்கா குப்தா தலைமையில், பல சவால்களைச் சந்தித்துவந்த நான்கு பெண்களுக்கு மின் ஆட்டோரிக்ஷாக்களைக் கொடையளித்தது. சென்ற ஆண்டு பலன் பெற்ற ஐவரும் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். இந்த ஆண்டு பலன் பெறுகிறவர்களுடைய புதிய, ஆற்றல் மிக்க பயணத்தில் இவர்கள் வழிகாட்டுவார்கள், அவர்களை ஊக்குவிப்பார்கள். அவர்களுடைய போராட்டமும் வெற்றியும் அங்கிருந்த அனைவரையும் வியக்கவைத்தன.

“அன்று பலன் பெறுவோராக இருந்த இந்தப் பெண்களை இன்று வலுவான, பொருளாதார விடுதலை பெற்றவர்களாகப் பார்த்தபோது, எங்கள் முன்னெடுப்பு உண்மையான மாயம் செய்துள்ளது என்று புரிந்துகொண்டோம். அது எங்கள் அனைவருக்கும் பெருமையான நேரம்” என்கிறார் கனக்ஜீத். இந்த நிகழ்வில் DGN ஆலம் சிங் ரூப்ரா, பதிவுத் தலைவர் ஹர்பால் ரூப்ரா, சமூகப் பணியாளர் பூனம் கெர்கெட்டா ஆகியோர் பங்கேற்றார்கள்.

இந்தத் திட்டத்தின் நேர்மையைப் பராமரிப்பதற்கென, பலன் பெறும் ஒவ்வொருவரும் இந்தச் சங்கத்தால் கவனமாகப் பரிசோதிக்கப்படுகிறார்கள். வண்டிகள் விற்கப்படுவது, தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கெனச் சட்ட ஆவணங்களில் கையொப்பமிடப்படுகிறது. “நாங்கள் எப்போதும் அவர்களுடைய முன்னேற்றத்தைப் பின்தொடர்கிறோம். ஏனெனில், சங்கம் தொடர்பான போக்குவரத்துத் தேவைகளுக்கு நாங்கள் அவர்களுடைய சேவைகளைப் பயன்படுத்துகிறோம். எங்கள் உறுப்பினர்களில் பலர் தங்கள் குழந்தைகளைப் பயிற்சி வகுப்புகளில் விடவும், மற்ற தனிப்பட்ட வேலைகளுக்கும் இவர்களுடைய சேவைகளைப் பயன்படுத்துகிறார்கள்” என்கிறார் திட்டத் தலைவர் சீமா பொட்டார். இதனால் அவர்களுக்கு நிலையான வாடிக்கையாளர் வட்டம் கிடைப்பதுடன், பொருளாதாரப் பாதுகாப்பும் உறுதிசெய்யப்படுகிறது என்று தொடர்ந்து சொல்கிறார் கனக்ஜீத். 2018-ல் பதிவு செய்யப்பட்ட இந்தச் சங்கத்தில் 59 உறுப்பினர்கள் உள்ளார்கள்.

இந்த மின் ஆட்டோரிக்ஷாக்களின் விலை, தலா ரூ.2 லட்சம். இந்தத் திட்டத்திற்கு ஆதரவளித்தோர், ஈஸ்டர்ன் அல்லாய்ஸ், சங்க உறுப் பினர்கள் அபா மொஹுந்தா, ஜோதி அகர்வால். இரண்டு ஆண்டுகளிலும் சங்க ஆலோசகர் அஜய் அகர்வால் திட்டத்துக்கான வழிகாட்டலை வழங்கினார். இந்தச் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிரிஷ்மா பர்மார், சக்ஷம் திட்டத்தின் தாக்கத்தால் ஊக்கம் பெற்றுள்ளார், வரும் ரோட்டரி ஆண்டிலும் இது தொடரும் என்று உறுதியளித்துள்ளார்.

இந்தச் சங்கம் ரூர்கேலா-வில் உள்ள திருமண அரங்கமான அக்ராசென் பவனில் 150 பள்ளி மாணவர்களுக்கு மூன்று நாள் RYLAவை நடத்தியது. இந்த முகாம் தலைமைப்பண்பு மேம்பாட்டில் கவனம் செலுத்தியது. எதிர்காலத்துக்காக ஆயத்தமாகும்போது, பண்பாட்டு மதிப்பீடுகளைப் பின்பற்றவேண்டும் என்று PDG அசோக் சிங் பங்கேற்பாளர்களை ஊக்குவித்தார். இந்த நிகழ்ச்சியில் PDG F C மொகந்தி, DGN ரூப்ரா, மாவட்ட RYLA தலைவர் ரஞ்சித் சிங் ஹூரா, இன்டராக்ட் தலைவர் உத்தம் கார்க் பங்கேற்றனர். இந்த RYLA காட்டு நடையில் தொடங்கி CPR கற்பித்து வாழ்க்கைத் திறன்களின் கலவையை வழங்கியது.■

# நாரை பறவைகள், சிறப்புக் குழந்தைகள், பெண் போலீஸார்... மும்பை ரோட்டேரியன்கள் செய்யும் சேவை

ரஷீதா பகத்



ஆதேஷ் ஷிவ்கர்.

மும்பை பே வியூ ரோட்டரி சங்கத்தின் (RID 3141) உறுப்பினர்கள் நவி மும்பையில் உள்ள சதுப்பு நிலக் காடுகள் வழியாக பறவைகள் அலைந்து திரிவதை பார்த்ததும், திடுக்கிட்டனர். அழகிய நீர் பறவைகள் சிறகை விரித்து பறந்து வரும் நிலை பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தாலும், அந்தப் பகுதியில் குவிந்து கிடக்கும் பிளாஸ்டிக் கழிவுகள், குப்பைகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் நிலையில் அதைத் தடுக்க முற்பட்டனர்.

“நாரை நீர்பறவைகளின் அழகிய காட்சியும், அழுக்கு படிந்த பிளாஸ்டிக் கழிவுகளுக்கும் இடையிலான வேறுபாடு மனதை உறுத்தியது. சுற்றுச்சூழல் பாதுகாப்பின் மீது மனிதர்கள் காட்டும் அலட்சியம் தான் இதற்கு காரணம். இந்த நிலையில் இதற்கு தீர்வுகாண உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டது” என்கிறார் சங்கத்தின் செயலாளர் ராக்கி மேத்தா.

சேதத்தை தடுக்கவும், சூழலை சரிசெய்யவும், சங்கம், உறுப்பினர்கள் உள்பட அர்ப்பணிப்புள்ள தன்னார்வலர் குழுவை ஒருங்கிணைத்து சதுப்பு நிலக்காடுகளை மீட்கும் முயற்சியில் இறங்கியது.

கையில் உறையுடனும், மன உறுதியுடனும் இந்த வாழ்விடத்தை மூச்சுத்திணறும் அளவுக்கு அசுத்த மாக்கும் பிளாஸ்டிக் கழிவுகள், நிராகரிக்கப்பட்ட குப்பைகள் உள்ளிட்ட மாசுகளை அகற்றும் ஒரு பெரிய தூய்மை இயக்கத்தில் நாங்கள் பங்கேற்றோம். ஆட்கள்



மூலம் “கைகளால் கழிவுகளை அகற்றும் பணியுடன் நாங்கள் நின்றுவிடவில்லை. சதுப்புநிலங்களை பாதுகாத்து பராமரிப்பதில் ஆர்வம் காட்டும் ஒரு அரசு சாரா சேவை நிறுவனத்தின் சேவையை நாடி அவர்களுக்கு நிதிப் பங்களிப்பும் செய்தோம். இது நீண்டகால தாக்கத்தை உறுதி செய்கிறது” என்றார் அவர்.

சமீபகாலங்களில் மும்பையில் பெய்த கனமழையைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளம் மற்றும் கண்மூடித்தனமான கட்டுமானப் பணிகள் மற்றும் இதர நடவடிக்கைகளால் மும்பை பெருநகரின் வடிகால் அமைப்புகள் முடங்கிப்போன நிலையில் இத்திட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

எங்கள் சங்கத்தின் முக்கிய குழுவுக்கு இந்த திட்டம் முக்கியமானது. ஏனெனில், “சுற்றுச்சூழல் பாதுகாப்பை உதறித்தள்ளிவிடமுடியாது என்பது எங்களுக்குத் தெரியும். இது மிகவும் அவசியமானது. மேலும் சதுப்பு நிலங்கள் இயற்கையைப் பாதுகாக்கும் கேடயங்களாக உள்ளன. கடலோர நகரங்களை வெள்ள பாதிப்பிலிருந்து காக்கின்றன. மேலும் நாரைகள் போன்ற நீர்பறவைகள் உள்ளிட்ட பறவையினங்களுக்கு இனப்பெருக்கம் செய்யும் இடமாகவும் திகழ்கின்றன. எனினும் இடைவிடாத மாசுபாடு மற்றும் சட்டவிரோதமாக பிளாஸ்டிக் கழிவுகளை கொட்டுதல் காரணமாக பறவைகளின் வாழ்வுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன” என்று ராக்கி மேத்தா கூறினார். தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பைகள், பாட்டில்கள் அல்லது உறைகள் நம்மிடமே மாசுபடிந்த நீராக திரும்பிவருகின்றன. இதனால் வனவிலங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதுடன், வாழமுடியாத எதிர்காலத்தையும் உருவாக்குகின்றன.

முன்னோக்கிச் செல்லும் வழியாக இந்த ரோட்டேரியன்கள் நம்புவது சமூகம் சார்ந்த தூய்மைப்படுத்தும் முயற்சிகள். நிலையான கழிவு மேலாண்மை, மற்றும் நகரம் முழுவதும் பல்வேறு குழுக்களிடையே விழிப்புணர்வு பிரசாரங்களை நடத்துதல். “கடல்களும் அவற்றில் சுற்றுச்சூழல் அமைப்புகளும் நமது செயல்களைப் பிரதிபலிக்கின்றன.







**மேலே:** *பார்வையற்ற பெண்களுக்கு மதிய உணவு பரிமாறப்படுகிறது.*

**வலது:** *தன்னார்வலர்கள் சதுப்புநிலத்தை சுத்தம் செய்கிறார்கள்.*












**மேலே:** *நந்ததீப் அனாதை இல்லத்தின் குழந்தைகள் RC பாம்பே பே வியூவுக்கு நன்றி தெரிவித்தனர்.*



நாம் என்ன கொடுக்கிறோமோ அதுவே நம்மிடம் திரும்பி வருகிறது. நாம் செயல்பட வேண்டிய நேரம் இது. காலதாமதம் செய்யாமல் இயற்கையை பாதுகாக்க நாம் தயாராவோம்" என்று கூறுகிறார் சங்கத்தின் உறுப்பினர் வித்யா மூர்ஜானி.

### ஆதரவற்ற குழந்தைகளை அரவணைப்போம்

உறுப்பினர்களின் இதயத்தை தொடும் மற்றொரு திட்டம் என்னவெனில், சங்கம், நந்ததீப் ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்துடன் ஒரு கூட்டாண்மையை உருவாக்கி 45 குழந்தைகள் கொண்ட இந்த இல்லத்தை ஆதரித்து வருகிறது. கோவிட் தொற்று காலத்தில் மனிதாபிமான சேவைகளைச் செய்து வந்தபோது குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய போராடிவரும் இந்த இல்லத்தை தேர்ந்தெடுத்தோம்.

குழந்தைகள் இல்லத்துக்கான மளிகைப் பொருள்கள் மற்றும் இதர அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய சங்கத் தலைமையின் கீழான குழு முடிவு செய்தது. "முதலில் சாதாரண முறையில் அவர்களை ஆதரித்து வந்த நாங்கள், குழந்தைகளுடன் ஏற்பட்ட பிணைப்பால் பின்னர் ஆழமான



கூட்டாண்மையுடன் செயல்பட்டு அவர்களின் வளர்ச்சிக்கு உதவினோம்" என்கிறார் சங்கத்தின் தலைவர் ரஜினி பராசியா.

அறங்காவலர் மற்றும் பராமரிப்பாளரான டாக்டர் கேதன் சோனியின் அயராத அர்ப்பணிப்பு உணர்வுடன்கூடிய சேவைகளை நேரில் அறிந்துகொண்ட சங்கம், வாடகை, மளிகைப் பொருள்கள், மின்சார கட்டணம், பராமரிப்பாளர்களின் ஊதியம், குழந்தைகளுக்கான உடைகள் மற்றும் இதர தேவைகளை மாதாந்திர பங்களிப்பு மூலம் விரிவுபடுத்த முடிவு செய்தது. இந்த தன்னார்வ தொண்டு நிறுவனம், ஆதரவற்ற மற்றும் தெருவோரக் குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பதன் மூலம் உணவு மற்றும் தங்குமிடம் கொடுத்து அவர்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்க வாய்ப்பளிக்கிறது.

குழந்தைகளின் மன நலனையும்




*சங்கத் தலைவர் ரஜ்னி பராசியா (இடமிருந்து ஆறாவது), செயலாளர் ராக்கீ மேத்தா மற்றும் சங்க உறுப்பினர்கள் ரயில்வே போலீசாருடன் பெண் போலீஸ் அதிகாரிகள் மற்றும் குழந்தைகளுக்கான தனியார் அறைக்கு முன்னால்.*

கருத்தில் கொண்டு, சங்கம் ஒரு மனநல மருத்துவரை ஏற்பாடு செய்து அவர்களை மதிப்பீடு செய்தது. குழந்தைகள் மகிழ்ச்சியாகவும், நல்ல மனநிலையிலும் இருப்பது மற்றும் அவர்களின் வளர்ச்சியில் முன்னேற்றம் இருப்பது கண்டு சங்க உறுப்பினர்கள் மனநிம்மதி அடைந்தனர்.

### பார்வைக்குறைபாடுள்ள குழந்தைகள்

பார்வைக் குறைபாடுள்ள குழந்தைகளை மேம்படுத்தும் மற்றொரு திட்டத்தையும் சங்கம் செயல்படுத்தியது. மற்றவர்களுக்கு உதவுவதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த மாற்றுத்திறனாளியான, வங்கியில் பணிபுரியும் அனில் திவேட்டின் முயற்சிகளுக்கு ஆதரவு அளித்து வருகிறது. “மாற்றுத்திறனாளியான அவருக்கு பல சவால்கள் இருந்தபோதிலும், டோம்பிவிலியில் பார்வையற்ற 26 மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர ஆதரவளித்து வருகிறார். இளம் வயதில் கருணை உள்ளத்துடன் பலர் அவருக்கு உதவி செய்தனர். நன்கு படித்து நல்ல எதிர்காலத்தை உருவாக்கிக் கொண்ட அவர், தாம் பெற்ற உதவியை இப்போது சமூகத்திற்கு திருப்பிச் செய்கிறார்” என்கிறார் ரஜினி.

இந்த முயற்சிக்கு சங்கம் வழங்கிய உதவியில் ஒவ்வொரு மாணவருக்கும் படிப்பதற்கான சூழலை ஏற்படுத்தி, தனித்தனியாக அலமாரிகள், 5 புதிய மடிக்கணினிகள், மேஜைகள், நாற்காலிகள் வழங்கப்பட்டதும் அடங்கும் என்று அவர் விளக்கினார். அன்னபூர்ணா திட்டத்தின் கீழ், மாணவர்களுக்குப் போதுமான ஊட்டசத்து கிடைப்பதை உறுதி செய்ய மாதாந்திர அடிப்படையில் மளிகைப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இந்த முயற்சிக்காக 26 மாணவர்கள் பயனடையும் வகையில் ரோட்டேரியன்கள் ரூ.4.5 லட்சம் நிதிதிரட்டி முதலீடு செய்துள்ளனர்.

### பெண் போலீசாருக்கு உதவி

மும்பை சர்ச்கேட் ரயில்நிலையத்தில் ரயில்வே பெண் போலீஸ் அதிகாரிகள் மற்றும் உடல் ரீதியாக அல்லது மனரீதியாக பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தனிப்பட்ட



பார்வையற்றவர்களுடன் சங்கத்தலைவர் ரஜினி.

இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வசதியை ரயில்வே போலீஸ் கமிஷனர் ரவீந்திர ஷிஸ்வே தொடங்கிவைத்து பாராட்டி, இதற்கு முழு ஆதரவு அளிப்பதாக உறுதியளித்தார்.

உள்ளூர் போலீசாரின் வேண்டுகோளின் பேரில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது என்று ராக்கி விளக்கினார். ரயில்நிலையங்களில் பெண் போலீஸ் அதிகாரிகளுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தவும், ஆதரவற்ற, வழிதவறிய குழந்தைகளுக்கு பாதுகாப்பான இடத்தை ஏற்படுத்தவும் இந்த வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் போலீசார் ஓய்வெடுக்கவும் உடை மாற்றவும் இந்த தனிஇடம் வசதியாக இருக்கும்.

மேலும் இந்த ரயில்நிலையம் உள்ளூர் ரயில்களுக்கு முனையமாக இருப்பதால், மற்ற நகரங்களிலிருந்து மும்பைக்கு கனவுகளுடன் வந்து தாங்கள் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்து சிக்கித் தவிக்கும் பெண்கள் பலர் உள்ளனர். இவர்களை அருகில் உள்ள ரயில்வே போலீஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லலாம். ஆனால், ஒரு போலீஸ் நிலையத்தில் அவர்களை விசாரித்து தகவல்களைப் பெறுவது என்பது போலீசாருக்கு கடினமான பணியாகும். சர்ச்கேட் ரயில்நிலையத்தில் ஒரு நிரந்தரமான அறையை ஏற்படுத்தினால், இதுபோன்று சிக்கித் தவிக்கும் பெண்களுக்கு உதவிகரமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும். அந்த இடத்தில் அவர்களிடம் விசாரித்தால் தங்களைப் பற்றிய விவரங்களை அவர்கள் வெளிப்படையாகப் பேசக்கூடும். மேலும் அந்த பெண்களின் குடும்பத்தினர் அல்லது தனியார் தொண்டு அமைப்பினர் வந்து அழைத்துச் செல்ல உதவியாக இருக்கும் என்ற தொலைநோக்குப் பார்வையும் ரயில்வே போலீஸ் உயர் அதிகாரியான ரவீந்திர சிஷ்வேவுக்கு இருந்தது.

இதையடுத்து ரயில் நிலையத்தில் இருந்த திறந்தவெளியை ஓய்வறையாக மாற்றியமைக்க சங்கம் முடிவு செய்தது. உடனடியாக மேற்கூரை வேயப்பட்டு, மின்விசிறிகள், மின் விளக்குகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதியுடன் ஓய்வறை உருவானது. பெண் போலீஸார் இந்த இடத்தை பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இது வழிதவறிய பெண்கள், உடல், மன ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்களின் பாதுகாப்பு புகலிடமாகவும் இருக்கிறது. பாதிக்கப்பட்ட பெண்கள் மீண்டும் குடும்பத்துடன் சேரும் வரை அல்லது தொண்டு நிறுவனத்தினர் வந்து அழைத்துச் செல்லும் வரை அவர்கள் இங்கு பாதுகாப்பாக இருக்க முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

மும்பை சர்ச்கேட் ரயில் நிலையத்தில் பாதுகாப்பான ஓய்வறையை கட்டுவதற்கு ரோட்டேரியன்கள் ரூ.2.7 லட்சம் வரை செலவிட்டுள்ளனர்.■

# செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் பாரமதி விவசாயிகள்!

தீபக் ஷிகார்பூர்

செயற்கை நுண்ணறிவுத் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் விவசாயத்திலும் அது மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுதான். விவசாயத்தில் AI பயன்பாடு குறிப்பிடத்தக்க ஆற்றலையும் வளர்ச்சியையும் எட்டியுள்ளது.மகாராஷ்டிரத்தில் உள்ள பாரமதி மாவட்டம் விவசாய விளைபொருள்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் முன்னணியில் உள்ளது. பல நூற்றாண்டுகளாக நிலவிவந்த நிச்சயமற்றத் தன்மையால் விவசாயிகளின் நிலை கேள்விக்குறியாகவே இருந்து வந்தது. மிகக் குறைந்த மழை அல்லது அதிகமான மழை, பூச்சிகள் மற்றும் பயிர்க்கொல்லி நோய்களின் அச்சுறுத்தல் விவசாயிகளை கடன்வலையில் தள்ளியது. இன்னும் சொல்லப்போனால் கடன்சுமையால் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். பருவநிலை மாற்றமும், நிச்சயமற்ற தன்மையும் வெளிப்பட்டதால் விவசாயிகள் கடுமையாக உழைத்தும் பலன் கிடைக்கவில்லை.

பாரமதி விவசாயிகள் இப்போது செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கடுமையாக உழைத்து கரும்பு உற்பத்தியில் சாதனை படைத்து எதிர்கால விவசாயிகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றனர். சமீபத்தில் இந்தியாவுக்கு வருகை தந்த மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தலைவர் சத்ய நடெள்ளா, பாரமதிக்கு வந்திருந்து அங்குள்ள விவசாயிகளின் செயல்களைப் பாராட்டி, அவர்களின் புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய பணிகளை அங்கீகரித்துள்ளார். பாரமதியில் உள்ள விவசாய மேம்பாட்டு அறக்கட்டளை (ADT- Agriculture Development Trust) மற்றும் மைக்ரோசாஃப்ட் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கருவிகளின் ஆதரவுடன் இந்த விவசாயிகள் மகசூலை (விளைச்சலை) அதிகரித்துள்ளனர். இதன் மூலம் புரட்சிகரமாக விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைத்து சாதனைக்கு வழிவகுத்துள்ளனர்.



*விவசாயி நிலத்தில் AI தொழில் நுட்பக்கருவி.*

கரும்பு விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதில் சோதனை அடிப்படையில் 1,000 விவசாயிகளுக்கு ADT வழிகாட்டி வருகிறது. நிலைத்தன்மை மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு உகந்த பயிர் மேலாண்மைக்கான நிகழ்நேர தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மொத்த பரப்பளவில் இந்தியா மிகப்பெரிய கரும்பு உற்பத்தியாளராக உள்ளது. ஆனால், மொத்த உற்பத்தித் திறனில் பிரேசில், சிலி ஆகியவை முன்னிலையில் உள்ளன. நவீன தொழில்நுட்பம் மற்றும் கரும்பு பயிரிடுவதில் ஒரு ஒழுங்கு மேலாண்மை இல்லாததே இதற்கு காரணமாகும். இப்போது புதிதாக பின்பற்றப்படும் AI தொழில்நுட்பம் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தும்.

### தரவு சார்ந்த விவசாயத் தீர்வுகளைச் செயல்படுத்துதல்

இந்த முயற்சிக்கான அடித்தளம் மைக்ரோசாஃப்டின் ADMA (Azure Data Manager for Agri-culture)- விடம் உள்ளது. இந்த

தளம் வானிலை நிலையங்கள் மற்றும் மண் வளத்தைக் கண்டறியும் கருவிகள் உள்ளிட்ட பல்வேறு மூலங்களிலிருந்து தரவுகளைச் சேகரிக்கிறது. இந்த தரவுகள் விவசாயிகளுக்கு அவர்களது நிலத்தின் தன்மை குறித்த விரிவான பார்வையை வழங்குகிறது. இதன் மூலம் விவசாயிகள் பயிரிடுதல், பாசனம் மற்றும் உரமிடுதல் போன்ற முக்கிய முடிவுகளை எடுக்க முடியும். ADMA தவிர மைக்ரோசாஃப்ட் நிறுவன ஆராய்ச்சியில் உருவான FarmVibes.AI கருவியும் உள்ளது. இது மண்ணின் தன்மை, வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் ஊட்டச்சத்து அளவு பற்றிய தகவல்களைத் தருகிறது. இந்த விவரங்கள் Agripilot.ai செயலி மூலம் உள்ளூர் மொழிகளில் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் தொழில்நுட்ப திறன் வாய்ந்தவராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதை அணுக முடியும்.

சுரேஷ் ஜெகதீப் (65) குடும்பத்தினர் பாரமதியில் உள்ள நிம்புட் கிராமத்தில் பல தலைமுறைகளாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். காயற்கறி மற்றும் பழங்களை உற்பத்தி செய்துவந்தவர்கள் கரும்பு பயிரிடுவதில் ஆர்வம் காட்டினர். அதில் இவர்களுக்கு அதிக வருவாய் கிடைத்து வருகிறது. ஆனால், வானிலை, பூச்சிகள் தாக்குதலிலிருந்து பயிர்களை காப்பாற்றுவதையும் தாண்டி குறைந்த முதலீட்டில், சரியான நேரத்தில் அறுவடைசெய்து அதிக மகசூல் பெறுவதை உறுதிசெய்ய வேண்டும். அதிக விளைச்சல் கொண்ட கரும்புகள் மட்டும் அல்ல, அவற்றின் பிழிதிறனும் நன்றாக இருக்க வேண்டும். சமீபத்தில் ஜெகதீப், ADMA தொழில்நுட்பம் மற்றும் ADT விஞ்ஞானிகள் வழிகாட்டுதலுடன் கரும்பு சாகுபடி செய்துவருகிறார்.

இந்த விவசாயிகளின் நிலத்தில் ஒரு வானிலை கருவி உலோகத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் காற்று, மழை, சூரியஒளி, வெப்பநிலை மற்றும் ஈரப்பத அளவீடுகளைத் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும். மேலும் இதன் கீழுள்ள உணர்கருவிகள் (சென்சார்) மூலம் மண்ணின் ஈரப்பதம், அமிலத்தன்மை, மின்கடத்தும் திறன், பொட்டாசியம், ஹைட்ரஜன் போன்ற ஊட்டச்சத்துக்களை

## *பாரமதி விவசாயத்தில் AI-ன் முக்கிய பயன்பாடு*

**தரவுகள் ஒருங்கிணைப்பு:** *பண்ணை விவசாய மேம்பாடு குறித்த விரிவான கண்ணோட்டதை வழங்க செயற்கைக்கோள், டிரோன்கள் மற்றும் மண் உணர்திறன் கருவிகள் மூலம் கிடைக்கும் தகவல்களை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஒருங்கிணைக்கிறது. இந்த ஒருங்கிணைப்பு துல்லியமான பாசன அட்டவணைகள், நடவு செய்யும் நேரம், நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகைசெய்கிறது.*

**மொபைல் பயன்பாடுகள்:** ADT *பாரமதிக்காக தனிப்பயனாக்கப்பட்ட* Agripilot.ai *செயலி உள்ளூர் மொழியான மராத்தியில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது. உரமிடுதல், பூச்சி கண்காணிப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்து சரியான நேரத்தில் ஒவ்வொரு பண்ணைக்கும் எச்சரிக்கை மூலம் வழிகாட்டுகிறது.*

*முடிவுகள் என்று வரும்போது, இந்த பண்ணைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. சோதனை முறையில் பயிரிடப்பட்ட கரும்புகள் நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளன. மேலும் கரும்புகள் உயரமாகவும், அடர்த்தியாகவும், அறுவடையின்போது எடை அதிகமாகவும், அதிக சர்க்கரை சத்து கொண்டதாகவும் இருந்தன. மேலும் நீர் மற்றும் உரப் பயன்பாடும் கணிசமாகக் குறைந்து நிலையான விவசாய நடைமுறைகளுக்கு பங்களிப்புச் செய்துள்ளன.*

அளவிட்டு அறிந்துகொள்ள முடியும். இவற்றிலிருந்து கிடைக்கும் தரவுகள் செயற்கைக்கோள் மற்றும் ட்ரோன்கள் படங்கள் மற்றும் வரலாற்றுத் தரவுகளுடன் இணைக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு பின்னர் மொபைல் செயலி மூலம் விவசாயிகளுக்கு அனுப்பப்படுகிறது. "தண்ணீர் அதிகம் வேண்டும், உரம் தெளிக்க வேண்டும், பூச்சிகள் தொல்லை இருக்கிறதா என்று கண்காணிக்க வேண்டும் என்பது போன்ற முன்னெச்சரிக்கைகள் கொடுக்கப்படுகின்றன. செயற்கைக்கோள் வரைபடங்கள் மூலம் விவசாயிகளின் விளைநிலங்கள் பற்றிய தகவல்கள் துல்லியமாக குறிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு அக்டோபர் அல்லது நவம்பர் வரை அறுவடை இருக்காது என்றாலும், 6 மாதங்களுக்கு முன்பு, தனது நான்கு ஏக்கர் பண்ணை நிலத்தில் சோதனை அடிப்படையில் ஒரு ஏக்கரில் கரும்பு பயிரிட்டு அனைத்து நடவுமுறைகளையும் முறையாக பின்பற்றி வருவதால் நல்ல வித்தியாசத்தை காணமுடிகிறது என்று ஜெகதீப் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் பின்னணியில் உள்ள சகால் பேப்பர்ஸ் நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் பிரதாப் பவார் கூறுகையில், "எதிர்கால பண்ணை விவசாயம்" என்ற பெயரில் இந்த AI திட்டத்தை, அறக்கட்டளை கடந்த 2024 ஜனவரியில் அறிமுகப் படுத்தியதாகக் கூறினார். கரும்பு, தக்காளி உள்ளிட்ட ஒரு டஜனுக்கும் மேலான பயிர்களுக்கு இது உதவியாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாரமதியில் விவசாயத்தில் AI தொழில்நுட்பம் மூலம் கிடைத்துள்ள வெற்றி சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. மைக்ரோ சாஃப்ட் தலைமைச் செயல் அதிகாரி சத்யா நடெள்ளா, இதனால் ஏற்படும் முன்னேற்றங்களை எடுத்துரைத்து, உள்ளூர் விவசாய நடைமுறைகளில் செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தும் தாக்கத்தை விடியோவாக தயாரித்து பகிர்ந்துள்ளார். AI தொழில்நுட்பம் அனைத்தையும் மேம்படுத்தும் என்று கூறி எலான் மஸ்க் இந்த முயற்சியைப் பாராட்டியுள்ளார்.

கட்டுரையாளர் தகவல் தொழில் நுட்பத்துறை தொழில்முனைவோர் மற்றும் RID 3131-ன் முன்னாள் ஆளுநர்.

# டொண்டய்ச்சா அறுவைச் சிகிச்சை முகாம்

ஜெய்ஸ்ரீ

டொண்டய்ச்சா ரோட்டரி சங்கம், RID 3060, இந்த ஆண்டு ரோட்டரி நாளைப் (பிப்ரவரி 23) பொருளுள்ள வகையில் செலவிட்டது. மகாராஷ்டிர மாநிலத்தின் துலெ மாவட்டத்தில் உள்ள இந்த நகரத்தைச் சுற்றி நெடுந்தொலைவில் உள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏழைக் குடும்பங்களிலிருந்து வரும் 127 பேருக்கான அறுவைச் சிகிச்சைகளை ஏற்பாடு செய்வதில் இந்தச் சங்கம் முதன்மைப் பணியாற்றியது.

நாற்பதாண்டுகளுக்கும் மேலாக RC டொண்டய்ச்சா ஆண்டுதோறும் நடத்தும் அறுவைச் சிகிச்சை முகாம் இந்தப் பகுதியில் எதிர்பார்க்கப்படுகிற நிகழ்வாகும். "நாங்கள் இதுவரை பல நோய்களுக்காக 8,000க்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளோம்" என்கிறார் இந்தச் சங்கத்தின் உறுப்பினரான PDG ஸ்ரீகாந்த் இந்தானி.

இந்த முகாமின் தாக்கத்தைச் சுட்டிக்காட்டிய அவர், "சிலர் இதற்கென 100 கிலோமீட்டருக்குமேல் பயணம் செய்து வந்து மருத்துவச் சிகிச்சை பெறுகிறார்கள். வேறு வழிகளில் இது அவர்களுக்குக் கிடைப்பதில்லை" என்றார். "இவர்களில் பலர் பல ஆண்டுகளாக நிதித் தட்டுப்பாட்டால் அல்லது முறையான மருத்துவ வசதிகள் இல்லாததால் சிகிச்சை அளிக்கப்படாத நாள்பட்ட நலச் சிக்கல்கள் அல்லது நோய்களுடன் வருகிறார்கள். இந்த முகாம் அவர்களுக்கு நம்பிக்கை ஒளிக்கீற்றை அளிக்கிறது. இங்கு இவர்கள் திறமையான அறுவைச் சிகிச்சை வல்லுனர்களிடமிருந்து இலவசமாகச் சிகிச்சை பெறுகிறார்கள். அத்துடன், மருந்துகள், அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய பராமரிப்பு என அனைத்தும் இலவசம்." இங்கு பலன் பெறுவோரில் பலர் முதியவர்கள், சிகிச்சையளிக்கப்படாத, காலப்போக்கில் மோசமாகிவிட்ட நலச் சிக்கல்களைக் கொண்டவர்கள். இவர்களுக்கு இந்த முகாம் மிகவும் பயன்படுகிறது.

இந்த ஆண்டு முகாமின்மூலம் 80 சிறு மற்றும் 47 பெரிய அறுவைச் சிகிச்சைகளுக்கு வழிசெய்யப்பட்டது. இவை அனைத்தும் பல ஆண்டுகளாக இந்தச் சங்கத்தின் திட்டங்களில் முதன்மைப் பங்கு வகிக்கிற துணை மாவட்ட மருத்துவமனை, சுவிதா மருத்துவமனையில் செய்யப்பட்டன.

சரியான நேரத்தில் செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சைகள் உயிரைக்



காத்த நிகழ்வுகளை இந்தானி நினைவுகூர்கிறார். "முழங்கால் அறுவைச் சிகிச்சைக்கென வந்த கிராமத்து மனிதர் ஒருவருக்குக் கேடு விளைவிக்கும் நீர்க்கட்டி ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது. இது அவரைப் புற்றுநோயிலிருந்து காத்தது. இதேபோல், லிபோமா-வை நீக்கு வதற்காக வந்த ஒரு பெண்ணுக்குக் கேடு விளைவிக்கும் கட்டி ஒன்று இருப்பது கண்டறியப்பட்டது. பல ஆண்டுகளாக இப்படிப் பலருடைய உயிர்கள் இந்த முகாம்களின் வழியாகக் காக்கப்பட்டதை நாங்கள் பார்த்துள்ளோம்."

இந்த மருத்துவமனைகளில் எல்லா வசதிகளும் அமைந்திருப்பதால், நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சையின் போதும் அதற்கு முன்பும், பின்பும் உயர் தரமான பராமரிப்பு கிடைக்கிறது. நோயாளிகள் அறுவைச் சிகிச்சைக்குத் தகுதியுள்ளவர்களாக இருப்பதை மதிப்பிடும் முன் மதிப்பீடுகளும் செய்யப்படுகின்றன. "எங்கள் சங்கம் இந்த அறுவைச் சிகிச்சை வல்லுனர்களுடன் வலுவான கூட்டுப்பணியைச் செய்து வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் இந்த முகாமின் வெற்றியை உறுதிசெய்வதற்காக ரோட்டரியன்கள் ஓய்வின்றிப் பணியாற்றுகிறார்கள்" என்கிறார் இவர்.

இந்த அறுவைச் சிகிச்சைகளைச் செய்த சங்க உறுப்பினர்கள் Dr B L ஜெயின், Dr ஓம்பிரகாஷ் அக்ரவால், Dr குணால் பச்சாவ், உள்ளூர் அறுவைச் சிகிச்சை வல்லுனர்கள் Dr குல்கர்னி, தர்ஷன் குல்கர்னி ஆகியோருக்கு இந்தானி நன்றி தெரிவித்தார். "ஷ்யாம்லால் அகர்வால், ஆலய் சர்ஜிகல், காமா சர்ஜிகல் போன்ற கொடையாளர்கள் மற்றும் உள்ளூர்த் தலைவர்களுடைய தொடர் ஆதரவின்மூலம் இந்த உயர்ந்த செயல்பாட்டை நாங்கள் இனி வரும் ஆண்டுகளிலும் தொடர்வோம்" என்கிறார் இவர்.

1979ல், தொழில் நிறுவனங்கள் அவ்வளவாக இல்லாத வறண்ட பகுதியில் பதிவு செய்யப்பட்ட RC டொண்டய்ச்சா இப்போது 50 ரோட்டரியன்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இதன் நிரந்தரத் திட்டங்களில் சில: ஒரு கண் மருத்துவமனை, ஒரு நடமாடும் மருந்தகம், 1,500 மாணவர்களுக்குக் கல்வியளிக்கும் ஒரு பள்ளி, இருபது ஆண்டுகளாகச் சிறு, பெரிய தொழில்களை ஆதரித்து வரும் ஒரு நுண்கடன் அமைப்பு. இவற்றின் தொடக்கத்தைப்பற்றிய ஓர் ஆர்வமூட்டும் தகவலைப் பகிர்ந்து கொள்கிறார் இந்தானி. "நாங்கள் கண் மருத்துவமனையைத் தொடங்கிய போது, பெரிய நிதிச் சவாலை எதிர்கொண்டோம்; பல நேரங்களில், மருத்துவமனையின் தொடர் செலவுகளுக்கென நாங்கள் எங்களுடைய சொந்தப் பணத்தைச் செலவழிக்க வேண்டியிருந்தது. அப்போதுதான் நாங்கள் நுண்கடன் அமைப்பைத் தொடங்கினோம். இப்போது அதில் ரூ.35 கோடி இட்டு வைப்புகள் உள்ளன."■

# இன்டராக்டர்களுக்கான ஒரு நிகழ்வு

## ரோட்டரி செய்திக்குழு




RC கோவைபுதூர் நடத்திய, பெகாசஸ் 2024 என்ற தலைப்பிலான இன்டர்-இன்டராக்ட் மாவட்ட அவை மற்றும் இலக்கியக் கூட்டத்தில், RID 3201-ஐச் சேர்ந்த 1,300-க்கும் மேற்பட்ட இன்டராக்டர்கள் ரோட்டரி தலைவர்களுடன் உரையாடினார்கள்.

"நாளைய தலைவர்களைச் செதுக்குதல்" என்ற கருப்பொருளைக் கொண்ட இந்த நிகழ்ச்சி, இளம் இன்டராக்டர்கள் ரோட்டரியன்களைச் சந்திக்கவும், "தனக்கு மேல் சேவை" மற்றும் நான்கு-வழிப் பரிசோதனை போன்ற ரோட்டரி இலக்குகளிலிருந்து கற்றுக்கொள்ளவும் ஒரு தளத்தை உண்டாக்கியது. நாட்டை வடிவமைப்பதில் இளைஞர்களுடைய முதன்மையான பங்கைப்பற்றி DGN R S மாருதி பேசினார்.

பெகாசஸின் இலக்கு, இளைஞர்கள் தங்களுடைய தலைமைப்பண்புத் திறன்களையும் அறிவையும் மேம்படுத்தவும் ஒரு தளத்தை வழங்கி அவர்களுக்கு ஆற்றலளிப்பதுதான் என்றார் சங்கத் தலைவர் R லோகநாத குப்தா. RID 3201-ன் பல்வேறு பள்ளிகளிலிருந்து வந்திருந்த இளம் பார்வையாளர்களை மாவட்ட இன்டராக்ட் பிரதிநிதி ரெதான்யா, அவருக்கு முன் இப்பணியைச் செய்த மகாலட்சுமி தங்களுடைய பேச்சுத் திறனால் ஈர்த்தார்கள். நிறைவு நிகழ்வில் பேசிய DG N சுந்தரவடிவேலு, இளைஞர்கள் தங்களுடைய பன்முகத்தன்மையான திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கும்படி ரோட்டரியன் களைக் கேட்டுக்கொண்டார். நாள் முழுவதும் நடைபெற்ற இந்த நிகழ்வில் இன்டராக்டர்கள் சுமார் 10 இலக்கிய, பண்பாட்டு நிகழ்வுகளை நடத்தினார்கள்.■

Rotary PEOPLE OF ACTION

# பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உடைகள் வழங்கும் திறந்த அலமாரி

ரஷீதா பகத்



பெரிய பிரச்சனைகளுக்கு எளிமையான தீர்வுகளைக் கண்டுபிடிப்பது பெண்களின் இயல்பு. இதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர் அனைத்து மகளிர் ரோட்டரி சங்கமான திண்டுக்கல் குயின்சிட்டியின் உறுப்பினர்கள். இந்த பெண் ரோட்டேரியர்கள், திண்டுக்கல் அரசு மருத்துவமனை (இரண்டு) மற்றும் நகரத்தில் உள்ள ரோட்டரி ஹால் ஆகிய இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகள் நிரப்பிய மூன்று திறந்த அலமாரிகளை வைத்து குறிப்பிடத்தக்க சமூக சேவையை செய்துள்ளனர். இந்த அலமாரிகள் தேவையுடையவர்களுக்கு பயன்படுத்திய உடைகளை இலவசமாக, 24 மணி நேரமும் அணுகுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. “எங்கள் சங்கம் முழுவதும் பெண்கள் அமைப்பாகும், மற்றும் பெண்களுக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப உடைகளை தேர்வு செய்யும் வாய்ப்பை வழங்கினால், மேலும் அவர்களை யாரும் கண்காணிக்காமல் இருந்தால், அது அவர்களுக்கு அதிக மரியாதையைக் கொடுக்கும் என்று நாங்கள் நினைத்தோம்” என்று சங்க உறுப்பினர் ஆர்த்தி முகேஷ் கூறினார், அவர் சங்கத்தின் செய்திமடலை தொகுப்பவர்.

தலைவர் கவிதா செந்தில்குமார் தலைமையிலான இந்த சங்கம், ஒரு நல்ல திட்டத்தைத் தேடியபோது, அரசு மருத்துவமனையில் பணிபுரியும் குழந்தை மருத்துவரான டாக்டர் சுனிதா, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு நல்ல ஆடைகளை வழங்குவதற்கான பெரும் தேவை இருப்பதாக உறுப்பினர்களிடம் கூறினார். “தேவைப்படும் பெண்களின் கண்ணியத்தை சமரசம் செய்யாத வகையில் இதைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்தோம், அவர்கள் ஆடைகளைக் கேட்கத் தயங்குகிறார்கள், ஏனெனில் அது பிச்சை எடுப்பதற்கு சமமாக கருதுகிறார்கள்.”

எனவே “திறந்த அலமாரி” என்ற யோசனை உதயமானது. சங்க உறுப்பினர்கள் மூன்று மர அலமாரிகளை உருவாக்க



ஒரு பெண் தன் குழந்தையுடன் திண்டுக்கல் அரசு மருத்துவமனை ரோட்டரி அலமாரியில் இருந்து  துணிகளை எடுத்துக்கொள்கிறாள்.

சுமார் ரூ.24,000 நன்கொடை அளித்தனர். பிறந்த குழந்தைகள் உட்பட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகளை நன்கொடையாகக் கேட்கும்போது, “கிழிந்த ஆடைகளை நாங்கள் இந்த அலமாரியில் வைக்க மாட்டோம் என்பதை தெளிவுபடுத்தினோம். எனவே, ஆடைகளைப் பெற்றவுடன், அவை ஆய்வு செய்யப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு, நேர்த்தியாக மடித்து பேக் செய்யப்பட்டு, பின்னர் மட்டுமே அலமாரியில் வைக்கப்படும்,” என்று அவர் கூறினார்

அவர்கள் மகிழ்ச்சியடையும் விதமாக, அதுவும் மிகச் சிறந்த நிலையில், தேவைக்கு ஏற்றவாறு ஏராளமான ஆடைகளைப் பெற்றனர். “நாங்கள் இதை இப்போது சில நாட்களாகச் செய்து வருகிறோம், மூன்று அலமாரிகளும் நிரம்பியவுடன், அவை காலியாகிவிடுகின்றன, ஏனென்றால் அவ்வளவு தேவை உள்ளது.” ஒரு சங்க உறுப்பினர் தனது வீட்டில் ஒதுக்கியுள்ள அறையில் வைக்கப்பட்டுள்ள சேகரிப்பிலிருந்து அலமாரிகள் உடனடியாக நிரப்பப்படுகின்றன. பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்ட குழந்தைகள் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படுவதால், குழந்தைகள் உடைகள் அவற்றிற்கு மிகவும் பயன்படுகின்றன என்று ஆர்த்தி விளக்குகிறார்.

இந்த “திறந்த அலமாரி” கொள்ளையடிக்கப்படவோ அல்லது ஆடைகளை எளிதில் விற்கக்கூடிய சமூக விரோத சக்திகளால் தவறாகப் பயன்படுத்தப்படவோ வாய்ப்பில்லையா என்று கேட்டதற்கு, மருத்துவமனையில் உண்மையான பயனாளர்களே அந்த உடைகளை எடுத்துச் செல்லுகிறார்களா என்பதை உறுதிசெய்வது பணியாளர்களின் பொறுப்பாக இருப்பதாக அவர் கூறினார். “எங்கள் ரோட்டரி மையத்தில் அலமாரி வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது, எங்களிடம் ஒரு பாதுகாப்பு நபர் உள்ளார், அவர் உண்மையாக ஆடைகள் தேவைப்படுபவர்கள் மட்டுமே வந்து எடுத்துச் செல்வதை உறுதி செய்கிறார்” என்று சங்கத் தலைவர் கவிதா கூறுகிறார்.

இந்த திட்டம் பெரிய வெற்றியடைந்ததில் அவர் மகிழ்ச்சியடைகிறார், தினமும் அலமாரியை மீண்டும் நிரப்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்த அலமாரிகளுக்காக உடைகள் சேகரிப்பதில் இன்டராக்ட் ஸ்கூல் மற்றும் SBC அகாடமி மாணவர்கள் சங்கத்திற்கு உதவுகின்றனர்.

இந்த பெண்கள் சங்கம் அரசு மருத்துவமனையுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது, “இங்கு பல்வேறு விஷயங்களுக்கு நிறைய தேவை உள்ளது, ஊழியர்கள் அடிக்கடி எங்கள் சங்கத்தை உதவிக்காக அணுகுகிறார்கள். “அவர்கள் இப்போது குழந்தைகள் வார்டை புதுப்பித்து வருகின்றனர், சுவர்களைப் பற்றி நாங்கள் ஏதாவது செய்யமுடியுமா என்று கேட்டார்கள். என் மகள் ஒரு கலைஞர், நான் அவளை இலவசமாக சில அலங்கார வேலைகளைச் செய்யச் சொல்வேன்” என்று அவர் கூறுகிறார்.





*கர்ப்பப்பை வாய் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பெண்கள்.*



*சங்க உறுப்பினர்கள் அலமாரிகளில் வைப்பதற்கு முன்பு துணிகளை அடுக்குகிறார்கள்.*

தற்போது, திறந்த அலமாரி திட்டத்திற்கு ஆதரவு குவிந்ததால், தேவைப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு போதுமான ஆடைகள் உள்ளன. ஆனால் இந்த நோக்கத்திற்காக யாராவது ஆடைகளை நன்கொடையாக வழங்க விரும்பினால், அவற்றை கவிதா செந்தில்குமார், பிளாட் எண் 25, பைரவாஸ் நிவாஸ், 5வது மெயின் ஸ்ட்ரீட், MVM நகர், திண்டுக்கல் 624001, தமிழ்நாடு. தொலைபேசி: 9566777496 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

**கருப்பை புற்றுநோய்க்கு ராணிகள் தீர்வு**

இந்த சங்கத்தின் மற்றொரு குறிப்பிடத் தக்க திட்டமாக சிறுமிகள் மற்றும் இளம் பெண்களுக்கு கருப்பை புற்றுநோயைத் தடுக்கும் தடுப்பூசி வழங்கும் முயற்சி உள்ளது. இந்தத் திட்டம் குறிப்பாக கழகத் தலைவர் கவிதா மற்றும் செயலாளர் பார்கவி சந்தோஷ் ஆகியோருக்கு நெருக்கமாக உள்ளது, மேலும் அவர்கள் தங்கள் ஆண்டின் கருப்பொருளை குயீன்ஸ் இயர் ஃபார் செர்வி க்யூர் என்று வைத்துள்ளனர்.




தடுப்பூசிகள் மற்றும் தேவையான உபகரணங்களைப் பெறுவதற்கு நிதி முக்கிய சவாலாக இருந்தது. ஆனால் திருநெல்வேலி காவேரி மருத்துவமனை பாப் ஸ்மியர் பரிசோதனைகளுக்கான பேருந்தையும் இலவச தடுப்பூசியையும் வழங்கி அவர்களுக்கு உதவியது.

இதுவரை, சங்க உறுப்பினர் மற்றும் தர்ஷினி மருத்துவமனையின் மகளிர் மருத்துவ நிபுணர் Dr பாலசுந்தரி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் ஒவ்வொரு மாதமும் ஏற்பாடு செய்யப்பட்ட முகாம்கள் மூலம் சுமார் 2,000 பெண்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. செயின்ட் ஆண்டனி மகளிர் கல்லூரியின் ரோட்டராக்ட் மாணவர்கள் படிவங்களை நிரப்பவும், இந்த முகாம்களில் பிற தளவாட உதவிகளை வழங்கவும் உதவுகிறார்கள். காவேரி மருத்துவமனையும் தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கியது. “ஆனால் இந்தத் திட்டத்திற்கு எங்களுக்கு நிதி தேவை, ஏனெனில் ஒவ்வொரு HPV தடுப்பூசியின் விலையும் ரூ.3,000க்கு மேல் உள்ளது. அனைத்து மகளிர் சங்கமாக இருப்பதால், எங்களுக்கு சாதகங்களும் பாதகங்களும் உள்ளன; பல ஆண் ரோட்டேரியர்களைப் போலல்லாமல், பெண்களாகிய நாங்கள் எந்த திட்டத்திற்கும் பெரிய நன்கொடைகளை வழங்க முடியாது, எனவே இந்தத் திட்டத்திற்கு அவசரமாக பணம் தேவைப்படுகிறது. கருப்பை புற்றுநோய் பெண்களைக் கொல்லும் ஒரு பெரிய நோய் என்பதை நாம் அனைவரும் அறிவோம், மேலும் இது தடுக்கக்கூடியது என்பதால், இந்த ஆபத்திலிருந்து பெண்களைப் பாதுகாக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய விரும்புகிறோம்” என்று ஆர்த்தி கூறுகிறார்.

CSR நிதி பற்றி கேட்டதற்கு, அவர்கள் CSR மானியங்களுக்காக கார்ப்பரேட் நிறுவனங்களை அணுகுவதாகவும், அடிக்கடி நிதி பெறுவதாகவும் கூறினார், ஆனால் திண்டுக்கல் ஒப்பீட்டளவில் ஒரு சிறிய நகரம் மற்றும் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் இல்லாததால், தொகை சிறியதாகவே கிடைப்பதாக கூறினார். 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்களுக்கு மூன்று தடுப்பூசிகள் தேவைப்படுவதால், பெரிய பணம் தேவைப்படுகிறது; இரண்டாவது தடுப்பூசி ஒரு மாதத்திற்குப் பிறகும், மூன்றாவது 6வது மாதத்திலும் போடப்பட வேண்டும்.

மார்ச் மாத தொடக்கத்தில் சங்கம் ஏற்பாடு செய்த முகாமில் சுமார்

1,000 தடுப்பூசிகள் போடப்பட்டன. கருப்பை புற்றுநோயால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த, சங்க உறுப்பினரான மகளிர் மருத்துவ நிபுணர் டாக்டர் பாலசுந்தரி, நகரத்தில் உள்ள சுமார் டஜன் உயர்நிலைப் பள்ளிகளில் தடுப்பூசி இந்த ஆபத்தான புற்றுநோயிலிருந்து எவ்வாறு பாதுகாக்கும் என்பது குறித்து விரிவுரைகளை வழங்கினார்.

“அவர் பேசும் உரைகள் மிகவும் தாக்கத்துடன் இருக்கும், ஏனெனில் கருப்பை புற்றுநோய் பாதிப்பின் ஆபத்து மற்றும் ஒரு பெண் அந்த நோயால் பாதிக்கப்படும்போது அனுபவிக்கும் துயரத்தை, தனது சொந்த அனுபவங்களை வைத்து தொடர்புபடுத்தி விளக்குகிறார். தனது மருத்துவ அனுபவத்தில் அவர் இப்படிப்பட்ட பல வழக்குகளை கையாண்டுள்ளார். தனது உரைகளில், எதிர்கால பெண்களை இத்தகைய துயரத்திலிருந்து பாதுகாக்கும் ஒரே வழி உரிய தடுப்பூசி பாதுகாப்பு பெறுவதே என்பதை அவர் வலியுறுத்துகிறார்.”



*சிங்கப்பூர் மாநாட்டில்* RID 3000 Booth-*ல்* PRIP *கல்யாண் பானர்ஜியுடன்* DG *ராஜா கோவிந்தசாமி.*

டிசம்பரில், கருப்பை புற்றுநோயைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, 1997இல் தொடங்கப்பட்டு கடந்த ஆண்டு வெள்ளி விழாவைக் கொண்டாடிய சங்கம், நகரத்தில் ஒரு பேரணியை ஏற்பாடு செய்தது, அதில் 200 பெண்கள் தடுப்பூசியின் அவசியம் குறித்த செய்திகளை ஏந்தியபடி இரு சக்கர வாகனங்களில் சென்றனர். தடுப்பூசி மூலம் கருப்பை புற்றுநோயைத் தடுக்கும் சாத்தியம் குறித்து விழிப்புணர்வை அதிகரிக்க சங்கம் டிபார்ட்மென்ட் ஸ்டோர்கள் மற்றும் பிற பொது இடங்களில் துண்டு பிரசுரங்களையும் விநியோகிக்கிறது.



MCom பட்டத்துடன் பொது உறவுகளில் PG டிப்ளமோ பெற்ற ஆர்த்தி, தனது குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்பதால் தனக்கென ஒரு தொழிலை செய்யவில்லை, அவ்வப்போது தனது கணவரின் மருந்து வணிகத்தில் உதவுகிறார். ஆனால் கடந்த சில ஆண்டுகளில், அவரிடம் சிறிது ஓய்வு நேரம் இருந்ததால், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரியில் சேர்ந்தார், “பெரும்பாலும் நேரத்தை கடத்தவே. ஆனால் இப்போது நான் அற்புதமான நட்புகளை உருவாக்கியுள்ளேன், மேலும் ரோட்டரி மூலம் நாம் எவ்வளவு பயனுள்ள சமூக நலப்பணிகளை செய்யலாம் என்பதையும் கண்டறிந்துள்ளேன். நான் இன்னும் கற்றுக் கொண்டிருக்கிறேன், ஆனால் இந்த பயணத்தை மிகவும் மகிழ்ச்சியாக அனுபவிக்கிறேன்” என்று அவர் புன்னகைக்கிறார்.■

Rotary

# ரோட்டரி,
# நெறிமுறைகளுக்கு உட்பட்ட
# சேவையின் கலங்கரை விளக்கம்.

நமது சேவையும், இலக்கும்,
கீழ்கண்டனவற்றிலிருந்து
தவிர்க்கப்படட்டும் ...

- ✕ அரசியல்
- ✕ மது
- ✕ ஆடம்பர செலவுகள்
- ✕ சுய பலன்
- ✕ வணிக நலன்



நேர்மையான சேவை மூலம்,
நிலையான மாற்றத்தை
கொண்டு வருவோம் .

**Rtn. AKS டாக்டர் கே. ஸ்ரீநிவாசன்**
ரோட்டரி திருசிராப்பள்ளி & ஈரோடு சென்ட்ரல்
மண்டலம் 5


ADVT.

Rotary PEOPLE OF ACTION

# இமயமலையில் போலியோ நோய்த்தடுப்புக்காக ஒரு சாகச பயணம்!

அனிமேஷ் சாட்டர்ஜி

*பர்த்வான் சவுத் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த அனிமேஷ் சாட்டர்ஜி மற்றும் பர்த்வான் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த (RID 3240) அமித் சமத்தா இருவரும் போலியோ நோய்த் தடுப்பு நடவடிக்கையை மேம்படுத்துவதற்காக கொல்கத்தாவிலிருந்து நேபாளத்தில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தின் அடிவார முகாமுக்கு ஒரு சவாலான பயணத்தை மேற்கொண்டனர். மலையேறுதலில் இருவரும் 15 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள்.*




எங்களது சாகச பயணம் 2024 ஆம் ஆண்டு நவம்பர் 5-ம் தேதி, நேபாளத்தின் காத்மாண்டுவில் ஒரு சிறிய விமானத்தில் ஏறி, உலகின் மிக ஆபத்தான விமான நிலையங்களில் ஒன்றான, 11,000 அடி உயரத்தில், லுக்லா என்னுமிடத்தில் அமைந்துள்ள எட்மண்ட் ஹில்லரி டென்சிங் நார்கே விமான நிலையத்தைச் சென்றடைந்தோம். லுக்லாவிலிருந்து எங்களது மலையேறும் பயணத்தைத் தொடங்கினோம். எங்களது குறிக்கோள் கரடுமுரடான பாதைகளைக் கடந்து எவரெஸ்ட் மலை அடிவாரத்தை அடைவது மட்டுமல்ல, போலியோவை முற்றிலும் ஒழிக்க நோய்த்தடுப்பு விழிப்புணர்வுப் பிரசாரத்தை மேற்கொள்வதாகும். போலியோ



ஒழிப்பை ரோட்டரி சர்வதேச இயக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.


ஏறக்குறைய 8 நாட்கள் கரடுமுரடான நிலப்பரப்பு வழியாக நாங்கள் பயணித்தோம், எங்களின் உடல் வலிமையையும், மனவலிமையையும் சோதிக்கும் அளவுக்கான உயரங்களை எட்டினோம். இந்த மலேயேற்றம் மொத்தம் 103 கி.மீ. தொலைவை உள்ளடக்கியது. அதில் மிக உயர்ந்தது 20,000 அடி உயரத்தில் அமைந்துள்ள காலா பத்தர் என்னும் இடமாகும்.

மிகப்பெரிய சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.- மைனஸ் 15 டிகிரி சென்டிகிரேட் உள்ள கடும் குளிர், ஆங்காங்கே காணப்பட்ட மலைச்சரிவுகளும், குறைந்த மலைக் காற்றும் மூச்சு விடுவதற்கே சிரமமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் நெடிய பயணம், பனிப்பாறைகளை கடந்து செல்ல வேண்டியிருந்தது. மலையேறும் பயணம் கடுமையாக இருந்தபோதிலும், ஒரு நோக்கத்திற்காகச் சென்ற நாங்கள் மன உறுதி குலையாமல் இருந்தோம். பாக்டிங், டெங்போச், டிங்போச், லொபுச் மற்றும் கோரக் ஷெப் உள்ளிட்ட பல அழகிய கிராமங்களை நாங்கள் கடந்து சென்றோம். ஒவ்வொரு கிராமமும் இயற்கை அழகுடன், கலாசார செழுமையுடன் தனித்துவமாக இருந்தது. பனிமூடிய சிகரங்களின் பின்னணியில் பிரார்த்தனை கொடிகள் பட்டொளிவீசி பறக்கும் காட்சி, ஷெர்பாக்களின் அரவணைப்பான விருந்தோம்பல் மற்றும் மனதை ஈர்க்கும் அமைதியான மடாலயங்கள் கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

நவம்பர் 13-ம் தேதி சரியாக பிற்பகல் 3.20 மணிக்கு எவரெஸ்ட் சிகரத்தின் அடிவார முகாமை நாங்கள் சென்றடைந்தோம். அந்த தருணம் மிகவும் அற்புதமாக இருந்தது. உலகின் மிக உயரமான மலையின் பிரம்மாண்டத்தால் சூழப்பட்டோம். “போலியோவுக்கு முடிவுகட்டுவோம்” என்ற பேனருடன் நாங்கள் அங்கு நின்றபோது, நாங்கள் மிகப் பெரிய சாதனை உணர்வை அடைந்தோம்.

பயணம் முழுவதிலும் போலியோ ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை பரப்புவதே எங்களது முதன்மை இயக்கமாக இருந்தது. மலையேற்றத்தின்போது தளவாட சாமான்களைக் கொண்டு செல்வதில் சில சவால்களை நாங்கள் எதிர்கொண்டாலும், நாங்கள் பேனரை கையில் எடுத்துச் சென்று ரோட்டரியின் போலியோ ஒழிப்பு பிரசாரத்தை ஒவ்வொருவரிடமும் பகிர்ந்துகொண்டோம். மலைப் பாதைகள் கடந்து செல்வதற்கு கடினமாக இருந்தபோதிலும் அதை ஒரு தளமாகப் பயன்படுத்தி உள்ளூர் மக்கள் மற்றும் சக மலையேற்ற வீரர்களிடம் போலியோ நோய்த் தடுப்பு நடவடிக்கைகளின் அவசியத்தையும் சர்வதேச அளவில் ஆரோக்கியத்தை மேம்படுத்த ரோட்டரி மேற்கொண்டுவரும் பணிகளையும் விவரித்தோம். பருவநிலைகள் எங்கள் மன உறுதிக்கு சவாலாக இருந்தபோதிலும், அதிக உயரத்தில் ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் எங்களின் எளிய பணிகளை கடினமாக்கிய போதிலும், நாங்கள் மன உறுதியுடன் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். இந்த தடைகளைத் தாண்டி வந்தது எங்களை ஒரு குழுவாக நெருக்கமாக கொண்டுவந்தது. கூட்டுமுயற்சியின் சக்தியில் எங்கள் நம்பிக்கையை வலுப்படுத்தியது.

மலையேற்றத்தை முடித்த பிறகு லுக்லாவுக்கு திரும்பியது வெற்றியின் பிரதிபலிப்பாகும். இந்த பயணத்தால் நாங்கள் உடல் ரீதியாக சோர்வடைந்திருந்தாலும் மன ரீதியாக வளர்ச்சி பெற்றோம். மலையேற்றத்தில் மட்டுமல்ல, போலியோவுக்கு எதிரான போராட்டத்திலும் விடாமுயற்சியின் முக்கியத்துவத்தை நாங்கள் உணர்ந்து கொண்டோம். இதற்கு இடைவிடாத அர்ப்பணிப்பும், சர்வதேச கூட்டுறவுமே தேவை.■



# RID 3234-ன் முத்திரை பதித்த முதல் மாநாடு

V முத்துக்குமரன்

“சேவைத் திட்டங்கள், அவர்கள் கொண்டு வரும் புதிய உறுப்பினர்கள் மற்றும் ரோட்டரியின் மாயாஜாலங்களை வெளிப்படுத்தி உலகில் சரியான ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவது 1.4 மில்லியன் ரோட்டேரியன்களின் பொறுப்பாகும்” என்று சென்னையில் RID 3234 சார்பில் நடைபெற்ற “சங்கமித்ரா” (நட்பின் மாயாஜாலம்) மாநாட்டில் தொடக்கவுரையாற்றிய RI தலைவரின் பிரதிநிதியும், அறங்காவலருமான இஜியோமா பேர்ள் ஓகோரோ தெரிவித்தார்.

சங்கத்தின் சிறப்பான அனுபவங்கள் மூலம் ரோட்டரியை தவிர்க்க முடியாததாக மாற்ற வேண்டும். 200 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் 36 மண்டலங்களில் உள்ள 515 ரோட்டரி மாவட்டங்களில் 36,000 சங்கங்களின் உறுப்பினர்கள்தான் நமது பலம்.எனவே, நாம், நமது உறுப்பினர்களை அர்த்தமுள்ள செயல்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும் என்று அவர் கூறினார். மேலும் ரோட்டரி திட்டங்கள் மற்றும் வெளிநடவடிக்கைகளில் ரோட்ராக்டர்களை ஈடுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது. ஏனெனில் நீங்கள் அவர்களின் ஆற்றலையும் உற்சாகத்தையும் தடுத்து நிறுத்திவிட முடியாது. இப்போது ரோட்ராக்ட் சங்கங்கள் உலகளாவிய, மாவட்ட மானியத் திட்டங்களை பெரிய அளவில் மேற்கொள்வதன் மூலம் தாக்கத்தை ஏற்படுத்தி தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நைஜீரியாவில் RID 9141-க்கு உட்பட்ட போர்ட் ஹர்கோர்ட் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான இஜியோமா, முன்பு சென்னை வந்திருந்த போது, மறைந்த PDG ரேகா ஷெட்டியுடனான தொடர்புகளையும், உரையாடல் களையும் நினைவுகூர்ந்தார். ஒரு மாவட்ட மாநாடுதான் சிலவற்றை கற்றுக்கொள்ளவும், சிலவற்றை கற்றுக்கொள்ளாமல் இருக்கவும், புதிய நண்பர்களை உருவாக்கவும், பன்முகத்தன்மையின் உணர்வை கொண்டாடுவதற்கான நேரம்.

மாநாட்டில் உரையாற்றிய DG N S சரவணன், ஒரு ஆளுநராக நான் எப்போதும் இலக்கை நிர்ணயிக்கவில்லை. ஆனால், நாங்கள் மேற்கொள்ளும் முயற்சியும், வேலைகளும் எதிர்காலத்தில் எங்களுக்குப் பெருமை தேடித்தரும் என்று நம்பிக்கையுடன் எனது பணியைத் தொடங்கினேன். 7 மாதங்களில் மாவட்ட சங்கங்கள் TRF-க்கு 1 மில்லியன் டாலருக்கும் மேலாக பங்களிப்புச் செய்துள்ளன. இதர செயல்திறன்களிலும் நாங்கள் RI குறியீட்டில் இருக்கிறோம் என்று அவர் கூறினார். மற்ற ரோட்டேரியன்களிடம் தொடர்பில் இருங்கள் மற்றும் புதிய நட்புறவை உருவாக்குங்கள். இது உங்கள் வளர்ச்சிக்கு உதவும் என்றார் PRID A S வெங்கடேஷ்.

சூழலியல் குறித்து பேசிய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சகத்தின் செயலர் S கிருஷ்ணன், உயர்கல்வி நிறுவனங்கள், ஐ.ஐ.டி. சென்னையின்




V முத்துக்குமரன்

ஆராய்ச்சிப் பூங்கா, புதுமையான தொழில்முனைவோருக்கு வழிகாட்டி வளர்த்து வருவதை கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் பொறியியல் கல்லூரிகளில் சேரும் 2 லட்சம் மாணவர்களில் ஒரு சதவீதம்பேர் அதாவது, 2000 இளைஞர்கள் தொழில்முனைவோராக விரும்புவார்கள். அவர்களுக்குத் தேவையான சூழலையும், வசதி களையும் உயர்கல்வி நிறுவனங்கள் உருவாக்கினால்தான் அவர்கள் வெற்றிகரமாகச் செயல்பட முடியும். புதிய நிறுவனங்கள் உருவாக வேண்டும், புதிய வர்த்தக நடை முறைகள் பின்பற்றப்பட வேண்டும். அப்போதுதான் வேலைவாய்ப்பை உருவாக்கி, செல்வத்தை ஈட்டமுடியும்.

வரும் ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு, செமிகண்டக்டர்கள், ஆழமான தொழில்நுட்பங்கள் வர்த்தகம் செய்வதில் புதிய முன்மாதிரியை ஏற்படுத்தும். சில ஆண்டுகளுக்கு முன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ( GDP) 6 சதவீதமாக இருந்த டிஜிட்டல் பொருளாதாரம் தற்போது 13 சதவீதத்துக்கு மேல் உள்ளது. இந்த தசாப்தத்தின் இறுதியில் இது 20 சதவீதமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று அவர் கூறினார்.



V முத்துக்குமரன்

*RIPR அறங்காவலர் இஜியோமா பெர்ல் ஒகொரோ மற்றும் அவரது கணவர் கிங்ஸ்லி உடன் DG சரவணன், டிஸ்கான் சேர்மன் ரவி சுந்தரேசன், கூடுதல் சேர்மன் ராஜ்சேகர்.*

முன்னதாக சென்னை ஐ.ஐ.டி.யின் இயக்குநர் V காமகோடி “ இளைஞர் கல்வியின் எதிர்காலம்” குறித்து பேசுகையில், இந்தியாவில் பள்ளிக் கல்வி முறை சிறப்பாகவே உள்ளது. ஆரம்ப பள்ளிக் கல்வி நெறிமுறைகள் சார்ந்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் பள்ளிக் கல்வியை தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஒருங்கிணைத்துள்ளனர் என்று கூறினார்.

ஆனால், பிரச்னை மொத்த சேர்க்கை விகிதத்தில் உள்ளது. இது பரிதாபகரமாக 28.2 சதவீதமாக உள்ளது. அதாவது, இந்தியாவில் பள்ளிக் கல்வியை முடிக்கும் 100 மாணவர்களில் 72 பேர் கல்லூரிப் படிப்புக்குச் செல்வதில்லை. “மொத்த மாணவர் சேர்க்கை தொடர்பான சிக்கலைத் தீர்க்க நாங்கள் 2000-த்துக்கும் மேலான வித்யா சக்தி மையங்களை கிராமங்களில் ஏற்படுத்தியுள்ளோம். அவை ஏழை மாணவர்களுக்கும் ஐ.ஐ.டி. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் இடையே டிஜிட்டல் பாலமாகச் செயல்படுகின்றன. இவர்கள் கிராமப்புற மாணவர்களுடன் அவர்களது தாய் மொழியில் உரையாடி, அவர்கள் உயர்கல்வி பெற ஊக்குவிக்கின்றனர்” என்று விளக்கினார். சென்னை ஐ.ஐ.டி. டிஜிட்டல் ஆன்லைன் வகுப்புகள் மூலம் மின்னணு அறிவியல் மற்றும் தரவுகள் தொகுப்பு துறைசார்ந்த B S Data Science மற்றும் Electronic Systems படிப்புகளைத் தொடங்கியுள்ளது. இதில் 46,000 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

இந்தியாவின் உயர்கல்வி, ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி குறியீட்டுடன் ஒத்துப்போக வேண்டும். கல்வியை தரமானதாகவும், மலிவான தாகவும் ஆக்கினால் தான் இது சாத்தியமாகும். தொழில்நுட்பத் துறையில் இந்தியா வல்லரசாக வேண்டுமானால் வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு, பயோடெக், குவாண்டம் கம்ப்யூட்டிங், AML




*RID 3234 DG N S சரவணன் மற்றும் பாரதி, (இடமிருந்து) RID 3233 DGN ஸ்ரீராம் துவ்வுரி, DGE D தேவேந்திரன், PDGகள் முத்து பழனியப்பன், R சீனிவாசன், ISAK நாசர், PRID A S வெங்கடேஷ், RID 3234 DGE வினோத் சரோகி, RID 3233 DG மகாவீர் போத்ரா மற்றும் PDG N நந்தகுமார் ஆகியோருடன்.*




*கிரிக்கெட் வீரர் R அஸ்வினுக்கு ரோட்டரி வாழ்நாள் சாதனையாளர் விருதை A V M பாலசுப்பிரமணியன் வழங்கினார். RI இயக்குனர் அனிருதா ராய் சவுத்ரி மற்றும் DG சரவணன் ஆகியோரும் காணப்படுகிறார்கள்.*

உள்ளிட்ட துறைகளில் நாம் அடிப்படை பணிகளைச் செய்ய வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

தகவல் தொழில்நுட்பத்துறையில் தமது பயணத்தை நினைவுகூர்ந்த இன்ஃபோஸிஸ் இணை நிறுவனரும் ஆக்ஸிலார் வென்ட்ச்சர்ஸ் நிறுவனத் தலைவருமான கிருஷ் கோபாலகிருஷ்ணன் பேசுகையில், மென்பொருள் துறையில் முன்னணி நிறுவனமான இன்ஃபோஸிஸ் 20 பில்லியன் டாலர் வருவாயுடன் தொடங்கிய நாளிலிருந்து லாபம் ஈட்டி வருகிறது. உலகின் 10 முதன்மையான மென்பொருள் நிறுவனங்களில் ஒன்றாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவில் இன்ஃபோஸிஸ் நிறுவனம்தான் முதன் முதலாக 1990-களில் ESOP முறையை தனது ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தியதுஎன்று கூறினார்.

இந்தியாவில் 10-க்கும் மேலான யூனிகார்ன்கள் (1 பில்லியன் டாலருக்கும் அதிகமான மதிப்பு கொண்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்கள்) உள்ளன. மக்கள் தொகையில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் 20 முதல் 35 வயது வரையிலான இளைஞர்கள். நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்ட, அறிவியல் தொழில்நுட்பத் திறன் கொண்ட இளைஞர்கள் இங்கு உள்ளனர். உலகில் உள்ள 8 பில்லியன் மக்களுக்கு புதிய மாதிரிகளை உருவாக்கவும், புதிய பொருள்களை கண்டுபிடிக்கவும், டிஜிட்டல் சேவையை செய்யவும் திறன்பெற்றவர்கள். எனினும் இந்தியா வளர்ந்த நாடாக உருவாக வேண்டுமானால், நாம் அதன் தற்போதைய தனிநபர் வருமானம் 3,000 டாலர் என்றிருப்பதை 15,000 டாலராக அதிகரிக்க வேண்டும். நாம் உற்பத்தி பொருள்களின் நுகர்வோராக இருப்பதிலிருந்து உற்பத்தியாளர்களாகவும், சர்வதேச பிராண்டுகளாகவும், அறிவுசார் சொத்துரிமை உடையவர்களாக மாறுவதன் மூலமும், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையில் அதிக முதலீடு செய்பவர்களாகவும் இருந்தால் மட்டுமே இது சாத்தியம். தற்போது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.3 டிரில்லியன் டாலராகும். இது பொருளாதாரத்தில் அமெரிக்கா ($30 டிரில்லியன்), சீனா ($19.5 டிரில்லியன்), ஜெர்மனி ($5 டிரில்லியன்), ஜப்பான் ($4.4 டிரில்லியன்) ஆகிய நாடுகளை அடுத்து ஐந்தாவது இடத்தில் உள்ளது என்றார்.

இந்திய நாடாளுமன்றம், நீதித்துறை மற்றும் தேர்ந்தெடுக்கப் படும் அரசியல்வாதிகளை மக்கள் நம்புவதுபோல, நாடு முழுவதும் ரூ.380 லட்சம் கோடி முதலீடு மற்றும் 110 மில்லியன் முதலீட்டாளர்களைக் கொண்ட நமது தேசிய பங்குச் சந்தையையும் மக்கள் நம்புகிறார்கள் என்று தேசிய பங்குச் சந்தையின் தலைமை நிர்வாக அதிகாரி ஆசிஷ் சௌஹான் தெரிவித்தார். சாதாரண மனிதர்கள்கூட தேசிய பங்குச் சந்தை மூலம் நிலையான பெரிய நிறுவனங்களில் முதலீடு செய்து கோடீஸ்வரர்களாகியுள்ளனர் என்று அவர் கூறினார். அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பானுக்குப் பிறகு இந்தியாவின் தேசிய பங்குச் சந்தைதான் மூலதனத்தின் அடிப்படையில் நான்காவது இடத்தில் உள்ளது. நடுத்தர வர்க்க முதலீட்டாளர்கள், இந்திய தொழில்முனைவோரின் திறமை மீது நம்பிக்கைவைத்துள்ளனர். எனவே பட்டியலிடப்பட்ட, வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் உள்ள நிறுவனங்களில் முதலீடு செய்கின்றனர் என்றார்.

ACS மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வேந்தர் A C சண்முகம், ஆசியா என்ஜினீயரிங் கம்பெனியின் மகேந்திரா K ஜெயின், கோபாலகிருஷ்ணன் மற்றும் சௌஹான் ஆகியோருக்கு ரோட்டரி வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன. அடுத்த நாள், சர்தேச கிரிக்கெட் போட்டிகளில் 500 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்தி சாதனை படைத்த, இந்தியாவுக்கு பெருமை சேர்த்த  கிரிக்கெட் வீரர் R அஸ்வினுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை RI இயக்குநர் அனிருத்த ராய் சௌதுரி வழங்கினார்.


ரோட்டரி கிராமம் மற்றும் அமைதிப் பூங்கா, மெட்ராஸ் ஈஸ்ட் ரோட்டரி சங்கத்தினரால் நட்புறவு இல்லத்தில் (House of Friendship) வடிவமைக்கப்பட்டது. மாநாட்டின் தலைவர் ரவி சுந்தரேசன், A V M பாலசுப்பிரமணியன், PDGs அபிராமி ராமநாதன், J ஸ்ரீதர், மாவட்ட செயலர் வித்யா ரகு மற்றும் DGND விஜயபாரதி விழாவில் பேசினர். ■

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

### PRID வெங்கடேஷ்: RI பயிற்சி மாநாட்டில் நெறியாளர்

இந்த பிப்ரவரி மாதம் புளோரிடாவின் ஆர்லாண்டோவில் நடந்த RI மாநாட்டில் நடுவராக பணியாற்றிய முதல் இந்தியர் என்ற பெருமையை PRID A S வெங்கடேஷ் பெற்றார். "நான் 18 ஆண்டுகளுக்கு முன்பு சான் டியாகோவில் DGE-ஆக உங்கள் இருக்கையில் இருந்தேன்," என்று அவர் மாநாட்டை அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைத்தபோது கூறினார். வெங்கடேஷ் 2021–23-ம் ஆண்டில் RI இயக்குநராகவும், 2022–23-ல் RI பொருளாளராகவும் பணியாற்றினார்.




*RI பயிற்சி மாநாட்டில் PRID வெங்கடேஷ்.*

### மொராதாபாதில் மிகப் பெரிய திட்டங்கள்

RC மொராதாபாத் மிட் டவுன், RID 3100, பொன்விழா நிகழ்வில் RIDE M முருகானந்தம், DG தீபா கன்னா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றார்கள். இந்த மைல்கல் ஆண்டைக் குறிக்கும் வகையில் இந்தச் சங்கம் ரூ.12 லட்சம் மதிப்புள்ள திட்டங்களை நிறைவு செய்தது.



*RIDE முருகானந்தமிடம் பள்ளி புனரமைப்புக்கான காசோலை வழங்கப்பட்டது.*

### மன்சா நோய் கண்டறிதல் மையம்

நான்கு இந்திய RI மாவட்டங்கள், RID 7255, US மற்றும் RID 1145, UK உடன் இணைந்து RC மன்சா ராயல், RID 3090, நடத்திய பன்னாட்டு நல்கைத் திட்டத்தின்கீழ் ($31,860) ரோட்டரி நோய் கண்டறிதல் மையம் தொடங்கப்பட்டது.



*புதிய மையத்தில் IPDG கன்ஷியாம் கன்சாலுடன் சங்க உறுப்பினர்கள்.*

### மணிப்பூரில் ரோட்டரி அமைதிக் கம்பம்

ரோட்டரியின் 120வது ஆண்டுவிழாவை முன்னிட்டு இம்ஃபால் மருத்துவ அறிவியல் கல்விக் கழகத்தின் ஆதரவுடன் RC போலோ சிட்டி இம்ஃபால், RID 3240 நடத்திய இரத்த தான முகாமில் சுமார் 40 அலகு இரத்தம் திரட்டப்பட்டது. மன்த்ரிபுக்ரி-யில் உள்ள ரோட்டரி பவனில், ரோட்டரி அமைதிக் கம்பம் நிறுவப்பட்டது.



*அமைதிக் கம்ப திறப்பு விழாவில் சங்க உறுப்பினர்கள்.*

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துக்குமரன்



**சதீஷ் மாதவன்**
ஜவுளி
RC பெங்களூர் ராஜா ராஜேஷ்வரி நகர
சென்டினியல்
RID 3191

## மெகா திட்டங்கள்

RC பெங்களூர் மிட்டவுன் சங்க நன்கொடைகள், CSR/ GG மானியங்கள் மற்றும் நிதி திரட்டல்கள் மூலம் நிம்மதி ($1 மில்லியன்) என்ற புதிய ஹாஸ்பிஸ் மையம் அமைக்கப்படும். ஒரு ஏரிக்கு அருகில் நிலத்தடி ரீசார்ஜ் மற்றும் வடிகட்டுதல் செயல்முறை மூலம், "தேவனஹள்ளி நகரத்திற்கு ஆறு லட்சம் லிட்டர் குடிநீரை நாங்கள் வழங்குகிறோம். 2 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த திட்டம், நகராட்சி அதிகாரிகளை தங்கள் பகுதிகளில் இதை ஆய்வு செய்து பின்பற்ற தூண்டும்" என்று சதீஷ் மாதவன் கூறுகிறார்.

100 பெண்களுக்கு மின்சார ஆட்டோரிக்ஷாக்கள் வழங்கப்படும், மேலும் "கிஃப்ட் ஆஃப் லைஃப்" திட்டத்தின் கீழ் 400 குழந்தைகளின் இதய அறுவைசிகிச்சைகள் செய்யப்படும். "ரோட்டரி ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், ஸ்ரீ சத்ய சாய் சார்லா மருத்துவமனை, முத்தெனஹள்ளியில் ஒரு பார்வை மையம் (CSR 8 கோடி); சிக்கபல்லாப்பூரில் இரண்டு மருத்துவ மையங்கள்; 10,000 மக்களை சென்றடைந்த மனநல இயக்கம்; திருப்பதி அரசு மருத்துவக் கல்லூரியில் 27 லட்சம் ரூபாய் வலி நிவாரண பிரிவு; உட்பட 2,000 சேவைத் திட்டங்களை நாங்கள் செய்துள்ளோம்."

அவரது TRF நன்கொடை இலக்கு $1 மில்லியன் ஆகும். 90 சங்கங்களில் 3,500க்கும் அதிகமான உறுப்பினர் எண்ணிக்கை 4,000-ஐ தாண்டும் என கூறுகிறார்.

## சங்கங்களில் GG விழிப்புணர்வு

மாவட்டத்தின் 91 சங்கங்களில் சில 25 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வந்தாலும், உலகளாவிய மானிய திட்டம் மேற்கொள்ளாததை கண்டறிந்தபின், அவற்றுக்கு தேவையான வழிகாட்டலை வழங்க முடிவு செய்தேன் என்கிறார் சிவகுமார்.

இந்த அணுகுமுறையின் பலனாக, RC தர்மபுரி தொண்டு மருத்துவமனைகளில் இரண்டு டயாலிசிஸ் மையங்களை (ரூ.32 லட்சம்) அமைக்கும், எட்டு ஓசூர் சங்கங்கள் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு ஐந்து டயாலிசிஸ் அலகுகளை ($50,000) நன்கொடையாக வழங்கியுள்ளன; ஏற்காடு அரசு மருத்துவமனையின் பிறந்த குழந்தை வார்டுக்கு இரத்த சேமிப்பு உபகரணங்கள் (ரூ.28 லட்சம்) RC ஏற்காடு வழங்கும்; மற்றும் RC சங்ககிரி ($32,000) மற்றும் சேலம் டெக்சிட்டி ($33,000) ஆகியவை முறையே அரசு மருத்துவமனைக்கும் ஆரம்ப சுகாதார மையத்திற்கும் மருத்துவ உபகரணங்களை வழங்கும்.

2015–16-ம் ஆண்டில், ரூ.72 லட்சம் மதிப்பிலான Project Hope திட்டத்தை வழிநடத்தி, இலங்கை மாணவர்களுக்கு சுமார் 700 செயற்கை உறுப்புகளை வழங்கினார். "அது எனக்கொரு கண் திறக்கும் அனுபவமாக இருந்தது. 2008-ம் ஆண்டில் நான் ரோட்டரியில் சேர்ந்திருந்தாலும், அந்த திட்டத்திற்குப் பிறகு ரோட்டரி திட்டங்களில் ஆர்வத்துடன் ஈடுபட ஆரம்பித்தேன்." அந்த சங்கங்கள் மார்ச் மாதத்தில் முதல் கட்டமாக இலங்கை மாணவர்களுக்கு 1,000 மிதி வண்டிகளை வழங்கின; மேலும் வரும் மாதங்களில் 4,000 பயனாளிகளை சென்றடைவதை இலக்காக கொண்டுள்ளது. அவரது TRF நன்கொடை இலக்கு $500,000 ஆகும்.



**V சிவகுமார்**
மின்ஜெனரேட்டர்
RC சேலம் நார்த்
RID 2982



**சந்தீப் சௌஹான்**
நெப்ராலஜிஸ்ட்
RC ஸ்ரீ கங்காநகர்
RID 3090

## உறுப்பு தானத்தை ஊக்குவித்தல்

உறுப்பு தான தூதராகப் டாக்டர் சந்தீப் சவுகான் கடந்த 10 ஆண்டுகளாக ராஜஸ்தான், ஹரியானா மற்றும் பஞ்சாப்பில் கருத்தரங்குகள், சிறப்பு நிகழ்வுகள் மற்றும் மருத்துவ முகாம்கள் மூலமாக இந்த முயற்சியை ஊக்குவித்து வருவதாக கூறுகிறார். 2011-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்த பிறகு, அவர் உடற்கூறு உறுப்பு தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பல திட்டங்களை முன்னெடுத்தார்.

இப்போது அவர் குறைந்தது 250 மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்ய இலக்கு வைத்துள்ளார், ஒவ்வொன்றும் சுமார் 250 நோயாளிகளை பரிசோதிக்கும். அவர் மன்சாவில் ஒரு கண்டறியும் ஆய்வகம் (GG: $30,000), ஹரியானாவின் உக்லானாவில் ஒரு தொண்டு மருத்துவமனை மற்றும் அகமதுநகர் அரசு மருத்துவமனை ஆகியவற்றில் இரண்டு டயாலிசிஸ் மையங்கள் (GG: $30,000) உட்பட முக்கிய திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளார்; மற்றும் தபோவன் இரத்த வங்கியில் தலசீமியா நோயாளிகளுக்கு இரத்த கூறு பிரிப்பான் நிறுவுவதற்கு $25,000 மதிப்புள்ள மற்றொரு GG திட்டம் ஸ்ரீ கங்காநகரின் திட்டப்பணியில் உள்ளது.

TRF நன்கொடைக்காக $225,000 இலக்கு நிர்ணயித்துள்ளார். மேலும், மரக்கன்று நடுதல், இரத்த தானம், சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஆகிய திட்டங்களை திட்டமிட்டுள்ளார். 160 புதிய உறுப்பினர்களை சேர்த்த அவர், மார்ச் மாதத்திற்குள் 2,700 உறுப்பினர்களை கொண்ட 135 சங்கங்களில் மேலும் 100 பேரைச் சேர்க்க விரும்புகிறார்.

## “பெரிய அளவிலான NCR திட்டங்கள்”

2005-ல் ரோட்டரியில் சேர்ந்ததிலிருந்து புதிய நண்பர்களுடன் இணைக்கும் நட்பை நான் அனுபவிக்கிறேன்” என தொழிலதிபரான மகேஷ் த்ரிகா கூறுகிறார்.

அவரது பெரிய அளவிலான திட்டங்கள் ராஜஸ்தானின் ஆல்வாரில் 5–7 புதிய தடுப்பணைகள் (ரூ.51 லட்சம்); டெல்லியில் உள்ள மகாராஜா அக்ரசென் மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள் ($15,000); மற்றும் குருகிராமில் உள்ள விவேகானந்த ஆரோக்கிய கேந்திராவில் புதிய ரோட்டரி கண் மையத்திற்கு அதிநவீன கருவிகள் ($276,000) வழங்குதல் – இவை அனைத்தும் செயல்பாட்டில் உள்ள GGகளின் கீழ் உள்ளன. “முதல் கட்டத்தில் 50,000 பெண்களுக்கு கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிராக தடுப்பூசி போடப்படும். எங்கள் HPV முகாம்கள் பெங்களூரு, குண்டூர் மற்றும் ஜெய்ப்பூரிலும் நடத்தப்படுகின்றன.” இந்த மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான பெண்களுக்கு பரிசோதனை செய்யும் மூன்று மேமோகிராபி பேருந்துகள் உள்ளன; பல் சுகாதார பராமரிப்பு பேருந்து, நீரிழிவு பரிசோதனை வேன் மற்றும் மனநல ஆரோக்கிய முகாம்களை நடத்தும் மொபைல் கிளினிக் ஆகியவை மாதத்திற்கு நூற்றுக்கணக்கான பயனாளிகளைச் சென்றடைகின்றன. ஒரு மில்லியன் துணிப்பைகள் விநியோகிக்கப்படும் அதே வேளையில், விற்பனையாளர்கள், சிறிய கடைகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து பிளாஸ்டிக் பைகள் மீட்கப்படுகின்றன. அவர் TRFக்காக $1.8 மில்லியன் சேகரிக்க இலக்கு வைத்துள்ளார்.



**மகேஷ் திரிக்கா**
உலகளாவிய லாஜிஸ்டிக்ஸ்
RC டெல்லி சவுத் ஈஸ்ட்
RID 3011

# Membership Summary

Source: RI South Asia Office

As on March 1, 2025

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 5,986 | 5.50 | 56 | 106 | 34 | 255 |
| 2982 | 91 | 4,058 | 5.91 | 30 | 438 | 97 | 188 |
| 3000 | 148 | 6,203 | 11.59 | 86 | 1,132 | 243 | 218 |
| 3011 | 136 | 5,324 | 30.99 | 72 | 1,863 | 234 | 41 |
| 3012 | 158 | 3,931 | 24.55 | 54 | 623 | 108 | 61 |
| 3020 | 82 | 4,570 | 8.07 | 40 | 557 | 119 | 351 |
| 3030 | 103 | 5,543 | 16.22 | 61 | 953 | 506 | 399 |
| 3040 | 102 | 2,357 | 14.76 | 35 | 758 | 63 | 216 |
| 3053 | 75 | 3,141 | 17.73 | 23 | 327 | 40 | 131 |
| 3055 | 83 | 3,408 | 12.12 | 47 | 677 | 58 | 394 |
| 3056 | 84 | 3,746 | 25.15 | 21 | 187 | 107 | 201 |
| 3060 | 100 | 5,134 | 15.60 | 52 | 1,859 | 79 | 154 |
| 3070 | 116 | 3,099 | 15.49 | 35 | 280 | 73 | 64 |
| 3080 | 110 | 4,385 | 13.43 | 59 | 1,965 | 212 | 127 |
| 3090 | 134 | 2,605 | 6.26 | 23 | 353 | 359 | 174 |
| 3100 | 115 | 2,204 | 10.57 | 17 | 112 | 41 | 151 |
| 3110 | 137 | 3,736 | 11.86 | 20 | 188 | 103 | 114 |
| 3120 | 90 | 3,790 | 15.78 | 34 | 474 | 43 | 58 |
| 3131 | 135 | 5,427 | 35.58 | 122 | 2,593 | 302 | 232 |
| 3132 | 99 | 3,837 | 14.73 | 31 | 365 | 167 | 227 |
| 3141 | 123 | 6,590 | 28.65 | 120 | 3,491 | 218 | 247 |
| 3142 | 115 | 4,004 | 22.78 | 56 | 1,643 | 138 | 99 |
| 3150 | 105 | 4,035 | 12.86 | 84 | 1,677 | 125 | 130 |
| 3160 | 78 | 2,463 | 8.93 | 25 | 82 | 95 | 82 |
| 3170 | 143 | 6,624 | 15.02 | 89 | 1,059 | 203 | 184 |
| 3181 | 88 | 3,743 | 10.93 | 40 | 446 | 131 | 122 |
| 3182 | 86 | 3,711 | 11.02 | 46 | 234 | 113 | 105 |
| 3191 | 90 | 3,337 | 19.84 | 74 | 1,790 | 192 | 36 |
| 3192 | 80 | 3,349 | 22.22 | 61 | 1,623 | 163 | 40 |
| 3201 | 170 | 6,640 | 10.00 | 112 | 1,973 | 116 | 98 |
| 3203 | 100 | 5,208 | 7.43 | 46 | 732 | 157 | 39 |
| 3204 | 83 | 2,794 | 9.74 | 24 | 235 | 22 | 18 |
| 3211 | 162 | 5,244 | 9.02 | 12 | 141 | 33 | 135 |
| 3212 | 120 | 4,662 | 10.79 | 89 | 607 | 215 | 153 |
| 3231 | 94 | 3,618 | 7.16 | 31 | 383 | 97 | 419 |
| 3233 | 88 | 3,308 | 18.26 | 58 | 1,676 | 55 | 63 |
| 3234 | 79 | 3,194 | 24.23 | 63 | 1,544 | 89 | 42 |
| 3240 | 100 | 3,513 | 17.02 | 42 | 745 | 70 | 249 |
| 3250 | 114 | 4,395 | 23.50 | 36 | 506 | 75 | 192 |
| 3261 | 100 | 3,420 | 24.42 | 18 | 112 | 37 | 46 |
| 3262 | 118 | 3,888 | 16.15 | 83 | 790 | 652 | 294 |
| 3291 | 144 | 3,771 | 27.53 | | | 94 | 774 |
| **India Total** | **4,618** | **173,995** | | **2,127** | **37,299** | **6,078** | **7,323** |
| 3220 **Srilanka** | 72 | 2,093 | 16.67 | 85 | 3,675 | 141 | 78 |
| 3271 **Pakistan** | 108 | 1,469 | 20.83 | 103 | 418 | 275 | 28 |
| 0063 (3272) **Pakistan** | 76 | 1,152 | 19.70 | 48 | 283 | 23 | 49 |
| 0064 (3281) **Bangladesh** | 246 | 5,249 | 17.36 | 185 | 1,001 | 120 | 211 |
| 0065 (3282) **Bangladesh** | 139 | 2,853 | 8.62 | 167 | 1,099 | 25 | 48 |
| 3292 **Nepal** | 158 | 5,556 | 19.11 | 178 | 5,315 | 126 | 141 |
| **S Asia Total** | **5,417** | **192,367** | **15.66** | **2,893** | **49,090** | **6,788** | **7,878** |

# RI தெற்காசிய அலுவலகத்திலிருந்து செய்தி

**2024–25 வருடாந்திர நிதி சவால்**

வருடாந்திர நிதி சவால் இந்த ரோட்டரி ஆண்டில் மீண்டும் வருகிறது. அறங்காவலர் பரத் பாண்டியா மற்றும் மண்டலங்கள் 4, 5, 6 மற்றும் 7 ஆகியவற்றிலிருந்து RRFC-களால் உங்களிடம் கொண்டு வரப்பட்டது, இந்த ஆண்டின் சவால் அற்புதமான புதிய அளவுகோல்களுடன் வருகிறது – அதிக அங்கீகாரம், அதிக வெகுமதிகள் மற்றும் அதிக தாக்கம்! சவாலை ஏற்று, நவம்பர் 2025-ல் டெல்லி மாநாட்டில் அங்கீகாரம் பெறுங்கள்.

## 2024–25 Annual Fund (AF) Challenge

| | Champion | Platinum | Gold | Silver |
|---|---|---|---|---|
| **For District** | District achieving AF per capita of $200 or more | 100% members contributing $25 or more to AF, or the district reaching an AF per capita of $175 or more | At least 75% members contributing $25 or more to AF, or the district reaching an AF per capita of $150 or more | At least 50% members contributing $25 or more each to the AF, or the district reaching AF per capita of $100 or more |
| **For Club** | NA | Minimum $25 contribution by each member along with on AF per capita of $200 | Minimum $25 contribution by each member along with AF per capita of $100 | Minimum $25 contribution by each member |

**Eligibility Criteria:** மாவட்ட விருதுக்கு தகுதி பெற, ஒவ்வொரு கிளப்பிலிருந்தும் குறைந்த பட்சம் $100 நன்கொடை வழங்கும் 100% Club Giving அடைய வேண்டும்.

2023-24 க்கான வருடாந்திர நிதி சவால் வெற்றியாளர்கள் *2023-24_annualfundchallengeawards_district-wise-statistics.pdf*-ஐ பார்க்கவும்.

2023-24-ம் ஆண்டிற்கான வருடாந்திர நிதி சவாலின் கீழ் தங்கள் மாவட்டத்தின் செயல்திறனுக்காக RRFC களால் அங்கீகரிக்கப்பட்ட முதல் மூன்று ARRFCகள்:

**Zone 4** : **PDG சரத் ஜெயின் (RID 3012)**

**Zone 5** : **PDG A கார்த்திகேயன் (RID 3203)**

**Zone 6** : **Rtn M K ஜா (RID 3292)**

**Zone 7** : **PDG பங்கஜ் ஷா (RID 3131)**

**பால் ஹாரிஸ் சொசைட்டி விருது**

ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும், அதிக புதிய PHS உறுப்பினர்களைக் கொண்ட மாவட்டம் (குறைந்தபட்சம் 20 புதிய PHS உறுப்பினர்கள்) இந்த விருதுக்கு தகுதி பெறுவார்கள்.

**RY 2025-26-க்கான மாவட்ட அறக்கட்டளை பதவிகளை நியமிக்கவும்**

2025–26-க்கான நிதி திரட்டும் இலக்குகளை வெற்றிகரமாக அடைய DGE-க்கள் சங்கத் தலைவர்களிடையே பேசி அறக்கட்டளைக்கான குழுவை ஏற்படுத்துவது முக்கியம். மாவட்ட அறக்கட்டளை, பெருநன்கொடை, CSR, வருடாந்திர நிதி துணை கமிட்டி, பால் ஹாரிஸ் சொசைட்டி ஒருங்கிணைப்பாளர், நிதி திரட்டுவதற்கான துணை கமிட்டி மற்றும் போலியோ பிளஸ் துணை கமிட்டிக்கான தலைவர்களை நியமிக்கவும். அவர்களை நியமித்தபின் RI-க்கு அறிக்கை அளிக்கவும். இது உங்கள் நிதி திரட்டும் முயற்சிகளை ஆதரிப்பதற்கான அத்தியாவசிய அறிக்கைகள் மற்றும் தகவல்களுக்கான அணுகலை அவர்களுக்கு வழங்கும். இந்த நியமனங்கள் பற்றிய தகவலை My Rotary: Manage என்ற பிரிவுக்குச் சென்று அதில் District Adminstration என்னும் விசையில் தட்டவும். ■

**Rotary News Plus** படித்திருக்கிறீர்களா?

இந்த ஆன்லைன் வெளியீடு ஒவ்வொரு சந்தா உறுப்பினரின் மின்னஞ்சல் ID-க்கு அனுப்பப்படுகிறது. எங்கள் வலைத்தளத்தில் (*www.rotarynewsonline.org*) **ரோட்டரி நியூஸ் பிளஸ்** இதழைப் படியுங்கள்.



# RID 2981

## RI மாவட்டம் 2981

தமிழ் நாட்டின் மயிலாடுதுறையில் உள்ள 8 ரோட்டரி சங்கங்களும் இணைந்து நடத்திய வேலைவாய்ப்புத் திருவிழாவில் 450 பேர் நேர்காணலில் கலந்துகொண்டார்கள். இதில் 165 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்தன. இதில் 50% பெண்கள்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





# RID 3011

## RC குர்காவ்ன் காஸ்மோபாலிடன்

சிகந்தர்பூர் விஷன் அறக்கட்டளைப் பெண்கள் விடுதியில், RCகள் டெல்லி மன்தான், குர்காவ்ன் ஆதரவுடன், நடமாடும் கழிப்பறை தொடங்கப்பட்டது.

# RID 3020

## RC விசாகப்பட்டினம்

புனித ஜூட் இந்தியா குழந்தைகள் பராமரிப்பு மையத்தில் புற்றுநோய் வந்த குழந்தைகளுக்கு ரூ.5,000 மதிப்புள்ள அட்டை விளையாட்டுகள், பழங்கள் வழங்கப்பட்டன. இந்தக் குழந்தைகள் சுற்றுச்சூழல், மனித உணர்வுகள், நகைச்சுவையான கற்றல் போன்ற கருப்பொருட்களிலான உடான் என்னும் பள்ளிக் கண்காட்சிக்கு அழைக்கப்பட்டார்கள்.





RID 3030

**RC ஸ்மார்ட் சிட்டி சந்திராபூர்**

சந்திராபூரில் உள்ள காது கேளாதோர், வாய் பேசாதோர் பள்ளி ஒன்றில் 100 மாணவர்களுக்குச் சீருடைகள் வழங்கப்பட்டன. உலக மாற்றுத் திறனாளிகள் நாளில், பார்வைக் குறைபாடுள்ளோருக்கு வெள்ளைக் கைத்தடிகள், போர்வைகள், மளிகைப் பொருட்கள், ரொக்கப் பணம் வழங்கப்பட்டன.

RID 3000

**RC புதுக்கோட்டை சிட்டி**

காந்திநகர் நகராட்சித் தொடக்கப் பள்ளியில், துரைசாமி நர்சிங் ஹோம் பாரத் ஜன்கல் மருந்துக்கடை, சஞ்சீவி மருந்தகம், ஆத்மா இரத்த வங்கி ஆதரவுடன் பெரிய நலப் பரிசோதனை முகாம் நடைபெற்றது. நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு, மருத்துவ அறிவுறுத்தல்களையும் மருந்துகளையும் பெற்றார்கள்.





RID 3090

**RC ஹிசார்**

ஹிசாரில் உள்ள முதியோர் இல்லமான பூமி ஆசிரமத்தில் வசிக்கும் 25 முதியவர்களைக் குளிர் இரவுகளிலிருந்து பாதுகாப்பதற்கெனப் போர்வைகள் வழங்கப்பட்டன.

RID 3080

**RC அம்பாலா இன்டஸ்ட்ரியல் ஏரியா**

இந்தச் சங்கத்தின் தலைவர் தலிப் குமார் தலைமையில் ரோட்டரியன்கள் அம்பாலா கன்டோன்மென்ட்டில் உள்ள B D ஆர்யா உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குக் குளிர் ஆடைகள், காலணிகளை வழங்கினார்கள். பள்ளி முதல்வர் ஷாலினி குப்தா-விடம் விளையாட்டுப் பொதிகள் ஒப்படைக்கப்பட்டன.

# கோடையை நிலையாக சமாளிக்க...

ப்ரீதி மெஹரா

*எளிமையான வாழ்க்கை முறைக்கான தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறார் சோலார் காந்தி.*

கோடைகாலம் நெருங்கிவிட்டது. நம்மை குளுமையாக வைத்திருப்பது ஒரு பெரிய பிரச்னை மட்டுமல்ல, விவாதிக்கப்பட வேண்டிய விஷயமும் கூட. நிலையான வாழ்க்கை முறையை பின்பற்ற நினைப்பவர்களுக்கு குறைந்த ஆற்றலுடன் இந்த பூமியை எப்படிச் சமாளிப்பது என்பது மிகவும் சவாலானது. ஆனாலும், கோடை வெப்பத்தை எப்படி சமாளித்து வசதியாக இருக்கலாம் என்பதைப் பார்ப்போம்.

இந்த முறை இந்த விஷயத்தைப் பற்றி ஒரு அதிகாரியிடம் பேசுவது என நினைத்தேன். மும்பை ஐ.ஐ.டி.யின் பேராசிரியர் சேதன் சோலங்கி, “சோலார் காந்தி” என்று அழைக்கப்படுகிறார். அவர் எரிசக்தி சுய யாத்திரையில் இருக்கிறார். கடந்த நான்கரை ஆண்டுகளாக அவரே வடிவமைத்த சூரியசக்தியில் இயங்கும் வாகனத்தில் புவியில் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பயணித்து மக்கள், நிறுவனங்கள், அரசுகள் மற்றும் தாம் சொல்வதைக் கேட்க விரும்புபவர்களிடம் எரிசக்தி நுகர்வைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் எதிர்கால சந்ததியினருக்காக பூமியை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி வருகிறார். தனக்கும் தன்னுடன் இருப்பவர்களுக்காக உணவு தயாரிக்க சூரியசக்தி மின்சாரத்தையே பயன்படுத்தி வருகிறார்.

பருவநிலை வேகமாக மாறிவரும் சூழலில், அதை எதிர்கொள்ள நாம் எதுவும் செய்யாவிட்டால், நமது குழந்தைகள் துயரமான வாழ்க்கைக்கு ஆளாக நேரிடும் என்று மக்களிடம் விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொள்வதற்காக தமது பேராசிரியர் பதவியை 11 ஆண்டுகளுக்கு முன்னர் ராஜிநாமாச் செய்துவிட்டார்.

அவரது எண்ணங்கள் எளிமையாக இருந்தாலும் கருத்துகள் ஆழமானவை. தொழில்நுட்பம், வர்த்தகம், நுகர்வு மற்றும் மக்கள்தொகை வளர்ந்து கொண்டே போனாலும், பூமியின் பரப்பு ஒருபோதும் மாறாது என்பதை மக்கள் உணர வேண்டும் என்கிறார். நில வளம், நீர்வளம், மண் வளம் உள்ளிட்டவை ஒரு வரம்புக்கு உட்பட்டவை. ஒரு அளவுக்கு மேல் அவற்றை சுரண்டுவதை நாம் நிறுத்தா விட்டால், பசுமை இல்ல வாயுக்கள் பூமியை வெப்பப்படுத்தாவிட்டால், பூமியில் வாழ்வதே ஓர் அச்சுறுத்தலாகி விடும். உண்மையில், அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் தரவுகளின் அடிப்படையில் 2024-ம் ஆண்டுதான் மிக வெப்பமான ஆண்டாக பதிவாகியுள்ளது. உலகளாவிய சராசரி வெப்பநிலை, தொழில் துறைக்கு முந்தைய நிலையைவிட 1.6 டிகிரி செல்சியல் அதிகமாக இருந்துள்ளது.

*பேராசிரியர் சேத்தன் சோலங்கி தனது சூரிய சக்தியில் இயங்கும் பேருந்துடன். எரிசக்தி நுகர்வைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து மக்களுக்குக் கற்பிக்கும் 11-ஆண்டு பணியில் அவர் உள்ளார்.*



கடந்த பல தசாப்தங்களாக, நாம் குறுகியகால ஆதாயத்தையே தேர்ந்தெடுத்து வருகிறோம். அதுதான் பருவநிலை மாற்றத்துக்கு வழிவகுத்துவிட்டது. இந்த பருவநிலை மாற்றம்தான் வெள்ளம், புயல், வெப்ப அலைகள் போன்ற பேரழிவுகள் ஏற்பட காரணமாகிறது. இதன் மூலம் பெரும் உயிரிழப்புகள், உள்கட்டமைப்பு, சொத்துக்கள், விவசாயத்திற்கு பெரும் சேதம் விளைவிக்கிறது. உணவுப் பாதுகாப்பும் கேள்விக்குறியாகிறது. அதற்கு பதிலாக நாம் குறுகிய கால வலியைத் தேர்ந்தெடுத்தால், அது நமது குழந்தைகளுக்கு நீண்டகால ஆதாயமாக மாறும். “எளிமையும் வசதியும் இரண்டு முனைகள் கொண்ட வாள் போன்றது” என்று அழுத்தமாக வலியுறுத்துகிறார்.




குளிர்சாதனக் கருவிகளை (ஏசி) பயன்படுத்துவதில் அவருக்கு உடன்பாடு இல்லை. எனவே பேராசிரியர் சோலங்கி, தனது வாகனத்தில் அதற்குப் பதிலாக குளிரூட்டியை பயன்படுத்துகிறார். ஏசி கருவியில் பயன்படுத்தப்படும் பொருள்கள், குறிப்பாக ஹைட்ரோ ஃப்ளூரோகார்பன்கள் காற்று மாசுபாட்டை அதிகரிக்கும் பசுமை இல்ல வாயுக்களைப் போல் கடும் வெப்பத்தை உருவாக்கும் தன்மை கொண்டவை. இது நகர்ப்புரத்தில் புவி வெப்பமடைய காரணமாகிறது.

எனினும் ஏசி வசதியில்லாமல் வாழ முடியாது என்று நினைப் பவர்களும், அதை இயக்கவேண்டும் என்று வலியுறுத்துபவர்களும் ஏசியை 26 அல்லது 27 டிகிரி செல்சியசில் வைத்து இயக்கினால், பருவநிலைத் தாக்கம் குறைவாக இருக்கும் என்று கூறுகிறார். ஏசி கருவியை 18 டிகிரி செல்சியஸில் ஓடவிட்டு, கதகதப்பாக இருக்க போர்வையையும் போர்த்திக் கொண்டு தூங்குபவர்களை நான் பார்த்திருக்கிறேன். அப்படிச் செய்வதில் எந்த லாபமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

என்னுடைய நண்பர் ஒருவர் ஏசி கருவியை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவது குறித்து ஒரு யோசனை தெரிவிக்கிறார். ஏசி பொருத்தப்பட்ட அறையை பயன்படுத்துவதற்கு முன்னர், கதவு, ஜன்னல்களை மூடிவிட்டு ஏசி கருவியை 26 டிகிரி செல்சியசில் ஒரு பதினைந்து நிமிடம் ஓடவிடுங்கள். அந்த அறை குளிர்ச்சியாக மாறிவிடும். இதன் மூலம் நீங்கள் அறையை குளிர்ச்சியாக்க கையில் ரிமோட்டை எடுத்து அதில் 18 டிகிரி செல்சியசில் ஏசி-யை இயக்குவது தவிர்க்கப்படும். பெரும்பாலும் மக்கள் அறையின் வெப்பநிலையை சரிசெய்யாமலேயே தூங்கச் சென்றுவிடுவார்கள்.

குளிர்பதனப் பெட்டியில் தண்ணீரை குளிர்விப்பதற்கு பதிலாக, பல நூற்றாண்டுகளாக தண்ணீரை குளிர்ச்சியாகவும், புதிதாகவும் வைத்திருக்க உதவும் மண்பானைகளைப் பயன்படுத்தலாம் என்று பேராசிரியர் பரிந்துரைக்கிறார். தண்ணீரை குளிரவைக்க அல்லது சூடாக்க வேண்டுமானால் அதிக எரிசக்தி தேவைப்படும் என்றும் அவர் கூறுகிறார்.

சூரியசக்தி, மின்சார வாகனங் களுக்கு நாம் மாறவேண்டும் என்று விரும்பினாலும், மின்னேற்றம் செய்யும் நிலையங்கள், செயற்கை நுண்ணறிவு போன்றவற்றை பயன்படுத்தில் நீண்டகால நோக்கில் சில பிரச்னைகள் ஏற்படும் வாய்ப்புள்ளது. சோலார் பேனல் கழிவுகள், பேட்டரி கழிவுகள், எரிசக்தி, தண்ணீர் வீணடிக்கப்படுவது தொடர்பான தரவு மையங்கள், காற்று மாசுபாடு ஆகியவற்றையும் நாம் சமாளிக்க வேண்டியுள்ளது. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பிரச்னைகளை சமாளிக்க வேண்டுமானால், முதலில் நாம் நுகர்வை குறைக்க வேண்டும். ஒரு பசுமையான வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டுமானால், ஒரு வருடத்திற்கு ஆடைகளை வாங்கிக் குவிக்காமல் இருக்க வேண்டும். துணிகளை இஸ்திரி செய்வதை குறைக்க வேண்டும். செருப்பு, ஷூக்கள், பைகள் கிழிந்துவிட்டால் அவற்றை சரி செய்து பயன்படுத்த வேண்டும். அவற்றை தூக்கி எறிந்துவிட்டு புதியனவற்றை வாங்குவதை நிறுத்த வேண்டும். விடுமுறையை கழிக்க தொலைவில் உள்ள இடங்களுக்குச் செல்லாமல், அருகில் உள்ள இடங்களுக்குச் செல்ல பழகிக் கொள்ளுங்கள். தேவையான பொருள்களை மட்டுமே வாங்கும் பழக்கத்தை மேற்கொண்டால் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

நமது கருத்து, எண்ணத்தில் மாற்றம் வேண்டும். “சொகுசு கார்களில் பயணம் செய்பவர்களையும், தேவைக்கு அதிகமாக பொருட்களை வாங்கிக் குவிப்பவர்களையும் பார்த்து செயல்படாமல், சிக்கனமாக இருப்பவர்களை பின்பற்றி நாம் செயல்பட வேண்டும். பொது இயக்கமாக வளர்ந்தால்தான் இவற்றைச் செயல்படுத்த முடியும்” என்று அவர் வலியுறுத்தினார். https://energy-swaraj.org/ சிறந்த வழிகாட்டியாக இருக்கும். இந்த கோடைக்காலத்தில் உறுதிமொழியேற்க இது சரியான நேரமாக இருக்கலாம்!

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல்பிரச்சனைகளைப்பற்றி
எழுதி வருகிறார்.

# சரும பராமரிப்பு- அழகைவிட முக்கியமானது

பரத் — ஷலன் சவூர்

உங்களை உண்மையில் யார் என வரையறுப்பதும், சமூகத்தில் உங்களை நினைவுபடுத்துவதிலும் முக்கிய பங்கு வகிப்பது சருமம்தான். இன்னும் துல்லியமாகச் சொன்னால், உங்கள் நிறம் கறுப்பு, வெள்ளை அல்லது மாநிறமாக இருக்கலாம். பெரும்பாலும் உங்கள் முகத்தை மட்டும் வைத்து யாரும் குறிப்பிடுவதில்லை. உங்கள் நிறம் மற்றும் முகம்தான் உங்களுக்கு பாஸ்போர்ட். தெரிந்தோ தெரியாமலோ உங்கள் தோலின் நிறம்தான் உங்களுக்கு அடையாளம். அழகு என்பது தோலின் நிறம் மட்டும் அல்ல, அதற்கும் மேலே.

உங்கள் உள் ஆரோக்கியம் நன்றாக இருக்கிறதா இல்லையா என்பதை உங்கள் சருமம் காட்டிவிடும். நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள் என்பது முக்கியமல்ல, ஆனால், உங்களை எது சாப்பிடுகிறது என்பது முக்கியம். அதாவது நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதை உங்கள் முகம் அல்லது உடல் காட்டிவிடும். உங்களின் உள் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டால் சருமம் உங்களை எச்சரிக்கும்.

உடலில் மூன்று அடுக்கு சரும நிலைகள் உள்ளன. மேலிருந்து கீழே சென்றால், வெளிப்புறமாக உயிரணுக்களால் உருவான மேல்தோல் (epidermis) உள்ளது. இது சருமத்தின் எல்லையை பாதுகாக்கும் வேலையைச் செய்கிறது. தேவைப்படும்போது புதிய செல்களை உற்பத்தி செய்கிறது. இரண்டாவது அடுக்கு மேல் தோலுக்கு அடுத்துள்ள உள்தோல் (dermis). இது இழைகள், ஜெல் போன்ற திரவம் மற்றும் தந்துகிகள், நரம்பு முனைகள் மற்றும் மயிர்க்கால்கள் கொண்டது. இது உடலின் வெப்பநிலையை கட்டுப்படுத்த எண்ணெய் சுரப்பியாகச் செயல்படுகிறது. மயிர்க்கால்களுடன் இணைக்கப்பட்டது. மூன்றாவது அடுக்கு கீழ்த் தோல் அல்லது அடித் தோல் (hypodermis) என்று அழைக்கப்படும். இது கொழுப்பை சேமித்து வைத்து தசைகளையும் எலும்புகளையும் காயங்களிலிருந்து பாதுகாக்கிறது. தோல் காற்றை சுவாசித்து வைட்டமின்களை உருவாக்குகிறது. நமது இரத்த வைட்டமின் D-யில் 90 சதவீதம் D3 ஆகும். காற்று மற்றும் சூரியஒளி தவிர முட்டை, கொழுப்பு நிறைந்த சால்மன் மீன் ஆகியவற்றில் வைட்டமின் டி உள்ளது.

வைட்டமின் D அளவை பராமரிக்க நாம் தினமும் 30 நிமிடங்கள் சூரியஒளி நம்மீது படும் வகையில் செயல்பட்டாலே போதுமானது. அது நமது சக்தியை அதிகரிப்பதுடன் எலும்புகளை வலுப்படுத்தும். இந்திய துணைக் கண்டத்தில் வருடத்தில் 300 முதல் 330 நாட்கள் வெப்பமாக இருப்பதால், சூரிய ஒளி மூலம் வைட்டமின் D-யை நாம் பெற போதுமான நேரம் இருக்கிறது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் தினமும் 400 சர்வதேச அலகுகள் போதுமானது என்று கூறுகிறது. நமது கோதுமை-பழுப்பு நிறத் தோலில் மெலனின் நிறமி சருமத்தை பாதுகாக்கிறது. இது மெலனோமா மற்றும் இதர தோல் புற்றுநோய்கள் வராமல் இயற்கையாக தடுக்கிறது. ஆனாலும், 50 முதல் 94 சதவீத இந்தியர்களிடம் வைட்டமின் D குறைபாடு உள்ளது. இது மருந்து சந்தையில் உள்ள சுயநலவாதிகளால் உருவாக்கப்பட்ட பார்வையா? என்பது தெரியவில்லை. தோல் நோய் நிபுணர்கள் சாதாரணமாக வைட்டமின் D அளவு என்ன என்பதை நேருக்கு நேர் பார்ப்பதில்லை. ஒரு மில்லி கிராமுக்கு 9 நானோகிராம் என்பதே போதுமானது என்கிறது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில். அமெரிக்காவில் உள்ள எண்டோகிரைன் சொசைட்டி 30 நானோ கிராம் அளவு வரை பரிந்துரைக்கிறது. அமெரிக்காவின் இந்த தரத்துக்கு குறைவாக இருக்கக்கூடாது என்று எச்சரிக்கின்றனர் நோயியல் துறை நிபுணர்கள். எப்போதும் போல, அமெரிக்கா மீண்டும் சருமத்தில் வைட்டமின் D3 தரத்தை உலகம் பின்பற்ற மாற்றியமைத்துள்ளது. அதுதான் பின்பற்றப்படுகிறது.

சாதாரணமாக வைட்டமின் D3 அளவு 12 நானோகிராம்/ml இது வழக்கமாக உட்கொள்ளும் கால்சியத்துடன் சேர்ந்தால் பாதுகாப்புக்கு போதுமானது. இதை உணர்ந்து கொண்டு சமூகம் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். ஏனெனில், சமூக ஊடகங்கள் இந்த வைட்டமினை தேவையில்லாமல் ஊதி பெரிதாக்குகின்றன. சோர்வு, முடி உதிர்தல், நீரிழிவு நோய், முதல் உயர் இரத்த அழுத்தம் என அனைத்தையும் குணப்படுத்துவதற்கான தீர்வு உள்ளது. ஏன் புற்றுநோயைக்கூட குணப்படுத்த முடியும். மருத்துவர்கள் தன்னிச்சையாக செயல்படுவது அல்லது கண்ணை மூடிக்கொண்டு செயல்படுவதன் மூலம் குற்றவாளியாக இருக்கலாம். வைட்டமின் D-யை தவறாகப் பரிந்துரைப்பது அவர்களின் மனசாட்சிக்கு எந்த வகையிலும் சுமையாக இருக்காது. மருந்தாளுநர்களும், “மருந்துவர்கள் பரிந்துரை இருந்தால் மட்டுமே” மருந்து, மாத்திரை கொடுப்பது என்கிற முன்னெச்சரிக்கை எல்லையை மீறிச் செயல்படுகின்றனர். இன்னும் சொல்லப்போனால், ஒருவரின் பணம் அல்லது பயத்தின் மீது விளையாடுகிறார்கள். இதனால் பிரச்னை பெரிதாகிறது.

உண்மை எளிதானது. வைட்டமின் D-யைப் பெற தினமும் சூரிய ஒளி நம்மீது படும் வகையில் 30 நிமிடங்கள் இருப்பது அல்லது நடப்பதே போதுமானது. மேலும் இந்த நாட்டில் கிடைக்கும் சில நல்ல விஷயங்களில் இலவசமாக கிடைக்கும் சூரிய ஒளியும் ஒன்று.

சிறுகுடல்களில் உள்ள செல்கள், வைட்டமின் D-யை உற்பத்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. செரிமானத்தின்போது உணவு

சிறுகுடலுக்குள் செல்லும்போது வைட்டமின்கள், தாதுக்கள் உறிஞ்சப்படுகின்றன. கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் இரத்த ஓட்டத்தில் நீந்தும்போது, அவை ஒன்றிணைந்து தாதுக்களை உறிஞ்சி எலும்புகளை வலிமைப்படுத்துகின்றன.
தோல் மருத்துவர்கள் அழகுசாதனத் துறையில் முக்கியப் பங்கு வகிப்பவர். தங்கள் வாழ்க்கையை வாழ்வாதாரமாகக் கொண்டவர்களுக்கு இது மிகப்பெரிய வணிகச் சந்தை. புதுமணப் பெண்கள், மாடல்கள், நடிகர்கள் மற்றும் தோற்றத்தை மாற்றிக்கொள்ள விரும்புபவர்களுக்கு சருமத்தை அழகு படுத்துவதுதான் முதல் மற்றும் இறுதியான தேர்வாகும். தோல் புற்றுநோய் மற்றும் நோய் எதிர்ப்புசக்தி கோளாறு உடையவர்களுக்கு சரும பாதுகாப்பு நல்ல பலனளிக்கும் என்பது சாதாரண மனிதர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், பலருக்கு தோல் பராமரிப்பு புதிய அவதாரம் எடுத்திருப்பது புரியும். இன்ஸ்டாகிராம் பயன்படுத்துவோர், பயணம் செல்பவர்கள், சுயபடம் எடுப்பதில் ஆர்வம் உள்ள நபர்கள் பலரும் உள்ளனர். அவர்களுக்கு இதுபற்றி நன்கு தெரியும். ஒரு தோல் மருத்துவர் சரும பராமரிப்பை விளம்பரப்படுத்துவதில்லை. அது பற்றி அவருக்கு தெரிந்திருந்தாலும் அதற்கான தேவை இல்லை. அவரது தயாரிப்புகளை விளம்பரப்படுத்துவதற்காகவே இருக்கிறது இணையதளம். தோல் பராமரிப்பு மருத்துவரின் பேட்டிகள், கேள்வி-பதில் உரையாடல்கள் ஆயிரக்கணக்கானவர்களை ஈர்க்கின்றன. அவரை பின்தொடர் பவர்களும், வாடிக்கையாளர்களும் அதிகரிக்க அதிகரிக்க அவரிடம் பணம் குவிகிறது.


பீட்ரூட் அதிக ஊட்டச்சத்தானது. தோற்றத்திலும் பொலிவைக் கொடுப்பது. பீட்ரூட்டை சமைத்தும் சாப்பிடலாம் அல்லது சாலடாகவும் சாப்பிடலாம். அது ஒரு ஆரோக்கியமான உணவு. இரத்த அழுத்தத்தை குறைக்கும் தன்மை கொண்டது. இதில் நைட்ரேட்டுகள் உள்ளன. அவை நைட்ரிக் அமிலமாக மாறி, நமது தமனிகளை நெகிழ்வாக வைத்திருக்கின்றன. இது கெட்ட கொழுப்பு குறைத்து நல்ல கொழுப்பை அதிகரிக்க உதவுகிறது. உங்கள் மதிய உணவு அல்லது இரவு உணவில் 7 அல்லது 8 பீட்ரூட் துண்டுகளைச் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது. அதை பழச்சாறாக செய்தும் குடிக்கலாம். அது உங்களுக்கு புத்துணர்ச்சியையும் சக்தியையும் அளிக்கும்.

உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியில் 85 சதவீதம் உங்கள் குடலில் உள்ளது. மேலும் புற்றுநோய்களில் 85 சதவீதம் வாழ்க்கை முறை மாற்றத்தால் ஏற்படுபவைதான். பீட்ரூட்டில் அதிக சத்துள்ள வைட்டமின்களும், தாதுக்களும் உள்ளன. சூரிய ஒளியினால் கிடைக்கும் வைட்டமின் D-யை பீட்ரூட்டிலிருந்தும் பெறமுடியும். ஏனெனில், இது கழிவுகளை அகற்றவும் உதவுகிறது. சருமத்திற்கு கூடுதல் பளபளப்பை கொடுக்கிறது.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.



# நமது வார்த்தைகள், மற்றும் வேறொருவரின் வார்த்தைகள்




*மொழிபெயர்ப்பு மற்றும் ஒரு நினைவுக் குறிப்பு பற்றிய பிரதிபலிப்பு.*



சந்தியா ராவ்

சமீபத்தில் scroll.in-ல் ஜெயஸ்ரீ கலாத்தில் எழுதிய "இலக்கிய மொழிபெயர்ப்பும் அதன் அதிருப்திகளும்" என்ற கட்டுரையைப் படித்தது, சில ஆண்டுகளுக்கு முன்பு குஜராத்தி நாட்டுப்புறக் கதையை மராத்தியில் மொழிபெயர்த்தது தொடர்பான ஒரு நிகழ்வை எனக்கு நினைவூட்டியது. அந்தக் கதை – ஆங்கிலப் பதிப்பில் "அனைத்தும் இலவசம்" (All Free) என்று தலைப்பிடப்பட்டது – பிகுபாய் என்ற மனிதர் புதிதாகத் துருவிய தேங்காயை விரும்புகிறார், எனவே அதை மலிவான விலையில் தேடிச் செல்கிறார். இறுதியில் அவர் ஒரு தென்னந்தோப்பிற்கு செல்கிறார், அங்கு ஒரு தேங்காய் அவர் தலையில் விழுகிறது – அனைத்தும் இலவசமாக! இது ஒரு நகைச்சுவையான கதை, அதை நகைச்சுவையாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இருப்பினும், மராத்தி மொழிபெயர்ப்பாளர் முடிவை அப்படியே மொழிபெயர்க்க மறுத்துவிட்டார். "தேங்காய் தலையில் விழுந்தால் நீங்கள் இறந்து போகலாம்! இதை மொழிபெயர்க்க நான் மறுக்கிறேன்" என்று அவர் வாதிட்டுள்ளார். "வாதங்கள் முன்னும் பின்னுமாகச் சென்றன. அவர் தவறாகச் சொல்லவில்லை, ஒரு தேங்காய் உங்கள் தலையில் விழுந்தால் கொல்லும் திறன் கொண்டது தான். இறுதியில் மொழிபெயர்ப்பாளரே வெற்றி பெற்றார்.

இவற்றில் எதுவும் மொழிபெயர்ப்பு கோட்பாட்டிற்கு பங்களிக்க வாய்ப்பில்லை என்றாலும், அது பணியின் நுணுக்கமான தன்மையை வெளிப்படுத்துகிறது. "இலக்கிய மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு வார்த்தைக்கு வார்த்தை நேரடியான மொழிபெயர்ப்பு என்ற உறுதியான நம்பிக்கையே மிகவும் பொதுவான தவறான எண்ணம். வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் கண்ணுக்குத் தெரியாத விசைப் புலங்களால் சூழப்பட்டுள்ளன. இவை வரலாறு, கலாச்சாரம், மொழியியல், உணர்ச்சிகள், மதம் என எண்ணற்ற விஷயங்களைக் கொண்டிருக்கலாம். ஒரு இலக்கிய மொழிபெயர்ப்பாளர் ஒவ்வொரு வார்த்தையையும் அதன் நேரடியான அர்த்தத்தையும் மட்டுமல்லாமல், இந்த கண்ணுக்குத் தெரியாத காரணிகளையும் மொழிபெயர்ப்பில் கொண்டு வர வேலை செய்கிறார்."

மொழிபெயர்ப்பாளர் ஜெனிஃபர் கிராஃப்ட் மொழிபெயர்ப்பை ஒரு படைப்பின் "மறுவாழ்வு" என்று விவரித்ததை ஜெயஸ்ரீ கவனத்திற்குக் கொண்டு வருகிறார்: "BookPage-க்காக கேட் அக்ரீயிடம் ஒரு நேர்காணலில், அவர் இக்கருத்தை தெரிவிக்கிறார்: "நாங்கள் (மொழிபெயர்ப்பாளர்கள்) செய்வது கலாச்சாரம் மற்றும் மொழியியல் சுற்றுச்சூழல் அமைப்பை வளப்படுத்துகிறது. அசல் உரை உண்மையில் அவ்வளவு முக்கியமில்லை. ஒரு படைப்புக்கு கிடைக்கக்கூடிய இந்த சாத்தியமான மற்றும் அழகான மறுவாழ்வு மற்றும் அந்த சுற்றுச்சூழல் அமைப்பு முழுவதும் அது ஏற்படுத்தக்கூடிய எதிரொலிகள் மற்றும் அதிர்வுகளே முக்கியம்." மொழிபெயர்ப்பை பாராட்டுவதற்கு இது மிகவும் புத்திசாலித்தனமான முறையாகும், குறிப்பாக இந்தியாவைப் போல பல்வேறு மொழிகளால் வளமான நாட்டிற்கு இது பொருத்தமானது; அவற்றில் சில மட்டுமே மொழி பெயர்ப்பாளர்களின் உழைப்பினால் அணுகக்கூடியதாக உள்ளது. மறுவாழ்வு என்ற கருத்து தற்போதைய மொழி திணிப்பு பற்றிய விவாதத்தின் பின்னணியில் மிகவும் பொருத்தமானதாகத் தெரிகிறது. தற்போது மொழிகள் நம் குறைந்த ஈடுபாட்டினால் அழிந்து வருகின்றன.

எனது இசை வகுப்பு நண்பரும் நானும் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்தபோது,



அவரது அப்பா ஒரு பள்ளியில் கற்பித்த நினைவுகளைக் குறித்து வைத்திருப்பதாக அவர் சாதாரணமாகக் குறிப்பிட்டார். எனது ஆர்வம் உடனடியாகத் தூண்டப்பட்டது, நான் மேலும் விசாரித்தபோது, ஒரு பழைய மாணவரின் ஆர்வமாகத் தொடங்கியது எழுதப்பட்ட ஒரு நிலையான நினைவுகளாக வளர்ந்திருப்பதைக் கண்டறிந்தேன். "இது அச்சிடப் படவில்லை, PDF வடிவத்தில் உள்ளது" என்று என் நண்பர் கூறினார். நான் அதைப் படிக்க விரும்புகிறேன். தயவுசெய்து அதை என்னுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறினேன். சுமார் 180 பக்கங்கள் கொண்ட அந்த நினைவுக் குறிப்பு எனது கவனத்தை ஈர்த்தது.

மதனப்பள்ளியில் உள்ள ரிஷி வேலி பள்ளியில் (RVS) அவர் கற்பித்த இருபது வருடங்களை உள்ளடக்கிய S V வெங்கடாச்சலத்தின் நினைவுக் குறிப்புகளின் முதல் அத்தியாயம், பள்ளிகளில் கற்பித்தல், கடைசி விருப்பம் என்று தலைப்பிடப்பட்டுள்ளது. 1950களில், செய்தித்தாள்களின் தகவல்படி மக்கள் மருத்துவராக, பொறியியலாளராக, விமானியாக ஆக விரும்பினார்கள்... ஆனால் ஆசிரியராக மட்டும் விரும்பவில்லை. அவர் எழுதுகிறார், 60களில் RVS பள்ளியின் மாணவர்களிடம் KFI (கிருஷ்ணமூர்த்தி பவுண்டேஷன் ஆஃப் இந்தியா) அறக்கட்டளையின் உறுப்பினர் ஒருவர் பேசிக்கொண்டிருந்தபோது, அவர்கள் வளர்ந்ததும் என்னவாக விரும்புகிறார்கள் என்று கேட்ட சம்பவம் எனக்கு நினைவிருக்கிறது. பெரும்பாலான மாணவர்கள் மேலே கூறப்பட்ட விருப்பங்களைக் குறிப்பிட்டனர், ஆனால் யாரும் ஆசிரியராக விரும்பவில்லை. ஆச்சரியப்படும் விதமாக அருண் ஜோஷி எழுந்து புன்னகையுடன், "நான் ஒரு கோமாளியாக விரும்புகிறேன்" என்றார். நாங்கள் அனைவரும் மனதார சிரித்தோம்.



இன்று நம்மிடம் சிலர் ஸ்டாண்ட்-அப் நகைச்சுவை கலைஞர்களாக இருக்கிறார்கள், எனவே அந்த வகையில் நாம் நீண்ட தூரம் வந்து விட்டோம், ஆனால் மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள், கணக்காளர்கள், ஐ.டி நிபுணர்கள் இன்னும் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். ஆசிரியர்கள் இன்னும் விருப்பங் களின் பட்டியலில் எங்கும் இடம்பெறவில்லை.

S V வெங்கடாச்சலம் அறிவியல் ஆசிரியராகப் பயிற்சி பெற தனது வற்புறுத்தும் திறன்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டியிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, 60கள் மற்றும் 70களில் ஆசிரியர்கள் மாதத்திற்கு 80–90 ரூபாய் மட்டுமே சம்பாதித்தனர். மைசூர் அரசு ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் அவரது ஆசிரியர்களில் ஒருவர் அவரிடம் கூறியது: மாணவர் கற்கவில்லை என்றால், ஆசிரியர் கற்பிக்கவில்லை. இந்த ஞானமான வார்த்தைகள் அவர் மாணவர்களால் மரியாதை மற்றும் பாசத்துடன் நினைவுகூரப்பட்ட ஒரு ஆசிரியராக மாறுவதற்கு ஊக்கமளித்தன. இருப்பினும், அவர் வெறும் புத்தகங்கள், வார்த்தைகள் மற்றும் அறிவியல் சோதனைகளின் மனிதர் அல்ல, அவர் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி முக்கியமென்று நம்பினார். அவர் ஒரு சாரணர், அவர் NCC-யில் இருந்தார், அவர் மொழிகள் மற்றும் இசையில் திறமையானவர், எப்போதும் ஒரு சவாலுக்கு தயாராக இருந்தார்; இவை RVS-ல் உள்ள அவரது மாணவர்களுக்கு அவர் புகுத்த முயன்ற மதிப்புகள். வகுப்பறைகளில் சிறிய எண்களின் முக்கியத்துவம், இயற்கை சூழல், சாகச உணர்வு மற்றும் ஆராய்ச்சியின் முக்கியத்துவம், மேலும் இயற்கையில் மகிழும் திறன் என இவை அனைத்தையும் பற்றி அவர் பேசுகிறார். அவர் பதிவு செய்யும் மிக அழகான விஷயங்களில் ஒன்று RVS-ன் அஸ்தாச்சல் நடைமுறை. முதல்வர் F G பியர்ஸ், தனது முந்தைய காலத்தில் குவாலியரில் உள்ள சிந்தியா பள்ளியின் முதல்வராக இருந்தபோது மேற்கொண்ட அந்த மாலைச் சூரிய அஸ்தமனத்தைக் கவனிக்கும் பழக்கத்தை இங்கேயும் கொண்டு வந்தார். RVS-ல் ஒவ்வொரு மாலையும் ரிஷி கொண்டா மலைத்தொடருக்குப் பின்னால் சூரியன் மறைவதைப் பார்க்க அனைவரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அமைதியாகக் கூடினர். பின்னணியில் ஹார்ஸ்லி ஹில்ஸ் இருந்தன. சூரிய அஸ்தமனத்தின் போது மலையில்... எவ்வளவு அமைதி, எவ்வளவு அழகு.

குழந்தைகள் இயல்பாகவே ஆர்வமாக இருப்பார்கள்... கேள்வி களைக் கேட்க அவர்களை ஊக்குவிக்க ஆசிரியருக்கு அவர்களின் ஆர்வம் உதவும். அவர்களை அடக்க முயற்சி செய்யக்கூடாது என்று வெங்கடாசலம் எழுதும்போது, அவர் புதிதாக எதையும் சொல்லவில்லை. ஆனால் அவர், இயற்கையின் உண்மைகளைக் கவனிக்க அவர்களை வெளியில் அழைத்துச் செல்லும் பாசமுள்ள மற்றும் மகிழ்ச்சியான ஆசிரியர், குழந்தைகளால் நிச்சயமாக விரும்பப்படுவார் என்று சேர்க்கும்போது, அது அனைவரையும் ஊக்குவிக்க வேண்டும்.

நம் அனைவருக்கும் பகிர்ந்து கொள்ள கதைகள் உள்ளன, மேலும் நம் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுக்கு நாம் விட்டுச் செல்லக்கூடிய சிறந்த பாரம்பரியங்களில் ஒன்று, படங்கள், வார்த்தைகள், பதிவுகள் போன்ற எந்த வழியிலும் நாம் வாழ்ந்த உலகங்களைப் பற்றிய ஒரு கண்ணோட்டமாகும். அவை எந்த நேரத்திலும், எப்போதும் ஆறுதல், அடைக்கலம் மற்றும் ஊக்கத்தின் ஆதாரமாக இருக்கும்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## மணிப்பாலில் செயற்கைக் கை, கால் முகாம்

RC மணிப்பால், RID 3182, தன்னுடைய மூத்த உறுப்பினர் பிரேமலீலா-வின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் இரண்டு நாள் செயற்கைக் கை, கால் பொருத்தல் முகாமை நடத்தியது. இதில், சென்னை, பெல்காம், பாகல்கோட், தாவணகெரெ போன்ற இடங்களிலிருந்தும், உடுப்பி மாவட்டம் முழுவதிலிருந்தும் வந்திருந்த 91 பேருக்கு இனலி அறக்கட்டளை வடிவமைத்த செயற்கைக் கை 91 பேருக்குப் பொருத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கூட்டாளர்களாகச் செயல்பட்டோர், மணிப்பால் மகிளிர் சமாஜ், இனலி அறக்கட்டளை, IMA உடுப்பி காரவலி, IMA UK பெண் மருத்துவர்கள் பிரிவு, RC பூனா டௌன்-டவுன்.■



*செயற்கை முட்டு பொருத்துதல் முகாம் நடைபெற்று வருகிறது.*



*மின் பராமரிப்பு குறித்த பயிற்சி அமர்வு நடந்து வருகிறது.*

## மின் பராமரிப்புப் பயிலகம்

RC பெங்களூர் உத்யோக், RID 3192, தன்னுடைய ரோட்டரிக் கட்டடத்தில் நடத்திய இரண்டு நாள் பயிலகத்தில் 20 தொழில்துறைப் பணியாளர்களுக்கு மின் பராமரிப்பில் பயிற்சியளிக்கப்பட்டது. இங்கு நிறுவப்பட்ட அதிநவீனத் தொகுப்பில் வழங்கப்பட்ட இந்தப் பயிலகம் தங்களுடைய திறன்களை மேம்படுத்தியதாகவும், தன்னம்பிக்கையை வளர்த்ததாகவும் இந்தப் பணியாளர்கள் தெரிவித்தார்கள்.■

## கொல்கத்தாவில் நடமாடும் புற்றுநோய் கண்டறியும் மையம்

RI இயக்குனர் அனிருதா ராய் சவுத்ரி நடமாடும் புற்றுநோய் கண்டறியும் மையத்தை தொடங்கி வைத்தார். இந்த பேருந்து நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் புற்றுநோய் மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. $96,887 GG திட்டத்தை RC கல்கத்தா (RID 3291), RC டுபோ, டுபோ தெற்கு (ஆஸ்திரேலியா) மற்றும் சிங்கப்பூர் ஆகியவற்றுடன் இணைந்து வழிநடத்தியது.

மருத்துவ பேருந்து மேற்கு வங்கம் முழுவதும் கிராமங்களில் சிறப்பு முகாம்கள் நடத்த பயன்படுத்தப்படும். PRIP சேகர் மேத்தா, DG கிருஷ்ணேந்து குப்தா, PDG ஹிரா லால் யாதவ் மற்றும் DRFC சுதீப் முகர்ஜி விழாவில் கலந்து கொண்டனர்.




*திறப்பு விழாவில் RI இயக்குனர் அனிருதா ராய் சவுத்ரி, PDGs ஹிரா லால் யாதவ், சுதீப் முகர்ஜி மற்றும் DG கிருஷ்ணேந்து குப்தாவுடன்.*



*நிகழ்வில் PDG JKN பழனி (நடுவில்), DGE V சுரேஷ் (இடது), RC வேலூர் கோல்டன் சிட்டி தலைவர் N பாஸ்கரன் ஆகியோருடன்.*

## பெண்களுக்கான தையல் இயந்திரங்கள்

மஞ்சூர்பெட் கிராமத்தில் RC வேலூர் கோல்டன் சிட்டி, RID 3231, நடத்திய வெளிச்சம் என்ற திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற 105 பெண்களுக்கு, ரூ.12 லட்சம் மதிப்புள்ள தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் DG ராஜன்பாபு. பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு PDG JKN பழனி சான்றிதழ்களை வழங்கினார். DGE V சுரேஷ், DGND T சிவக்குமார் ஆகியோரும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.■




## RID 3100

### RC மொராதாபாத் பாரத்

ரோட்டரியன்கள் மிலான் விகாரில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் வசிக்கும் 120 பேருடைய பயன்பாட்டுக்காக ஓர் LED தொலைக்காட்சி, குளிர் ஆடைகள், இனிப்புகள், நொறுக்குத் தீனிகளைக் கொடையளித்தார்கள்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3142

### RC கல்யாண் சிட்டி

ரயாடெ பிம்ப்லொலி-யில் உள்ள அனுமன் ஆலயத்தில் மிகப் பெரிய மருத்துவ முகாம் ஒன்று நடைபெற்றது. இங்கு மருத்துவர்களின் அறிவுரைகள் மற்றும் BP, சர்க்கரை, ஹீமோகுளோபின், BMD, விழித்திரைப் பரிசோதனைகள், ECG ஆகியவை வழங்கப்பட்டன. தேவையுள்ளோருக்கு மருந்துகள் வழங்கப்பட்டன.

## RID 3150

### RC ஹைதராபாத் மிட் டவுன்

பெண் குழந்தைகளுக்கு ஆற்றலளிக்கும் திட்டத்தின்கீழ், நம்பள்ளி சரோஜினி நாயுடு வனிதா மகா வித்யாலயாவில் ஐந்து மாணவர்களுக்கு மிதிவண்டிகள் கொடையளிக்கப் பட்டன.






## RID 3182

### RC மணிப்பால் டவுன்

உறுப்புக் கொடையை முன்னிறுத்தும் நோக்கத்துடன், உடுப்பியின் பத்லா பள்ளியில் 200 மாணவர்களுக்கு லைட் ஹவுஸ் என்ற திரைப்படத்தைத் திரையிட்டுக் காண்பிக்க உதவினார் முன்னாள் தலைவர் கணேஷ் நாயக்.

## RID 3141

### RC மிரா ரோட்

இந்தச் சங்கத்தின் 30வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற இலவசக் கண் புரை அறுவைச் சிகிச்சைகளால் 30 பேர் பலன் பெற்றார்கள். இந்தத் திட்டத்திற்கு ஃபேப்-டெக் வொர்க்ஸ் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் தனியார் நிறுவனம் தாராளமாக நிதியளித்தது.





## RID 3231

### RC குடியாத்தம்

வயிறு தொடர்பான குறைபாடுகளுக்குச் சிகிச்சை அளிக்கும் சிறப்பு முகாமில் பங்கேற்ற 150 நோயாளிகளை GEM மருத்துவமனை மருத்துவர்கள் பரிசோதித்தனர். இதில் 24 பேர் கூடுதல் சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சியில் PDGகள் JKN பழனி, K ஜவாரிலால் ஜெயின், KMG கல்வி நிறுவனங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

## RID 3203

### RC ஈரோடு திண்டல்

ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரியில் RC ஈரோடு சென்ட்ரல் ஆதரவுடன் வண்ணமயமான ரஷ்ய நடனத் திருவிழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் DG சுரேஷ் பாபு, DGE B தனசேகர், இந்திய-ரஷ்யப் பண்பாடு மற்றும் நட்புக் கழகப் பொதுச் செயலாளர் P தங்கப்பன் ஆகியோர் பங்கேற்றனர்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# உங்களுடைய சிறந்த திட்டங்களை ரோட்டரி நியூஸ்-இல் இடம்பெறச்செய்யுங்கள்

உள்ளூர்ச் சமூகத்துக்குப் பலன் தரும் வகையில், மக்களுடைய வாழ்க்கைகளை மாற்றும் வகையில் நன்கு திட்டமிடப்பட்ட, கவனத்துடன் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை நடத்தும் ரோட்டரியன்கள், ரோட்டரி சங்கங்கள் அல்லது மாவட்டங்கள், அவை மற்ற ரோட்டரி சங்கங்களுக்குத் தெரியவேண்டும் என்று விரும்புவது இயல்புதான். உங்களில் பலர் இதற்குச் சிறந்த வழியாக எண்ணுவது, 1.5 லட்சத்துக்கு மேற்பட்ட ரோட்டரியன்கள், சுமார் 1,000 பொது நூலகங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவர்களுடைய காத்திருத்தல் அறைகள், மருந்தகங்கள் போன்றவற்றுக்குச் செல்கிற, மாதந் தோறும் 4 லட்சம் வாசகர்களால் படிக்கப்படுகிற ரோட்டரி நியூஸில் அந்தத் திட்டத்தைக் காட்சிப்படுத்துவது.

முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துவதில் ரோட்டரியன்கள் செலவிடும் உழைப்பும் பணமும் உங்கள் இதழால் போதுமான அளவு பேசப்படவேண்டும் என்பதை ரோட்டரி நியூஸ் ஏற்றுக்கொள்கிறது. ஆனால், எங்களுடைய பிரச்சனை, பல நேரங்களில் இது போன்ற திட்டங்களைப்பற்றி எங்களுக்கு ஏதும் தெரிய வருவதில்லை.

அதனால், உங்கள் தகவல் தொடர்பை மேம்படுத்துவதற்கு ஓர் அழைப்பு, இதோ: உங்களுடைய மிகப் பெரிய திட்டங்களைப்பற்றி எங்களுக்குச் சொல்லும் பொறுப்பை உங்கள் சங்கத்தில் ஒருவரிடம் ஒப்படையுங்கள். திட்டத்தின் வெவ்வேறு நிலைகளைத் தயவுசெய்து ஆவணப்படுத்துங்கள் அல்லது ஒரு தகவல் தாளைத் தயாரியுங்கள், அப்போது, இதழியலின் அடிப்படை அளவுகோல்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

- இந்தத் திட்டம் எப்போது சிந்திக்கப்பட்டது.
- இந்தத் திட்டம் ஏன் திட்டமிடப்பட்டது (உள்ளூர்ச் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கா?). இந்தத் தேவையை விவரியுங்கள்.
- இதற்கான பணம் எப்படித் திரட்டப்பட்டது? அது ஒரு TRF நல்கையா?
- இதற்கெனப் பணம் திரட்டுவது ஒரு பிரச்சனையாக இருந்ததா? அரசு அனுமதிகள் தேவைப்பட்டனவா? ஆம் எனில், அவற்றை எப்படிப் பெற்றீர்கள். பிற சவால்கள், தீர்வுகளைக் கண்டறிதல்.
- திட்டம் நிறைவுசெய்யப்பட்ட நேரம், வெவ்வேறு நிலைகள்.
- சில மனித ஆர்வக் கதைகளுடன் இதைத் தொடர்புபடுத்துங்கள்... பலன் பெற்றோருடைய படங்கள், அவர்களுடன் உரையாடல்.
- திட்டம், அதனால் பலன் பெற்றோருடைய நல்ல, செயல்தன்மை கொண்ட புகைப்படங்களை எடுங்கள், அவற்றை உயர் பகுப்புத்திறனில், உண்மை அளவில் அனுப்புங்கள்.
- இந்தத் திட்டத்தில் பேரார்வத்துடன் ஈடுபட்ட ரோட்டரியன்களைச் சிறப்பித்துக் காண்பியுங்கள், அவர்கள் சங்கத் தலைவர்களாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை.
- பெண்கள், இளம் உறுப்பினர்களைக் கூடுதலாகப் பெற ரோட்டரி விரும்புகிறது என்பதால், இந்தக் குழு செய்த திட்டங்களை எங்களுக்கு அனுப்புங்கள்.

இவை அனைத்தும் தயாரானதும், உங்கள் திட்டத்தைப் பார்க்க எங்களை அழையுங்கள். நாம் மாதம் ஓர் இதழ்தான் வெளியிடுகிறோம் என்பதையும், இந்த இடத்துக்கு மிகுந்த தேவை உள்ளது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். இதழுக்கு உங்களுடைய மிகச் சிறந்த திட்டத்தைக் கொடுங்கள், போர்வைகள், புத்தகங்கள் அல்லது இருக்கைகள் வழங்குதல் போன்ற எல்லா வகைச் செயல்பாடுகளையும் அனுப்பாதீர்கள்.




நிறைவாக, பல நூறு அல்லது பல ஆயிரம் டாலர்கள் செலவாகிற, பன்னாட்டு நல்கைகளைக் கொண்ட மிகப் பெரிய திட்டங்களைமட்டும் நாங்கள் எதிர்பார்ப்பதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். தனித்துவமான யோசனையைக் கொண்ட, உள்ளூர்ச் சமூகத்துக்கு ஓர் எளிய, நேரடியான தீர்வை அளிக்கிற ஒரு சிறிய திட்டத்தைக்கூட நாங்கள் வரவேற்கிறோம்.

உங்கள் ஆலோசனைகளை அனுப்பவேண்டிய முகவரிகள்:

ஆசிரியருடைய மின்னஞ்சல் முகவரி:
**rushbhagat@gmail.com**

Rotary News Editorial Dept
**rotarynewsmagazine@gmail.com**

ஆசிரியர்

# District Wise TRF Contribution

Source: RI South Asia Office

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation.

As on February, 2025


(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| 2981 | 49,979 | 13,443 | 0 | 38 | 63,460 |
| 2982 | 37,528 | 12,021 | 10,421 | 66,817 | 126,786 |
| 3000 | 39,725 | 2,992 | 1,000 | 295,336 | 339,053 |
| 3011 | 63,809 | 6,262 | 35,361 | 954,366 | 1,059,798 |
| 3012 | 9,973 | 151 | 1,500 | 932,559 | 944,183 |
| 3020 | 96,824 | 28,314 | 86,977 | 77,570 | 289,685 |
| 3030 | 40,974 | 4,983 | 14,563 | 101,666 | 162,186 |
| 3040 | 4,037 | 237 | 0 | 28,598 | 32,872 |
| 3053 | 47,993 | 300 | 0 | 0 | 48,293 |
| 3055 | 40,685 | 4,121 | 2,071 | 61,065 | 107,943 |
| 3056 | 19,041 | 2,056 | 60 | 133 | 21,290 |
| 3060 | 155,088 | 6,388 | 3,499 | 181,089 | 346,064 |
| 3070 | 22,692 | 1,572 | 0 | 0 | 24,264 |
| 3080 | 18,492 | 7,964 | 17,384 | 9,561 | 53,401 |
| 3090 | 15,851 | 109 | 18,942 | 0 | 34,902 |
| 3100 | 29,005 | 4,440 | 0 | 34,765 | 68,210 |
| 3110 | 16,562 | 1,019 | 3,129 | 237,365 | 258,076 |
| 3120 | 55,262 | 1,211 | 8,337 | 55,898 | 120,708 |
| 3131 | 481,520 | 20,486 | 129,920 | 843,969 | 1,475,895 |
| 3132 | 48,515 | 2,565 | 23,339 | 43,476 | 117,895 |
| 3141 | 397,998 | 33,429 | 137,000 | 2,322,162 | 2,890,589 |
| 3142 | 391,335 | 56,472 | 50,060 | 402,878 | 900,744 |
| 3150 | 121,640 | 27,344 | 142,486 | 746,489 | 1,037,959 |
| 3160 | 19,270 | 3,246 | 1,000 | 5,787 | 29,302 |
| 3170 | 44,559 | 21,647 | 2,000 | 215,213 | 283,419 |
| 3181 | 96,097 | 16,491 | 50 | 0 | 112,638 |
| 3182 | 84,699 | 3,601 | 12 | 22,881 | 111,193 |
| 3191 | 65,008 | 4,378 | 158 | 133,396 | 202,941 |
| 3192 | 114,475 | 5,317 | 23,500 | 133,670 | 276,962 |
| 3201 | 74,686 | 30,816 | 30,681 | 613,056 | 749,238 |
| 3203 | 47,965 | 12,789 | 16,034 | 67,175 | 143,963 |
| 3204 | 33,072 | 13,425 | 47,001 | 11,770 | 105,267 |
| 3211 | 25,639 | 3,401 | 0 | 11,212 | 40,252 |
| 3212 | 285,875 | 19,289 | 85,000 | 118,034 | 508,199 |
| 3231 | 15,978 | 7,069 | 66,592 | 43,132 | 132,771 |
| 3233 | 22,100 | 19,318 | 2,571 | 372,233 | 416,221 |
| 3234 | 112,373 | 30,079 | 70,746 | 875,563 | 1,088,762 |
| 3240 | 183,266 | 29,483 | 50,000 | 14,370 | 277,120 |
| 3250 | 142,611 | 5,331 | 6,300 | 146,506 | 300,747 |
| 3261 | 3,632 | 268 | 8,335 | 10,878 | 23,113 |
| 3262 | 73,780 | 2,247 | 1,307 | 8,700 | 86,035 |
| 3291 | 119,535 | 12,628 | 168,500 | 146,568 | 447,232 |
| 3220 Sri Lanka | 60,557 | 4,326 | 4,052 | 23,820 | 92,755 |
| 3271 Pakistan | 9,750 | 40,036 | 0 | 10,500 | 60,286 |
| 63 (former 3272)* | 2,578 | 1,962 | 0 | 0 | 4,539 |
| 64 (former 3281)* | 6,259 | 2,916 | 1,000 | 1,050 | 11,225 |
| 65 (former 3282)* | 922 | 1,071 | 0 | 0 | 1,994 |
| 3292 | 79,434 | 24,121 | 90,026 | 120,097 | 313,679 |

*** Undistricted**



# பத்திரிகைத்துறையின் மாறும் சூழல்




TCA ஸ்ரீனிவாச ராகவன்


கடந்த 45 ஆண்டுகளாக நான் ஒரு பத்திரிகையாளராக இருக்கிறேன். சாதாரண பத்திரிகையாளர் அல்ல, பொருளாதார பத்திரிகையாளர்.

கவனிக்கவும், வணிக பத்திரிகையாளர் அல்ல, பொருளாதார பத்திரிகையாளர். ஏன் இந்த முழுக்க சலிப்பூட்டும் துறையை தேர்வு செய்தேன் என்று ஒருவர் என்னிடம் கேட்டார். நான் இதை முன்பு யோசித்ததே இல்லை. ஆனால் யோசித்தபோது விரைவில் தெளிவாகி விட்டது: (அ) பொருளாதாரம் தெரிந்த பத்திரிகையாளர்கள் மிகக் குறைவாக இருந்தார்கள்; (ஆ) பொருளாதாரம் தெரிந்தவர்களில் ஆங்கிலம் சரிவர எழுதக்கூடியவர்கள் மிகக் குறைவாக இருந்தார்கள்; (இ) இந்த இரண்டு திறன்களும் கொண்டவர்களில் பத்திரிகையாளராக இந்தக் குறைவான சம்பளத்திற்கு வேலை செய்ய யாரும் விரும்பவில்லை. நான் ஒரு பறக்கக்கூடிய பன்றி போல அரிதானவனாக இருக்க, பத்திரிகைகள் எனக்கு உடனடியாக வேலை கொடுத்தன. சம்பளம் பெரிதாக இல்லாவிட்டாலும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பொருளாதாரத்தைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதால் அவர்கள் என்னை வேலையில் பெரும்பாலும் தொந்தரவு செய்யமாட்டார்கள். எனக்கு எந்த விஷயத்திலும் எழுதுவதற்கான வாய்ப்பு இருந்தது. நான் போதிய தகவல் இல்லாமல் எழுதினாலும் ஆங்கிலம் சரியாக இருந்தால், பொருளாதார சொற்களை சில இடங்களில் சேர்த்துவிட்டால் போதும், நான் பெருமிதத்துடன் நகரலாம். அதற்காக நான் முட்டாள்தனமாக எழுதவில்லை. என் அப்பா, ஒரு பொருளாதார நிபுணர் இல்லாவிட்டாலும், என்னை ஒழுங்காக வைத்திருக்கப் போதுமான பொருளாதார அறிவு அவருக்கு இருந்தது. மேலும், என்னுடைய துல்லியமான காதலி எப்போதும் என் எழுத்தில் உள்ள இலக்கணப் பிழையையும் ஒழுங்கற்ற வாக்கியத்தையும் விமர்சிப்பார்.

ஆனால் நல்லதோ மோசமானதோ எதுவும் நிலைக்காது. 1991ம் ஆண்டு இந்திய பொருளாதார மாற்றங்கள் காரணமாக, பத்திரிகைத்துறைக்கு புதிய தலைமுறை மாணவ, மாணவிகள் அதிகமாக வரத் தொடங்கினர். அவர்கள் பொருளாதாரத்தைப் பற்றி நிறைய அறிந்திருந்தது மட்டுமல்லாமல், ஆங்கிலத்திலும் திறமையானவர்களாக இருந்தனர். அதிர்ஷ்டவசமாக, அவர்கள் எனக்கு போட்டியாக இல்லை, ஏனென்றால் அவர்கள் அனைவரும் என்னை விட 10–12 வயது இளையவர்கள். ஆனால் அவர்கள் கூர்மையானவர்கள், அதாவது நான் என் அப்பா மற்றும் மனைவியாகிவிட்ட என் முன்னாள் காதலி மட்டுமல்லாமல், பிரகாசமான கண்களும் சுறுசுறுப்பும் கொண்ட இளைஞர்களையும் இப்போது எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒட்டுமொத்தமாக, என் தொழில் வாழ்க்கை கொஞ்சம் கடினமாக மாறியது, ஏனென்றால் இளைஞர்கள் மூத்தவர்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை. அவர்களின் மரியாதையை நீங்கள் சம்பாதிக்க வேண்டும்."

சில வருடங்களுக்குப் பிறகு, 1990-களின் நடுப்பகுதியில், தொலைக்காட்சி செய்தி வந்தது. அது ஆரம்பத்தில் கொஞ்சம் தடுமாற்றத்துடன் தொடங்கியது, ஆனால் 1990-களின் இறுதியில் அதன் தாளத்தையும் பாணியையும் கண்டறிந்தது, இது அடிப்படையில் விறுவிறு, பரபர, நன்றி என்பது போல இருந்தது. 1990-களின் தொடக்கத்தில் அச்சு ஊடக பத்திரிகையாளர்களான இளைஞர்கள் தொலைக்காட்சி செய்திகளால் ஈர்க்கப்பட்டனர். அவர்கள் கோடிக்கணக்கான பார்வையாளர்களுக்குத் தெரிவதுடன், மிகப்பெரிய தொகையை சம்பளமாகவும் பெற்றனர். அதற்கு அவர்களுக்கு ஒரு நல்ல உச்சரிப்பு மற்றும் அழகான தோற்றம் இருந்தால் போதும். அந்த நாட்களில், இப்போது இருப்பது போல் தொடர்ச்சியான கூச்சலாக செய்திகள் இல்லை. செய்தியாளர்கள் வெளியில் சென்று நடப்பதைப் பதிவு செய்வார்கள். கேமராக்கள் அந்த காட்சிகளை படம் பிடித்தன. ஆசிரியர்கள் இறுதியாக அதை தயாரிப்பார்கள். தொகுப்பாளர்கள் மென்மையாக பேசுவார்கள். இதனால் அதிக செலவானாலும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஆனால் இது  கேமரா முன் நின்றால் பனி போல உறைந்துபோகும் என் மாதிரி எழுத்தாளர்களுக்கு இடம் தரவில்லை.

பின்னர், ஒரு தசாப்தத்திற்குப் பிறகு, மற்ற சமூக ஊடகங்களுடன் சேர்ந்து யூடியூப் வந்தது. இது மெதுவாக தொடங்கினாலும், கடந்த மூன்று வருடங்களில் அது வெடித்துள்ளது. இது தொழில்முறை பத்திரிகையின் மரண மணியை ஒலித்துள்ளது, ஏனென்றால் நல்லதை கெட்டதிலிருந்து வடிகட்டுவதற்கு இதில் எந்த வழிமுறையும் இல்லை. என் நாயினால் முடிந்தால், அதுவும் ஒரு யூடியூப் வீடியோவை உருவாக்கி பதிவேற்றம் செய்யும், அதை நீங்கள் செய்தியாகப் பார்க்கலாம். நல்ல தகவல்கள் சில இருக்கின்றன, ஆனால் அவை மொத்த உள்ளடக்கத்தில் வெறும் பத்து சதவீதம் தான். கேள்வி என்னவென்றால், அந்த பத்து சதவீத நல்ல உள்ளடக்கத்திற்காக மீதமுள்ள கோடிக்கணக்கான அற்பமான உள்ளடக்கத்தை பொறுத்துக்கொள்வதா என்பது தான். செயற்கை நுண்ணறிவு மேலும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றது. முன்னர் நீங்கள் ஒரு செய்தியின் ஒரு பகுதியை மட்டும் மறைக்கலாம். ஆனால் இப்போது முற்றிலும் போலியான ‘உண்மையை’ உருவாக்கலாம்.


RJ MANTRA ENGLISH SCHOOL
IDHAYAM RAJENDRAN CHARITIES, AFFILIATED TO CISCE-TN 082.
VIRUDHUNAGAR, TAMILNADU.
RJ
MANTRA
LEARN THE MAGIC OF LEARNING
ADMISSIONS OPEN 2025-2026
From Practice Fields
To National Spotlight
The Journey of Mantra's Champions
For More Information 9489067789 | 8903660689 www.rjmantra.com

ADVT.

Regd with RNI TNTAM/2018/76372.

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40



Rotary District 3212



THE MAGIC OF ROTARY

Rotary club of Virudhunagar

# VIGNANA RATHAM

Science made easy

CROSSING OVER **751** PROGRAMS ALL OVER TAMILNADU




## SUCCESSFUL JOURNEY OF SCIENCE ON WHEELS

As on 04.03.2025

Total No. of Schools Visited **727**

Total No.of Colleges Visited **25**

Total No.of Students Explored **2,00,882**

Total No.of Days Travelled **497**

Total No.of Teachers Participated **8,852**

Total No.of Kilometres Travelled **40,829**

## Empowering Students Towards Great Citizens For Future

The idea of Vignana Ratham is to kindle student's interest towards science. It is to aid students in understanding the magic of science through creative and fun-filled experiments. RID 3212 wondered how good it would be to take the best brains to institutions in all corners of Tamil Nadu. As a result, a tie-up was made with Parikshan Trust of an Indian Scientist, Dr. Pasupathy. Mr.Arivarasan, Mr. Naveen Kumar and Mr. Satheesh were assigned to travel in Vignana Ratham and meet students of various schools every day. Numerous students benefit out of this programme and we believe that we have seeded the fervor required to bring out a Scientist from every institution we visited.

LEKHA ads/Apr 25/ Rotary/BW

IDHAYAM

PROMISE OF HEALTH AND HAPPINESS

**Do you want**


to have Vignana Ratham travelling to a school in your Town / City / District? We would love to partner with you in this mission.

**GET IN TOUCH WITH US**

**94422 48586**

PARIKSHAN CHARITABLE TRUST

Empowering society through Science...



Project Chairman Rtn. R.Vadivel

Project Concept Dr. Pasupathy

ADVT.